

கல்கி
KALKI 13-8-89 ரூ 1.20

சென்றவாரம் கேள்வி பதில் பகுதியில்,
''வரிசையாக ராஜினாமா செய்த ஐ. ஏ. எஸ் அதிகாரிகள் யாருமே
தமது ராஜினாமாவுக்கான காரணங்களை மனம் திறந்து
கூறவில்லையே'' என்று குறைப்பட்டுக் கொண்டார் தராசு. இதோ,

மனம் விட்டுப் பேசுகிறார் கங்கப்பா!



1977ல் அ. இ. மு. க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை எட்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ராஜினாமா லிஸ்டில் கடைசியாகச் சேர்ந்திருப்பவர் கங்கப்பா.

தமது பெசண்ட் நகர் வீட்டில், நண்பர்களோடு ஆதி சங்கரரைப் பற்றியும், தெலுங்கு மொழி தோன்றிய விதம் குறித்தும் பேசிக் கொண்டிருந்த கங்கப்பாவை நமது நிருபர் சந்தித்தார். அடிக்கடி சந்தேகப் பார்வையுடன் தோன்றி மறையும் வெள்ளையுடை போலீஸ் அதிகாரிகள் தெருவில் நடமாடிக் கொண்டிருக்க, தாம் பேசும் டெலிபோன் பேச்சுக்கள் டேப் செய்யப்படுகின்றன என்று தெரிந்தும், எந்தவித பதற்றமுமில்லாமல் தெளிவாகப் பேசினார் கங்கப்பா.

''ஐ. ஏ. எஸ். சர்வீஸில் எனக்குப் பதினைந்து வருடங்கள் முடிந்து விட்டன. 1979 வரை எனக்கு எந்தவித பிரச்னையும் இல்லை. 1979ல் அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் கமிஷனராக இருந்தேன். மந்திரி எஸ். டி. சோமசுந்தரம் அவர்களது இலாகா அது. அவரது யோசனையின் பேரில் தஞ்சாவூர் கலெக்டராகப் போட்டார்கள். அப்போதுதான் பிரச்னைகள் ஆரம்பமாயின. இயல்பாகவே மிக ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையுடையவன் நான். கும்பகோணத்தில் மகாமகத்தை எந்த வித தடங்கலும் இல்லாமல் வெற்றிகரமாக நடத்தி முடித்தேன். ஆஸ்திகப் பெரு மக்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அப்போது ரெவின்யூ போர்டிலிருந்த திரு இரவியம் அவர்கள் கும்பகோணம் வந்திருந்தார்கள். சென்னைக்குக் கிளம்பும்போது என்னிடம், 'கங்கப்பா, ஏற்கனவே விடுதலை பத்திரிகையில் 'கங்கப்பா கலெக்டரா, மடாதிபதியா?' என்று கேட்டு எழுதியிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் தஞ்சை பெரிய கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள வேண்டாம்' என்று கூறினார். 'என்ன ஸார் இது! மாவட்டக் கலெக்டராக இருந்துகொண்டு எப்படிக் கலந்து கொள்ளாமல் இருக்க முடியும்? ஸாரி ஸார், நான் கலந்துகொள்வேன்' என்று கூறிவிட்டேன். அதன் படியே கலந்து கொண்டு கும்பாபிஷேகம் வெற்றிகரமாக நடக்க உதவி செய்தேன்.

அப்போதுதான் தஞ்சை பாராளு மன்றத் தொகுதியில் இந்திரா காந்தி போட்டியிடுவதாக இருந்தார். ஏற்கனவே சென்னையிலும், மதுரையிலும் அவரைக் கொலை செய்யும் நோக்கத்துடன் தாக்கியவர்கள் தஞ்சையிலும் இந்திரா வேட்பு மனு தாக்கல் செய்ய வரும்போது கொலை செய்ய வேண்டும் என்ற சதித் திட்டத்தோடு காத்திருந்தனர். அதைக் கண்டுபிடித்துச் சதித் திட்டத்துக்கு உடந்தையானவர்களைக் கைது செய்தேன். அரசாங்கத்தில் பெரிய பொறுப்பில் உள்ள ஒருவரின் ஆசியோடு (பெயரைச் சொல்கிறார் கங்கப்பா அதிர்ச்சி யடைகிறோம்) இந்தச் சதித் திட்டம் ஏற்பாடாகி இருந்தது. இந்தச் சதித் திட்டத்தைத் தடுத்ததால் சிலரது வெறுப்பிற்கு ஆளானேன்.

இதற்கிடையில் கர்நாடகம், கோலார் மாவட்டத்தில் உள்ள எங்களது குல தெய்வமான ஹனுமார் கோயிலுக்கு இரண்டு பஞ்சலோக விக்ரகங்கள் செய்வதற்கு சுவாமிமலையில் ஆர்டர் கொடுத்திருந்தோம். அந்தக் கோயிலுக்கு நான்தான் பரம்பரை தர்மகர்த்தா. மேலும் ஒரு கமிட்டி அமைத்து, சில கோயில் வேலைகளைக் கவனித்து வந்தோம். அந்தக் கமிட்டிக்கும் நான்தான் தலைவன். எவனோ ஒருவன் 'கலெக்டர் சிலைகள் செய்கிறார் என்றும் அதற்கு முறைகேடாகப் பணம் பெற்றார்' என்றும் தலைமை செயலாளருக்குப் புகார் எழுதிவிட்டான். முறைப்படி அந்தப் புகாரை எனக்குஅனுப்பி விளக்கம் கேட்க வேண்டும். ஆனால் அந்தப் புகாரை அப்போது தலைமைச் செயலாளராக தற்காலிகமாக பணிபுரிந்த பணிக்கர் போலீஸாரிடம் கொடுத்து விசாரிக்கச் சொல்லிவிட்டார். மேலும் நான் எப்படி கோயில் கமிட்டியின் தலைவராக இருக்கலாம் என்றும் விளக்கம் கேட்கப் பட்டது. எனக்கும் தலைமைச் செயலாளர்களாக இருந்தவர்களுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்து

மன விரோதத்தை வளர்த்து விட்டது. கடைசியில், நான் கோயில் கமிட்டியின் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தேன். போலீஸார் கோலார் மாவட்டத்துக்குப் போய் விசாரணை நடத்தியும், பிறகு பல வேறு இடங்களில் விசாரணை நடத்தியும் என்மீதுகூறப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று கூறிவிட்டார்கள்.

அடுத்தபடி என்னை வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டராக மாற்றினார்கள். வேலூர் கோட்டையில் ஜலகண்டேசுவரர் சிலையை வைப்பதில் நான் எவ்வளவு உதவியாக இருந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். (கல்கியில்தான் முதல் ரிப்போர்ட் வந்தது.) ஒரு அரசாங்க ஊழியனாக இருந்து கொண்டு நான் மக்கள் மத்தியில் நல்ல பெயரெடுப்பது தலைமைச் செயலகத்தில் உட்கார்ந்திருக்கும் மற்ற அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், அவருக்கு இந்த விஷயத்தை முடிப்பதில் பங்கு கொடுக்காததால் அதிருப்தியுற்றார் என்று கேள்விப்பட்டேன். ஜலகண்டேசுவரர் சிலையை வைக்க நான் உதவி செய்தபோது 'இதனால் வகுப்புக் கலவரங்கள் வரும். கலெக்டரின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்று தலைமைச் செயலாளர் உத்தரவிட என்னால் ஒரு நாள் வீட்டை விட்டு எங்கும் போக முடியவில்லை என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

பிறகு முதன் முதலில் 1980ல் வறட்சி நிலைமை பற்றி அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி வைத்ததற்காக முதல்வரால் கண்டிக்கப்பட்டேன்.

இப்படியாக எனக்கு மூத்த அதிகாரிகளுடனும், ஆட்சியில் உள்ள அரசியல்வாதிகளுடனும் மனக் கசப்பு வளர்ந்து கொண்டே வந்தது. பிறகு, சிட்கோ மானேஜிங் டைரக்டராகப் போட்டார்கள். பிறகு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர் பதவி. அந்த அலுவலகத்தில் எனக்கு உட்கார தனி அறை கூடக் கிடையாது. இடையில் அக்ரோ இன்ஜினியரிங் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் எம்.டி.யாக நியமித்தார்கள். இரண்டு மாத காலம் அந்தப் பதவியில் இருந்தபோது நான் பண்ணிய ஒரே அப்பாயிண்ட்மெண்ட், ப்யூன் ஒருவரை அமர்த்தியதுதான். அதுவும் முறைப்படிதான் நடந்தது. ஆனால் அமைச்சர் ஒருவர், '1000 ரூபாய் சம்பளத்தில் ஒருவருக்கு வேலை போட்டுத் தந்தேன்' என்கிறார். சுத்தப் பொய்.

மேற்கண்ட விஷயங்களால் எனக்கேற்பட்ட மனக் கசப்பே ராஜிநாமாவுக்குக் காரணங்கள்.''

கங்கப்பா இனிமேல் விவசாயத்தில் இறங்கப் போகிறாராம். கங்கப்பாவின் சொந்த ஊர் கர்நாடகமாநிலம் தும்கூர் மாவட்டத்தில் இருக்கிறது. இவரது உறவினர்கள் கர்நாடக, இ. காங்கிரஸ் அரசியல்வாதிகள். தமக்கு அரசியலில் விருப்பமில்லை என்கிறார் கங்கப்பா. ''கடவுள் சேவை செய்வதையே பெரிதும் விரும்புகிறேன்'' என்றும் கூறும் கங்கப்பா ஆட்சியில் உள்ளோருக்குக் கூறும் அட்வைஸ்: உயர்ந்த கோபுரத்தின் உச்சியில் உட்கார்ந்து கொண்டு விடாதீர்கள். அடிக்கடி மக்களையும் அதிகாரிகளையும்சந்தியுங்கள். அது உங்களுக்கும் நல்லது. அதிகாரிகளுக்கும் நல்லது. மக்களுக்கும் நல்லது.



பாரதியின் எழுத்து

புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் ''குயில்'' என்கிற கவிதை ஏட்டை நடத்திய காலம். அதன் 'இம்ப்ரின்ட்' பகுதியில் 'தி. நகர்' என்று அச்சிடப்பட்டிருக்கும்.

இலங்கையிலிருந்து ஓர் அன்பர் வெகுண்டு எழுதினார்:

''தியாகராசர் எவ்வளவு பெரிய மனிதர். அவரைச் சிறுமைப்படுத்துகிற மாதிரி 'தி. நகர்' என்று உங்கள் ஏட்டிலா வருவது?''

கடிதத்தைப் படித்ததும்

''பொன்னடி! இதைப் பார்'' என்று அழைத்தார். ''இந்த எழுத்தைப் பார். எவ்வளவு அழகாக குண்டு குண்டாக இருக்கிறது பாரதியார்எழுத்துஇப்படித்தான் இருக்கும்'' என்று அபார ரசனையோடு சொல்லித் தம்முடைய கவிதைத் தலைவனைப் பற்றிய நினைவுகளில் அமிழ்ந்து போனார் கவிஞர்.

தன்னைத் திட்டி எழுதப்பட்ட அந்தக் கடிதம்கூட அப்போது அவருக்குக் கோபமூட்டாததற்குக் காரணம் பாரதி நினைவுதான்.

இலங்கைக்காரருக்குப் பதில் எழுதினோம். அப்புறம் தியாகராய நகர் என்று முழுப் பெயரையும் போட்டோம்.

—இலக்கிய சிந்தனைக் கூட்டத்தில்

கவிஞர் பொன்னடியான்

தகவல்: சுப்ரபாலன்

அன்புடன் கொஞ்சம் வம்பு



அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழியில் பயிலும் எம். ஏ., எம்.எஸ்ஸி மாணவர்களுக்கு அன்றாட வேலை - இன்றைக்காவது பாடம் தபாலில் வருமா? என்று எதிர்நோக்கி ஏமாறுவதுதான். பிப்ரவரியாகியும் கூட முதல் செட் பாடங்கள்—அவ்வளவு ஏன், பாடத் திட்டம் கூட—இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை! இந்த லட்சணத்தில் மே—ஜூனில் எப்படிப் பரீட்சை எழுதி, என்ன குப்பை கொட்டுவது?

சென்னை நகரிலே ஒரு பெண்கள்கல்லூரி ஹாஸ்டலில் உள்ள டி. வி. ரிப்பேராகி நான்கைந்து மாதங்களாகிவிட்டன. இன்னும் டி. வி. சரியானபாடில்லை. சம்பந்தப்பட்டவர்களிடம் டி. வி.யை ரிப்பேர் செய்யக்கூடாதா



என்றபோது 'படிக்கிற பசங்களுக்கு டி.வி. என்ன வேண்டிக் கிடக்கிறது?'' என்று இடக்காகப் பதில் சொல்லப்பட்டதாம்!

புத்தக வெளியீட்டாளர்கள் அரசாங்கம் நூலகங்களில் புத்தகங்களை வாங்குவதில்லை எனக் குறை சொல்வது ஒருபுறமிருக்கட்டும். இவர்கள் புதிய எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் புத்தகமாய்ப் போட முன் வருகிறார்களா? புகழ் பெற்றவர்கள் பின்னாலேதானே அலைகிறார்கள்? அப்படியே போட முன் வந்தாலும் இருநூறு, முந்நூறு பக்கப் புத்தகங்களுக்கான கதைகள் கட்டுரைகளை இருநூறே, முந்நூறே தானே கொடுத்து வாங்குகிறார்கள். இது பற்றி யாரும் சிந்திக்கக் காணோமே!'' என்று மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டார் ஓர் இளம் எழுத்தாளர்.

வெளியூர் செல்லும் திருவள்ளுவர், பெரியார், மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி பஸ்களில் — பாட்டா ஷோ ரூம் கெட்டது போங்கள் — டிக்கட் விலையெல்லாம் சில ரூபாயும் 85, 90, 95 பைசா என்றுதான் இருக்கிறது. கண்டக்டர்களிலோ 99 சதவீதத்தினர் மீதி சில்லறை தரும் பழக்கம் அறவே இல்லாதவர்கள். ஒரு வழியாக ரூபாய்க்கே ''ரவுண்ட் ஆஃப்'' செய்து விடலாம் என்று அலுத்துக் கொள்கின்றனர் பயணிகள்.


— ஜூலி



இதிலும்தான்!

30—1—83 இதழில் ''கால்ஃப் ஆட்டத்திற்கு ரெஃபரியோ அம்பயரோ கிடையாது'' என்று ஒரு துணுக்கு வந்துள்ளது. இதே போல் போலோ ஆட்டத்திலும் ரெஃபரியோ அம்பயரோ கிடையாது!

—விஜய்



முன்னேற்றப்பாதையில்
வெற்றிகரமான முதலடி

நினைவுகள் நிறைந்திடும் அழியாத கோலமே வாழ்க்கை-யெனும் அற்புதம். பாசம், நேசம், உல்லாசம், பெருமிதம் போன்ற நவரசம் ததும்பும் தருணங்கள் எங்கும், எப்போதும் நேரலாம். அவ்வினாடியே அவற்றைப் படமெடுத்துப் பாதுகாப்பீர். ஏனெனில் புகைப்படங்கள் என்றென்றும் வாழும் பசுமையான நினைவுச் சோலைகள்.



இந்து ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்
மனம் அள்ளும் நினைவுகளை சிறை கொள்ளும்!



பத்மஸ்ரீ வாழ்விலே...

''ராஜாஜி எழுதிய ஆங்கிலப் பாடலை ஸ்ரீமதி எம். எஸ்., ஐ. நா. சபையில் பாட விருந்தார். மேற்கத்திய இசை அமைத்து எம். எஸ்.ஸுக்குப் பயிற்சி அளித்தவன் நான். அமெரிக்கா கிளம்பு முன்னர் ராஜாஜி முன் எம். எஸ். அப்பாடலைப் பாடினார். அதைக் கேட்ட ராஜாஜி என்னைப் பார்த்து ''நீங்கள் ஒரு முறை பாடுங்கள்'' என்றார். ''நான் பாடகனில்லை'' என்றேன். ''பரவாயில்லை பாடுங்கள்'' என்றார். பாடினேன். அதன் பின்னர் எம். எஸ்.ஸைப் பார்த்த ராஜாஜி ''வெள்ளைக்காரங்க மாதிரியே பாடினீர்கள்'' என்று முகம் மலர்ந்து சொன்னார். இசை வடிவம் மட்டுமின்றி உச்சரிப்பும் சரியாக இருக்கிறதா என்று பார்க்கத்தான் என்னைப் பாடச் சொல்லிக் கேட்டிருக்கிறார் என்று புரிந்து கொண்டேன். பாடியவர், பயிற்சி அளித்தவர் இருவருக்கும் இதை விடப் பெரிய பாராட்டு என்ன இருக்க முடியும்?''

— ஹாண்டல் மானுவெல்

மனைவி வந்த வேளை கூடவே பத்மஸ்ரீயும் வந்திருக்கிறது **விஜய் அமிர்தராஜுக்கு**. சொல்கிறார்: ''டென்னிஸில் முன்னேற வேண்டுமானால் ஒரு நாளைக்கு 5 மணி நேரம் பயிற்சி தேவை. லண்டனில் ஒரு விருந்தில் கலந்துகொண்ட என்னை ஒரு பெண்மணி வந்து பாராட்டினார். நான் நன்றி கூறினேன். ''யாருடன் கை குலுக்கினாய், தெரியுமா? நாடாளு மன்ற எதிர்க் கட்சித் தலைவர் மார்கரெட் தாட்சர்!'' என்று ஒருவர் காதோடு கிசுகிசுத்தார். பிரிட்டிஷ் பிரதமர் கலாகன், ஆஸ்திரேலியப் பிரதமர் ஃப்ரேஸர், பல ஹாலிவுட் நட்சத்திரங்களைச் சந்தித்திருக்கிறேன். எல்லாரும் எவ்வளவு சகஜமாகப் பழகுவார்கள்!''

மருத்துவம் படித்துவிட்டு வெளி நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தார் **பத்ரிநாத்**. ஒரு நாள் இரண்டு இளம் பெண்மணிகள் மருத்துவ மனைக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவருக்குக் கண் சிகிச்சை செய்தார். உடன் வந்தவர் டாக்டரைப் பார்க்க, இவரும் அவரைப் பார்க்க, அது காதலாக மலர்ந்து தொடர்ந்து கல்யாணத்தில் முடிந்தது! கிளிக் தம்பதியர் வீட்டில் இந்திய முறைப்படி திருமணம் நடக்க உதவியவர் டாக்டர் பென்டில் என்ற இந்தியர். இவர் தகப்பனார் ஒரு புரோகிதர். இவருக்கும் மந்திரங்கள் தெரிந்திருந்தன. அந்நிய மண்ணில் இந்தியத் திருமணம் ஜாம் ஜாம் என்று நடந்தது!

''ஜனவரி 18ம் தேதி திருமதி பி.சுசீலா கேட்டுக் கொண்டதற்கிணங்க சத்திய சாயி பாபா முன் சென்னையில் பாடினேன். 19ம் தேதி காஞ்சிப் பெரியவர் முன் இசை நிகழ்ச்சி நடத்தினேன். 26ம் தேதி திருச்சி மலைக் கோட்டையில் தாயுமானவர் சன்னதி முன் இரு சன்னிதானங்கள் முன்னிலையில் கச்சேரி. ஒருபுறம் காஞ்சி காமகோடி பீடாதிபதி, மறுபுறம் தருமை ஆதீன மகா சன்னிதானம். அன்றே எனக்குக் கிடைத்தது பத்மஸ்ரீ பட்டம்!''

—சீர்காழி கோவிந்தராஜன்

''மீன் கறியும், சிக்கன் கறியும்தான் ரொம்பப் பிடிக்கும்'' என்று கூறும் **வால்சம்மா**. ''ஆசிய கிராமத்தில் மிக அதிகமான அளவு ஆரஞ்சு ஜூஸ் சாப்பிட்டவள் நானாகத்தான் இருக்கும்'' என்கிறார். ''எத்தனையோ பேர் வாழ்த்தினார்கள். கைகுலுக்கினார்கள்... ஆனால் நான் தங்கப் பதக்கம் வாங்கியதும் என் பயிற்சியாளர் ஏ. கே. குட்டி ஆனந்தம் தாங்க முடியாமல் ஓடிவந்து என்னை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டாரே அந்தக் கணம், ஆசியப் போட்டியில் நான் வென்ற கணத்தை விடவும் எனக்கு முக்கியமானது. மறக்க முடியாதது!''

தொகுப்பு: **சலன்**



கல்கி

1983 பிப்ரவரி 13

துந்துபி மாசி 1


மலர் : 41 இதழ் : 29



கண் துடைப்பு!


கர்நாடகா, ஆந்திரா, திரிபுரா தேர்தல்களுக்குப் பிறகு ஆட்சியிலும் கட்சியிலும் சில மாற்றங்களைச் செய்துள்ளார் பிரதமர். தேர்தலில் அடைந்த தோல்விகளுக்கும் தேசத்தின் படுமோசமான நிலைமைக்கும் யாரையேனும் பொறுப்பாக்க வேண்டும் என்ற நோக்கில் செய்யப்பட்ட மாற்றங்களே இவை. மெய்யான ஆத்ம பரிசோதனை நடக்கவில்லை.

அவ்வாறு நடந்திருந்தால் மகாராஷ்டிரத்தில் சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் ஜனநாயக மரபுகள் காக்கப்பட்டிருக்கும். ஆனால் அது படு ரகசியமாக, அந்துலேயால் 'ஒரு மாபெரும் மோசடி' என்று வர்ணிக்கப்படுகிற விதத்தில்தான் நடந்தது. அந்துலேயே மோசடி என்றால் நம்ப வேண்டியிருக்கிறது! அந்துலே அறியாத மோசடிகளா! இவரைத் தலைமைப் பதவிக்குப் போட்டியிட வேண்டாம் என்றோ கட்சி அங்கத்தினராக இருக்க வேண்டாம் என்றோ கூற இந்திரா காந்தி உள்பட யாருக்குமே இன்றளவும் தார்மீகத் துணிவு வரவில்லை. வசந்தராவ் பாட்டீல் அனுபவசாலியாகவும் திறமைசாலியாகவும் இருக்கலாம். ஆனால் அவரை முதல்வராக்க இ. காங்கிரஸ் கையாண்ட முறை அக்கட்சிக்கு மேலும் அபகீர்த்தியையே தேடித் தந்துள்ளது.



அமைச்சரவை மாற்றங்களும் வெறும் கண் துடைப்பே. முக்கிய பொறுப்புக்களில் உள்ள பெருந்தலைகள் தொடப்படவில்லை. சில சில்லறை அமைச்சர்கள் பலிகொடுக்கப்பட்டனர். சிலர் புதிதாக நுழைந்துள்ளனர். அமைச்சர்களை அம்மானை ஆடுவதால் என்ன நற்பயன் நாட்டுக்கு விளையும் என்று இந்திரா காந்தி நம்புகிறார்?

சென்ற ஆண்டினை உற்பத்தியை அதிகரிக்கும் ஆண்டு என அறிவித்தது பிரதமர்தான். ஆனால் 1982ல்தான் உற்பத்தி முக்கிய இனங்களில் திடுக்கிடும் அளவு குறைந்தது. உணவு உற்பத்தி 11 மில்லியன் டன் முந்தைய ஆண்டை விடக் குறைவாக இருக்கும் என்று மதிப்பீடு. அயல்நாட்டுச் செலாவணி கையிருப்பு 750 கோடி குறைந்தது! ஐ.எம்.எஃப் கடனான 5200 கோடியில் முதல் தவணையாகப் பெறப்பட்டுள்ள 1500 கோடியையும் சேர்த்துக் கொண்டால் மொத்தத்தில் அந்நியச் செலாவணி கையிருப்பு 2250 கோடி குறைந்துள்ளது. ஓராண்டுக்கு மேலாக பம்பாயில் நூற்பாலை, நெசவாலை வேலைநிறுத்தம் நீடித்துச்



சரித்திரம் படைத்துள்ளது! மொத்த வியாபாரத்தில் விலைவாசி உயர்வு 3 சதம் எனில் விலைவாசி புள்ளி எண் எட்டு சதம் உயர்ந்தது. கோதுமை போன்ற சில அத்தியாவசியப் பண்டங்கள் விலை சில்லறை வியாபாரத்தில் 16 சதம் வரை உயர்ந்தது! நாடெங்கும் மின்வெட்டு 20 சதம் முதல் 100 சதம் வரை அமுலிலிருந்தது.

இம்மாதிரியான சூழலில்தான் ஆயிரம் கோடி செலவில் ஆசிய விளையாட்டுக்களை நடத்தினோம். இதற்கென அந்நியச் செலாவணியும் ஏராளமாய்க் கொட்டிக் கொடுத்தோம். இதையொட்டி கலர் டீவி செட்டுக்களை இறக்குமதி செய்யவும் அனுமதித்தோம்! ரொம்ப அத்தியாவசியம் பாருங்கள்!

பிரதமர் நாட்டுக்கு மெய்யாலுமே நன்மை செய்ய எண்ணினால் மந்திரி சபை மாற்றத்தினால் மட்டும் அதைச் சாதிக்க முடியாது. அரசியல்—பொருளாதாரக் கொள்கைகளை அவர் மாற்றிக்கொள்ள வேண்டும்.


தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

'வீடியோ' வரை காத்திரு! 5

கதை: ஜே.எஸ்.ராகவன் - சித்திரம்: செல்லம்





வைத்தியம்! கொழும்புலே கிடைக்காததா? 'பேட்டா' மார்க்கெட்டிலே கொட்டிக் கிடக்கு.
அதுக்காக நம்ம பொண்ணு லங்கைக்கு சவுரி கட்டிண்டு போகணுமா? புதுசா வாங்கித்தாங்க....
ஒரு தோசைக்கு ஒன்று என்ற கணக்கில் எட்டு நீண்ட ஏப்பங்களை விடுகிறார்.
ஜாஜி ஆம்பளை துணையில்லாம போறீங்க..... ஜாக்கிரதை.
அதுவுல என்னப்பா. லங்காவிலே ராமரும் இருக்கலாம்! அயோத்திலே ராவணனும் இருக்கலாம்!
சரோஜா ஜாஜிக்குச் சுத்திப் போடு!...ஆமாம் அன்னிக்கு சத்தியம் தியேட்டர்லே யாரோடயோ பேசிண்டு இல்லே நீ?
அதுவா? அது வந்து சுரேஷ்.....என் பிரெண்ட்... குட் பாய்.
உனக்கு எப்படிம்மா பளக்கம்? என்ன வேலை செய்யுது அது?
ஒரு ஆக்ஸிடெண்ட்லே மீட் பண்ணினோம் டாடி! சுரேஷ் 'எம்பசி'லே வேலையா இருக்கு. 'எம்பசி' உங்களுக்குத் தெரியுமில்லே?
எம்பசியா? 'எம்பசி' எப்படிம்மா தெரியும்.
ஆமா! உங்க பசி எனக்குத்தான் தெரியும். இன்னும் ரெண்டு தோசை போட்டுக்காங்க. தயிர் விடறேன்.
டாடி! சுரேஷ் அப்பா ஒரு கஸ்டம்ஸ் ஆபீஸராம்பா.
விக்... விக்... என்னது? என்ன சொன்னே?
சட்டு தண்ணி குடிங்க.
தொடரும்



கன்றுக் குட்டிகள்

சுபா



பன்னீர்செல்வம் கூட்டத்தை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தான். நாய் செத்துப்போயிருந்தது. கழுத்து தரையில் தேய்ந்த க்ஷணத்திலேயே உயிர் பிரிந்திருக்க வேண்டும்.

'ஹோ... ஹோய்' என்று கூச்சலாய்க் கிளம்பிய சத்தம் குழப்பிற்று. ''டேய் எல்லாம் சும்மா இருங்கடா'' என்று ஒரு அதட்டல் போட்டான். அத்தனை பையன்களும் கப்பென்று குரலை இறக்கிக் கொண்டார்கள். அவனுக்கு வழி விட்டார்கள். எதிரிலிருந்த பையனைப் பார்த்தான்.

''என்னடா ஆச்சு?''

''பஸ் அடிச்சிட்டுப் போயிடிச்சி.''

''எந்த பஸ்ஸு?''

''அஞ்சாம் நம்பர் சிடி எக்ஸ்பிரஸ்தான். அடிச்சிட்டு நிறுத்தாமலே போயிட்டான்.''

''சரி எல்லாம் ஒத்துங்க.''

அத்தனை பையன்களும் நகர்ந்து கொண்டார்கள். சுற்றிலும் சற்று ரத்தம் உறைந்து நாய் அநாதையாய்க் கிடந்தது. ஸ்கூலில் முதல் மணி அடிக்கிற சத்தம் கேட்டது. மணிச் சத்தத்தைக் கேட்டவுடனே சில பையன்கள் கலைய ஆரம்பித்தார்கள். இரண்டாவது மாடியில் இருந்து கீழே தெருவில் கூடியிருக்கிற கூட்டத்தை வேடிக்கை பார்த்தனர் ஒன்றிரண்டு ஆசிரியர்கள். கூட்டம் கலைவதை உணர்ந்து அதட்டினான் பன்னீர்செல்வம்.

''ஏய் எல்லாரும் இங்கேயே நில்லுங்கடா....''

பன்னீர்செல்வத்துக்குக் குரல் உடைந்து ஆறு மாதமாகிறது. இறுதி வகுப்பு படிப்பவர்களிடையே தனி மதர்ப்பாய் நிற்கிற உயரம். மீசை அரும்பியிருந்ததில் முகத்தில் சற்றுக் கடுமை கூடியிருந்தது. 'கோப்ரா' என்று கொட்டை எழுத்துக்களுடன்பனியன், அந்த எழுத்துக்களின் பின்னால் படமெடுக்கிற பாம்பு. வெளிறிப் போயிருந்த ஜீன்ஸ்.

அப்புறம் அந்த ஷூ!

நடக்கையில் டக் டக் என்று ஒலி எழுப்பி மனசுக்குள் பெரிய மனுஷத்தனத்தை நிரம்பி வழியச் செய்யும். அவனைக் கண்டு லேசாய்த் தொடை நடுங்குகிற ஆசிரியர்களைக் கண்டு உள்ளூர சின்னப் பெருமை.

''ஒரு கை பார்த்துடலாண்டா...'' அவனுகவே வரித்துக் கொண்ட தலைமைப் பதவிக்கு மற்றவர்கள் மசிந்திருக்கிற ஒரு கர்வம். அந்தக் கர்வம் இன்றைக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று மனசை அரித்தது.

''அப்புறம் ஸ்கூலுக்குப் போகலாம்...... இதுக்கு ஒரு வழி செய்வோம்.'' வகுப்புக்குப் போயிருந்த இரண்டொரு பையன்களும் வெளியே காம்பவுண்டைத் தாண்டித் தெருவுக்கு வந்து நின்றனர்.

''அந்த டிரைவருக்கு ஆனாலும் ரொம்பத் திமிருதான். நாம நின்னு ஐஸ் வாங்கிக்கிட்டிருக்கிறப்போ கூட 'பா'ங்...னு ஹாரனடிப்பான். இன்னிக்கு அவனை ஒரு வழி பண்ணிடலாம் இருங்க...''

பையன்களுக்குத் துடிப்பு ஏறிற்று.

''அந்த பஸ்ஸு எப்படியும் இந்த ரோடுலதான் திரும்பி வரணும்... வரப்ப வழி விடாமப் பண்ணிடுவோம்.''

'ஓ...ஓ' என்று சந்தோஷக் கூச்சல் கிளம்பிற்று. தினமுமே அந்த பஸ் தங்களைக் கடக்கையில் அதன் பக்கத் தகரத்தில் தடதடவென்று தட்டிச் சந்தோஷிக்கிற பையன்களுக்கு இன்றைக்கு ஏகக் குஷியாயிற்று.

''எல்லாம் ஆளுக்கொரு கல்லை எடுத்து வச்சுக்கங்க... அவன் மட்டும் நிறுத்தாமப் போயிட்டான், நொறுக்கிடுவோம்.''

''என்னப்பா பன்னீர்செல்வம்... என்ன இங்க கலாட்டா?''

ஹெட் மாஸ்டர் கேட்டைத் தாண்டி வெளியே வந்தார். பாதிப்பேர் சட்டென்று வேறு முதுகுக்குப் பின் மறைந்து கொண்டனர்.

''நாயடிச்சுட்டுப் போயிட்டான் சார் பஸ்காரன்....''

''யார் வீட்டு நாய்?''

''தெரு நாய்தான் ஸார்,''

''தெரு நாயை அவன் அடிச்சா உங்களுக்கு என்னப்பா?''

''இன்னிக்கு நாயி... நாளைக்கு நாங்க... ஸ்கூல் ஏரியால ராஷா ஓட்டிக்கிட்டுப் போறான். ரெண்டு மூணு தடவை ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கும். முந்தாநாள் கூட கோவிந்தராசை உரசிக்கிட்டுப் போனான்... அவன் அதிர்ஷ்டம் தப்பிச்சுட்டான்.''

''இப்ப என்ன செய்யப் போறீங்க?''

''நீங்க உள்ளே போங்க சார். நாங்க பாத்துக்கறோம்.''

''என்ன செய்யப் போறீங்கன்னு கேட்டேன்?''

''பஸ் இதே வழியாத்தான் சார் திரும்பி வரும். மடக்கப் போறோம்.''

''மடக்கி....?''

''டிரைவர்கிட்ட இப்படி ராஷா ஓட்டிக்கிட்டுப் போகக் கூடாதுன்னு சொல்லப் போறோம்.''

''அவ்வளவுதானே?''

''ஆமா சார்.''

''க்ளாஸுக்கு டயமாச்சு.... நீங்கள்லாம் உள்ளே போங்க. நான் இருந்து சொல்லிடறேன்.''



''இல்லே சார்... நாங்களே சொல்லிட றோம்.''

தூரத்தில் பஸ் வருவது தெரிந்தது. 'ஓ' வென்று ஒரு கூச்சல் கிளம்பிற்று.

என்ன நினைத்துக் கொண்டாரோ ஹெட் மாஸ்டர் சட்டென்று திரும்பி உள்ளே போய் விட்டார். பையன்கள் சட் சட்டென்று குனிந்து ஆளுக்கொரு கல்லைப் பொறுக்கிக் கொண்டார்கள். தெருவை மறித்து நின்று கொண்டார்கள்.

கும்பலில் திவ்யநாதனுக்கு நல்ல கல் வாய்க் கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் பக்கத்துச் சந்தில் புகுந்து தேடினுன். நல்ல கூராய்ப் பட்டைக்கல் ஒன்றுகையடக்கமாய்த் தெருவோரம் கிடந்தது. பாய்ந்து எடுத்துக் கொண்டு ஓடிவந்து கூட்டத்தின் பின்னல் நின்று கொண்டான். நேரே பஸ்ஸின் முன் விளக்கைக் குறி வைத்து நொறுக்க வேண்டு மென்று முடிவு செய்து கொண்டான்.

பஸ் வேகம் குறைந்து நெருங்கிற்று. தடதடவென்று இரண்டு பக்கத்திலும் பையன்கள் உள்ளே ஏறினர்கள். பஸ்ஸில் உட்கார்ந்திருந்தவர்கள் ஒன்றும் புரியாமல் பார்க்க,பெண்களுக்குப்படபடவென்று அடித் துக்கொண்டது. டிரைவர் சட்டென்று பிரேக்கை அழுத்தினுர்.

பன்னீர்செல்வம் தடதடவென்று முன்பக் கம் ஏறி டிரைவருக்கு அருகே சென்றுன்.

''எறங்குப்பா கீழே....''

டிரைவருக்கு முப்பத்தைந்து வயதிருக்கும். பன்னீர்செல்வத்தைப் போல நாலு ஆளைச் சமாளிக்கக் கூடிய உடல். திறந்திருந்த சட்டையை மீறிக் கொண்டிருந்தது.

''நீ எறங்குடா மொதல்ல பஸ்லேர்ந்து'' என்று அதட்டலாய் எழுந்திருந்தார்.

''ஏய்....ஏய்... என்ற கூச்சலுடன் பஸ் ஸின் பக்கங்கள் தடதடவென்று அடிபட்டன.

கண்டக்டர் அவசரமாய் முன்ஞல் ஓடி வந்தார்.

''பாண்டியண்ணே ஆத்திரப்படாதீங்க... என்னப்பா... என்ன வேணும் உங்களுக்கு?''

''எக்ஸ்பிரஸ்னு போட்டுட்டா காட்டு வேகத்திலே பஸ்ஸை ஓட்டறதா?''

''யாருப்பா ஓட்டினுங்க?''

''இவருதான்... வர்ரப்ப ஒரு நாயை அடிச்சிட்டு நிறுத்தாமயே போயிருக்கீங்க.''

''அதுக்கென்னடா இப்ப?''

''அண்ணே கொஞ்சம் பேசாம இருங்க.''

கண்டக்டருக்கு எக்கச்சக்கப் பயம். குருட் டாம்போக்கிலே நாலு கல்லு பறந்தால் கண்ணுடி நொறுங்கிப் போகும். அப்புறம் அதிகாரிகளிடம் பதில் சொல்லிக்கொண் டிருக்கிற அவஸ்தை வேறு.

''வேணும்னுப்பா ஏத்தினேம். குறுக் கால வந்து டயருக்கடியிலே போயிடிச்சு.''

''இன்னிக்கு நாய்... நாளைக்கு யாராச்சும் ஒரு ஸ்டூடண்ட்டை அடிச்சுப் போட்டு ஓடிடுவீங்க.''

''அப்படியெல்லாம் செய்ய மாட்டோம். ஜாக்கிரதையா வரோம். இப்ப வழி விடுங்க தம்பி.''

டிரைவர் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

''அதெப்படி வழி விடறது? இவரு எறங்கி வரட்டும்.''

''இவரு எதுக்கப்பா?''

''ஸ்கூல் வாசல்லே நாயை அடிச்சுப் போட்டுட்டாரு... அதை எடுத்து ரோட் டோரமாப் போட்டுட்டுவண்டியை எடுங்க.''

இக்கட்டில் சிக்கிக்கொண்ட தவிப்பு கண் டக்டரின் முகத்தில் தெரிந்தது. ஒற்றை யாய் வந்திருந்தால் இந்நேரம் இந்தப் பையனைப் பந்தாடியிருக்கலாம். கூட்டமாய் நிற்கிருர்கள். இவன் மேல் கை வைத்தால் உடனே பஸ் நொறுங்கும். எல்லாம் பள்ளிப் பையன்கள்தான். சினிமாவையும் டீ.வி.யை யும் பார்த்துப் பார்த்து வன்முறைக்கு அலைகிற இள வயசு.

''எறங்கு.... எறங்கு....'' என்று கூச்ச லாய் சப்தம் கிளம்பிற்று.

உட்கார்ந்திருந்த ஆண்கள் வாட்சைப் பார்த்தார்கள். கண்டக்டரைப் பார்த் தார்கள். டிரைவரைப் பார்த்தார்கள்.



மொராக்கோ என்னும் நாட்டில் 'காபி வில்' என்ற ஓர் இனத்தினர் வசிக்கின்ற னர். மணமகளின் கழுத்தில் தாலி கட்டுவதற்குப் பதில் அவன் தொண்டை யில் லேசாகக் கத்தி முனையால் மதகுரு கீறிக் காயப்படுத்துவார். இச்சடங்கின் உட்பொருள்: 'சிந்திவிட்ட அளவு இரத்தம் என் உடலில் இருக்கும்வரை யும் என் கணவரை விட்டுப் பிரிய மாட் டேன். அப்படிப் பிரிவேனுகில் இப் பொழுது சிந்திய இரத்தம் போல் என் உடலில் ஓடும் இரத்தம் முழுவதும் சிந்தி வழியுமாக!'

—ஆர். அரிகோபி

அவனியில் அதிநவீன பேரணியைக் கொண்ட விமானப் பவனி இதுவே.
ஆயினும் பயணத்தின் கற்பனைத்தாகம் இன்னும் தணியவில்லை.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஒரு விண்ணப்பம்

SHRI RAMANUJACHARYA
10th CENTENARY CELEBRATIONS

Satyanarayanmandir - Dariapur, Ahmedabad-380001 Gujarat

Tel. No. 26258 – 78030 – 410162

பாரத தேசத்தில் பக்தி மார்க்கத்திற்கு வித்திட்ட மஹான் ஸ்ரீ ராமானுஜரின் **10வது நூற்றாண்டு விழா** காந்திஜீ பிறந்த மாநிலமான குஜராத்தின் தலைநகரான ஆமதாபாத்தில் **12-4-83 முதல் 18-4-83 வரை** அதி விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விசேஷ மஹோத்ஸவத்தில் உள் நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் பல அறிஞர்களும் கலைஞர்களும் கலந்துக் கொள்கிறார்கள். இந்த மஹாவைபவத்துடன் விச்வ தர்ம சம்மேளனமும், ஸ்ரீ வைஷ்ணவ மகாநாடும் நடத்த இட்டமிட்டுள்ளோம். வித்வத் சம்மேளனத்துடன் வேத பாராயணம், திவ்ய ப்ரபந்தம் ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீமத் ராமாயண பாராயணங்களும் நடைபெறும். ஆஸ்திக பெருமக்களை இந்த மஹோத்ஸவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

டாக்டர் **ஸ்ரீதராச்சார்ய**
கன்வீனர்

சென்னை - பழனியில் சிகிச்சை

பெறுங்கள். உலக புகழ் பெற்ற பழனி சித்த வைத்தியபதி

Dr. S. காளிமுத்து, R.M.P. (IND) V.V.C., A.M.I.H., R.A.M.P., R.H.M.P.,



அவர்களின் சுற்றுப்பயணத்தில் அல்லது பழனியில் நேரில் சந்தித்து ஆலோசனை பெற்று இதுவரை கஷ்டத்துடன் அனுபவித்த வியாதிகள் நீங்கி சுகவாழ்வு பெறலாம்! உங்கள் பிரச்சனையான — தாம்பத்திய வாழ்வில் மாறுபாடு—சோர்வு — அணுக்கள் குறை—வீரியமின்மை-குடும்ப உறவில் முன்மாதிரி செயல்படுத்த முடியாமை நரம்பு துவளல்-தேக உறுப்புகள் மெலிவு-கெட்ட கனவுகள்-தூக்கம் இல்லாமை-குழந்தை செல்வம் இல்லாமை-வெட்கம்-நடுக்கம்-தோல்வி-ஆ. இருமல்-வாதநோய் — சருமநோய் — குடல்புண்—வயிற்று கோளாறுகள் — நவமூல வியாதிகள் மற்றும் இதர வியாதிகளும் 85 வருட அனுபவ மருந்துகள் பெற்று சுக வாழ்வும் - மறுமலர்ச்சியும் பெறலாம்.

சென்னை விஜயம் : ***தேதிகள் 10-11 & 17-18-19***

நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல், எட்வொர்ட்ஸ் எலியட்ஸ் ரோடு, சென்னை-4 போன்: 83111

பழனியில் : 23ந் தேதி முதல், 31ந் தேதி வரை தலைமை ஆபீஸ்—

பழனி சித்தர் வைத்தியசாலை, (Regd) பழைய தாராபுரம் ரோடு, பழனி-1

போன் : 316 — 316A வீடு : 420 தந்தி : 'சித்தர்'

சென்னை — பழனி ஆலோசனை நேரம் : காலை 10 to 12 மணி மாலை 3 to 5 மணி வரை மேலும் நேரில் ஆலோசனை பெற: 13-ந் தேதி: சேலம்-லக்ஷ்மி ராஜ்பவன், மாலை 2 to 4 மணி, 15-ந் தேதி : ஈரோடு-நவபவனம், காலை 10 to 12 மணி, திருப்பூர்-ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜ் பகல் 2 to 3½ மணி, 16ந்தேதி கோவை, விஜயா லாட்ஜ் காலை 10 to 12 மணி 22ந்தேதி கோவை, ஹோட்டல் குரு, காலை 10 to 12 மணி 22ந்தேதி பொள்ளாச்சி கோபால் பில்டிங், மாலை 2 to 3½ மணி 23ந்தேதி பெரியகுளம் உடுப்பி லட்சுமி விலாஸ் காலை 8 to 10 மணி, தேனி பாண்டியன் லாட்ஜ், பகல் 11 to 1 மணி, கம்பம் புளிவர்ஸ் லாட்ஜ் பகல் 2 to 4 மணி, 24ந்தேதி மதுரை சந்தானம் லாட்ஜ் காலை 8 to 12 மணி, 24ந்தேதி விருதுநகர் ஹோட்டல், ஆஞ்சநேயா பகல் 2 to 4 மணி, இராஜபாளையம் ஆனந்தா லாட்ஜ், மாலை 5 to 6 மணி.

எமது மருந்துகள் கிடைக்குமிடம் : **கவிதா எண்டர்பிரைசஸ்,**
26, வாலர்ஸ் ரோடு, (மவுண்ட்ரோடு, பி.ஆர். & ஸன்ஸ் அருகில்) சென்னை-2

'லொய்' லொய்' என்று முணு முணுத்தார்கள்.

டிரைவர் மோட்டாரை அணைத்துவிட்டு 'நான் நகர மாட்டேன்'பாவனையில் சாய்ந்து உட்கார்ந்து விட்டார்.

நான்காவது வரிசையில் ஜன்னலோரமாய் உட்கார்ந்திருந்த அந்தப் பெண் எழுந்து முன்னால் வந்தாள்.

''தம்பி உன் பேரு என்ன?'' சாந்தமாய்க் கேட்டாள்.

''நீங்க என்ன போலீசா?'' என்று இடக்காய்க் கேட்டான் பன்னீர்செல்வம்.

சிரித்தாள். ''சரி... பேரு வேணாம்... ஆனா கொஞ்சம் நான் சொல்றதைக் கேளு. டிரைவர் நாயை அடிச்சட்டுப் போனது தப்புன்னே வைச்சுக்குவோம். ஆனா இப்ப அவரு கீழே இறங்கி நாயைத் தூக்கிப் போட்டுக்கிட்டிருந்தார்னா லேட்டாயிடும். நாங்கள்லாம் ஆபீஸுக்கு நேரத்துக்குப் போக முடியாது. நான் ஆபீஸுக்குப் போன உடனே கார்ப்பரேஷனுக்கு ஃபோன் பண்ணி அந்த இடத்தைக் க்ளீன் பண்ணச் சொல்றேன்... அதனால தயவு செய்ங்க உன்னோட ஃப்ரண்ட்ஸை யெல்லாம் நீ வழி விடச் சொல்லு... நீ சொன்னாத்தான் கேப்பாங்க ப்ளீஸ்....''

பன்னீர்செல்வத்திற்கு மனசு குழைந்தது. அவள் இறைஞ்சிக் கேட்டபோது. இத்தனை பேரில் உடனடியாய் அவன் தலைமையை அங்கீகரிக்கிற அவளைப் பிடித்தது. அதுவே வெற்றியெனத் தோன்றியது.

''ப்ரதர்... இனிமே ஒழுங்கா வண்டியை ஓட்டுங்க'' என்று சொல்லிவிட்டு திரும்பி, ''எல்லாம் எறங்குங்கடா'' என்றான். சடசடவென்று பையன்கள் இறங்கினார்கள்.

''ரொம்பத் தாங்க்ஸ் தம்பி'' என்று அவள் மலர்ந்து சிரித்தாள். டிரைவர் வண்டியை புர் புர்ரென்று கிளப்பினார்.

இன்னும் பக்கங்களில் தட்டுகிற பையன்களைப் பார்த்துபன்னீர்செல்வம் அதட்டினான்:

''டேய் கையை எடுங்கடா... ப்ரதர் நீங்க போங்க....''

எல்லோரும் விலகி வழி விட்டார்கள்.

திவ்யநாதனுக்கு மிகுந்த ஏமாற்றமாய் இருந்தது. கஷ்டப்பட்டுப் பொறுக்கி எடுத்த கல்லுக்கு உபயோகமில்லாமல் போகிறதே என்று வருத்தமா யிருந்தது.

சர்ரென்று பஸ் வேகம் பிடித்துக் கிளம்பிற்று.

ஒரு உந்துதலில் பஸ்ஸை நோக்கி அந்தக் கல்லைக் குறிபார்த்து வீசி எறிந்தான்.

திருப்பத்தில் வேகம் குறைகிற பஸ்ஸிலிருந்து தன்னை உதிர்த்துக் கொண்ட பன்னீர் செல்வம் நேர் கோட்டில் வந்தான்.

கூரான முனை காதருகே கீறி நுழைந்து கன்னத்துச் சதையைக் கணிசமாய்க் கிள்ளிற்று. குபுக்கென்று ரத்தம் கொப்புளித்தது. அந்தத் தாக்குதலில் பன்னீர்செல்வம் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு கீழே மடங்கி விழுகையில் பஸ் வேகம் பிடித்து மறைந்திருந்தது.

கவிஞர்கள் நடித்த நாடகம்

● ''கவிஞர்கள் மேடை ஏறி நடித்தால்?'' என்று சிந்தித்தார் நாகநந்தி.

''ஆஹா! அப்படியே செய்தால் ஆச்சு'' என்றார் பாரதி அன்பர் இரா. சுராஜ்.


சேவா ஸ்டேஜ் அமைப்புக்காக திரு பி. எஸ். ராமையா வடிவமைத்த பாஞ்சாலி சபதத்தைத் தழுவி அமைந்தது நாடகம்.

பாஞ்சாலியாக நடித்த பெண் முதல், தேர்ப்பாகன், பணியாட்கள் என்று எல்லோருமே சைதாப்பேட்டை பாரதி கலைக் கழகக் கவிஞர்கள். இலக்கியப் பண்ணை ஆதரவில் நடந்தது நாடகம்.

மற்றவர்களைக் காட்டிலும் கவிஞர்கள், மகா கவியின் கவிதை வரிகளை ஜீவனுடன், உணர்ந்து பேசி நடிக்க முடியும் என்கிற நம்பிக்கையே இந்த முயற்சிக்குக் காரணம்.

சரி, ஆனால் வேஷம் போடாமலே நடித்திருந்தால் இன்னும் புதுமையாகவும் பரீட்சார்த்தமாகவும் அமைந்திருக்குமே!

-வெண்பால்



• நாகநந்தி



கல்கி-பாரதி நூற்றாண்டுப் போட்டி-8

சரியான விடை எழுதியவர் வரிசை தொடர்ச்சி :

101 சி. சுப்ரமணியம், வடிவீஸ்வரம், 102. எஸ். செல்லம், தஞ்சாவூர், 103 வெ. ரஞ்சனி, வேலூர், 104. ஆர். சம்பத், மன்னூர்புரம், 105. பி.எஸ். சீதா, தில்லை நகர், திருச்சி, 106. இ. பங்கஜம், இடலாக்குடி, 107. சீ. இராம்மோகன், கிருஷ்ணகிரி, 108. திருமதி சசிகலா செல்லையா, சென்னை-84 109. ஜி. பாலாஜி, தெப்பக்குளம், திருச்சி, 110. எம். சீதாலட்சுமி, கொசவம்பட்டி, 111. என். சியாமளா, கிழக்கு தாம்பரம், 112. எஸ். வீரலக்ஷ்மி, திருபுவனம், 113. வி. ராம்பிரகாஷ், ஊதியூர், 114. சுவர்ணம் சுப்பிரமணியம், காட்பாடி, 115. அ. மணி மேகலை, சிங்காநல்லூர், 116. அ. ம. வஞ்சி நாயகம், நீலிகோணம்பாளையம், 117. அ. குமரேச பிள்ளை, அம்பத்தூர், சென்னை-98, 118. எஸ். பத்மா, கல்யாணபுரம், 119. எஸ். மீனாட்சி, மதுரை-16:120. க. சந்தானம் குச்சிபாளையம்: 121. கே. பண்பாளன், மயிலாடுதுறை: 122. எஸ். வாஞ்சிஸ்வரன், பவானி: 123. ம. ஆனந்தன், எட்டயபுரம்: 124. கு. கணேசன், பேரையூர்; 125. ஆ. சிவராமன், பேட்டை; 126. ச. கண்ணன், சென்னை-8; 127. கே. ராஜலட்சுமி, புளியம்பட்டி, அருப்புக்கோட்டை; 128. எம்.எஸ். அமுதவல்லி, வேலூர்; 129. எம். ரேவதி, சென்னை-38; 130. தி. கி. இளந்திரையன், திருக்கடையூர்; 131. வெ. உஷா, திண்டுக்கல்; 132. எஸ். துரைசாமி, அத்திப்பாளையம்; 133. எஸ். சாவித்திரி அரவன் காடு; 134. இரா. வேங்கடராமன், உமையாள்புரம்; 135. பி.ஜி. கணேசன், பாராக்காடு; 136. டி. ரகுவீர தயாள், ராமநாதபுரம் ;137. எம். எஸ். பாலசுப்பிரமணியம், சென்னை-15; 138. ஞா. அன்பு ராஜ மாணிக்கம், சண்முகசிகாமணி நகர்; 139. ரா. நல்லினிதித்திலச்செலவி, கோவில்பட்டி; 140. ஆர். பொன்னுத்தாய், கொல்லப்பட்டி; 141. ஆர். ஜி. பிரபு ரங்கநாதன், திருச்சி-12; 142. மெ. ப. குமாரதாசன், கோம்பை; 143. பொன் பக்கிரிசாமி, நெய்வேலி; 144. ஆர். கமலி, சிவகெங்கை; 145. ஆர். ஜயலட்சுமி, திருச்சி-2; 146. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, மேலப்பாளையூர்; 147. பி. தங்கவேல், எலவம்பட்டி; 148. மு. தவமுருகேசன், எலவம்பட்டி போஸ்ட்; 149. வரதராசப் பெருமாள், எலவம்பட்டி; 150. ஆர். மணி, பொறையார்; 151. எஸ். கோமதி, சென்னை-33; 152. டி. ராஜா, தல்லாகுளம், மதுரை-2; 153. ஆர். கங்காதரன், மெலட்டூர்; 154. வி. ஜி. மைதிலி, கோயமுத்தூர்; 155. ஹரிஹர சுப்பிரமணியன், எடப்பாடி; 156. தா. பாரதி, வரகூர்; 157. எஸ். எஸ். பாலாஜி, ஈரோடு; 158. கே. வி. எஸ். மணி, சென்னை-23; 159. எஸ். பரந்தாமன், கொரட்டி போஸ்ட்; 160. மா. ச. தினதயாளன், போடிநாயக்கனூர்; 161. வி. மாலதி, கோயமுத்தூர்; 162. என். ராஜேந்திரன், கு.கோ. புதூர்; 163. என். அனுராதா, விசாலாட்சி நகர்; 164. செ. சம்பத், திருவரங்கம்; 165. அ. குணசீலன்,, கோ. புதூர்; 166. திருமதி ரமாமணி கனகராஜ், சிவகாசி; 167. இரா. மணி, எரணூர்; 168. வெ. கோபிநாத், கூடுவாஞ்சேரி; 169. எஸ். காயத்ரி, கோவை; 170. ஜி. காசியம்மாள், போளூர்; 171. ஏ. எஸ். சுருளு போளூர்; 172. எஸ். கிரிஜா, போளூர்; 173. எம். முத்துக்கிருஷ்ணன், புதுக்கோட்டை-1; 174. எம். சரஸ்வதி, அல்லிநகர்; 175. கே. ருக்மிணி, போளூர்; 176. எஸ். பேபி, கன்னிவாக்கம்; 177. டி. ராஜசேகரன், அல்லிநகர்; 178. எஸ். சாந்தகுமாரி, கண்டமாநூரிலிலை; 179. பா. சாந்தி மார்கரேட், திருத்துறைப்பூண்டி; 180. கூடல்மணியன், கடும்பலைக் கூடல்: 181. சியாமளா, சின்ன அம்மாபாளையம்; 182. பார்த்தசாரதி கண்ணன், கீழப்பழையூர்: 183. எஸ். புவனேஸ்வரி, காரைக்குடி; 184. எஸ். தனலட்சுமி, சென்னை-14; 185. எஸ். வெங்கட்ராமன், கோவை; 186. எல். ஜானகி, மேட்டுப்பாளையம், திருச்சி; 187. என். சுப்பிரமணியன், மதுரை; 188. சரோஜினி தேவி, செவ்வாய்ப்பேட்டை; 189. கோ. சுஜாதா, மதுரை-2; 190. எஸ். ரவிசுந்தரம், திருப்பூர்-1; 191. ஆர். சண்முகசுந்தரம், சென்னை-39;192. வி. ஸ்ரீவத்ஸன் சென்னை-33 193. ஸ்ரீமதி லட்சுமி ராமசேஷன், ஒரத்தநாடு; 194. ஆர். ஜயலட்சுமி, திருச்சி-2; 195. எஸ். டி. சேகர், சாத்தூர்; 196. எஸ். நந்தகோபால், மேலூர்; 197. டி. ராஜசேகரன், சாத்தான்குளம்; 198. ஆர். சங்கரன், திருச்சி; 199. டி. சந்திரசேகரன், பேரையூர்; 200. என். ராஜாத்தி, மேலூர்.

- இன்னும் வரும்



சீக்கிரம்! உங்கள் குழந்தையுடைய காயத்தின்
சிறந்த பாதுகாப்பிற்கு, உபயோகிப்பீர்
பாண்ட்-எய்ட் பிராண்டு டிரஸ்ஸிங்குகள்.

அவனது திறந்த காயத்தில் சிறிது அழுக்கு
இருந்தாலும் கூட தொற்றுப் பரவக் கூடும்.



தொற்றுக்கு எதிராக, திறந்த காயங்களின் பாதுகாப்பிற்கு உலகெங்கிலும் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள கிருபணமான ஆன்டி செப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலே, காற்றோட்டமளித்து விரைந் தாற்றும் நுண்துளைகள்; ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.



பாண்ட்-எய்ட் பிராண்டு டிரஸ்ஸிங்குகள்.

தொற்றுக்கு எதிரான மிகவும்
நம்பகமான பாதுகாப்பு.

Johnson & Johnson

ஒரு சங்கமத்தைத்

3

கார்த்திக் கலவரத்துடன் தன்னைச் சுற்றிப் பார்த்தான். கூட்டமாகச் சற்று முன் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த மாணவர்கள் சிதறல்களாகப் பிரிந்திருந்தார்கள். அடிபட்ட தலையையும், கையையும் பாதுகாத்தபடி ஹாஸ்டலை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். அலுவாலியா, பாண்டே, குப்தா — ச. காக்கைகள் இருந்த திக்கு தெரியவில்லை. சட்! எந்தப் பைத்தியக்காரத்தனத்தில் அவர்களுடன் கிளம்பினேன்!

அந்தப்பெண் மயங்கி விழுந்த நிலையிலும் நிர் விசாரமாய்த் தெரிந்தாள். மல்லாக்காக இருந்த சிவந்த முகம் சூரிய ஒளியில் பளபளத்தது. அழகிய மூக்கின் நுனி அலட்சியமாக வானை நோக்கி யிருந்தது.

''நான் கோழையில்லை!''

அந்தப் பார்வையும், அதிலிருந்த சூடும்!

எத்தனை அசட்டுப்பெண் இவள் என்கிற பரிதாபத்துடன் அவன் அவள் அருகில் குனிந்து, மண்டியிட்டு, அவளது தோளை லேசாக உலுக்கினான். தூங்குகிறவளை எழுப்புகிற மாதிரி. ரோஜா நிற ஸ்வெட்டருக்கடியில் உள்ளாடை தெரிந்தது. அரை வினாடி சலனத்தை உள்ளடக்கிக் கொண்டு கட்டை மாதிரி கிடந்த அவளையும் நிமிஷ நேரத்தில் வெறுமையாகிப் போன மைதானத்தையும் அவன் திகைப்புடன் பார்த்தான். சற்றுத் தள்ளி இருந்த மரத்துக்கடியில் முழங்கையைப் பிடித்தபடி ஒரு மாணவன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

''ஹேய்!'' என்றான். ''எனக்கு ஒரு உதவி வேண்டும். இந்தப் பெண் மயங்கி விழுந்திருக்கிறாள். ஹாஸ்டலுக்கு அழைத்துப்போகலாம். முதலுதவிக்கு ஒரு கை கொடு!''

''எனக்கே முதலுதவி வேண்டும். இதைப் பார்!''

வலது கையை அவன் தூக்கிக் காண்பித்தான். இரத்தம் தெரிந்தது.

''இன்னொரு கை சரியாக இருக்கிறதல்லவா? அந்தக் கையைக் கொடு. நீயும் வா!''

''அவள் கனமாக இருக்க மாட்டாள். நீ ஒருத்தனாகத் தூக்கலாம்!''

''தூக்கிப் பழக்கமா?''

''இவளை இல்லை!''

அந்தச் சந்தர்ப்பத்திலும் எப்படிப் புன்னகைக்கத் தோன்றுகிறது என்கிற மெல்லிய குற்ற உணர்வுடன் குனிந்து அவளுடைய முதுகுக்கடியிலும் தொடைக்கடியிலும் கையைக் கொடுத்துத் தூக்கப் பார்த்து முடியாமல் மறுபடி யத்தனிக்கையில் அந்தப் பையன் சிரித்துக் கொண்டு வந்து தனது இடது கையால் ஆதாரம் கொடுக்க, கார்த்திக் அவளைத் தூக்கியபடி நிமிர்ந்தான்—

''தரையிலிருந்து தூக்குவது சிரமமாயிருக்கிறது 'யார்'!''

''அடிபட்டுக் கீழே விழும்போது பின்னே கட்டிலிலா விழுவார்கள்?''

காரணம் புரியாமல் காது நுனி சிவந்தது. மனசு கிளுகிளுத்தது.

உண்மையிலேயே அவள் லேசாக இருந்தாள். பூப்போல் தலைகாணியைத் தூக்கினாற்போல் அவளது முழங் கைக்கு வெளியில் கண் மூடிய நிலையில் தொங்கிய அந்த முகத்தை அவன் கவலையுடன் பார்த்தான். தலை மயிரில் ரத்தப் பிசுக்கிருந்தது.

''ஐ ஹோப் இட் இஸ் நாட் ஸீரியஸ்!''

''எது?''

''இவளுக்குப் பட்டிருக்கும் அடி!''

''ஓ. ஒன்றும் இருக்காது. கவலைப்படாதே. இவளுக்கு இது புதிதில்லை. அடிபட்டு விழுவதற்கே இவள் முன்னால் வந்து நிற்பாள். ஷி இஸ் கிரேஸி!''

''இவளைத் தெரியுமா உனக்கு?''

அவன் சட்டென்று பதில் சொல்லாமல் தனது முழங்கையிலிருந்து வழியும் ரத்தத்தைச் சற்று யோசனையுடன் பார்த்து பிறகு சாதாரணமாகச் சொன்னான்.

''தெரியாமல் என்ன? ஹிந்து காலேஜ் பூராவுக்கும் தாரா என்றால் தெரியும். அழகும் துடுக்கும் உள்ள பெண் யாருடைய கவனத்திலிருந்தாவது தப்ப முடியுமா?''

கார்த்திக் வேகமாக நடந்தான். ''எந்தப் பக்கம் போக வேண்டும் என்று சொல்!''

''இப்படித்தான் கொஞ்ச தூரம். நீ எந்தக் காலேஜ்?''

''இன்ஜினீரிங் காலேஜ்!''

''அட! நீ எங்கே இங்கே வந்து மாட்டிக் கொண்டாய்?''

அவன் உதட்டைப் பிதுக்கினான். அம்மா இதற்குப் பதில் சொல்லி யிருப்பாள்.

''போறச்சே பிள்ளையாருக்கு நமஸ்காரம் பண்ணிட்டுப் போடான்னேன்...!''

முதலுதவி அறையில் ஏழெட்டுப் பேர் உட்கார்ந்திருந்தார்கள். கூட்டல் குறிபினாஸ்தருடன் பழகிவிட்ட யதார்த்தத்துடன் ஒரு இளம் டாக்டர் ஒருத்தனுக்கு பாண்டேஜ் சுற்றிக் கொண்டிருந்தார். கார்த்திக்கின் சுமையைப் பார்த்து லேசாகப் புன்னகைத்தார்.

''ஆ. எங்கே நமது வழக்கமான காஷுவாலிடியைக் காணோம் என்று பார்த்தேன்! இங்கே கிடத்து!''

கிடத்துகையில் கூடப் பிடித்துக் கொண்டார்.

நாடியைப் பிடித்து. கண் இமைகளைப் பிரித்து. பின் மண்டையில் இருந்த சின்னக் காயத்தைப் பார்த்து.

''ஷீ வில் பி ஆல்ரைட்!'' என்றார். பேசிய படியே அவசரமாக ஈரத் துணியால் பின்னங் கழுத்தையும் முகத்தையும் தேய்த்துத் துடைத்தார். அவள் லேசாக முனகினாள்.

தேடி

''அவளுடைய வீட்டவர்களுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டாமா?'' என்றான் அவன் கவலையுடன்.

''அவசியமில்லை. ஒரு மணி நேரத்தில் அவளே வீட்டுக்குக் கிளம்பிப் போய்விடுவான். தெரிவித்தோமானால் கெட்ட கோபம் வந்துவிடும் அவளுக்கு.''

பூ மாதிரி நிராதரவாய்ப் படுத்திருக்கும் அவளைப் பற்றிய இவர்களது வர்ணனைகளைக் கேட்டு அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அலை யலையாய்க் கரிய கூந்தல் தோளுக்குச் சற்றுக் கீழ்வரை சரிந்திருந்தது. டாக்டர் துடைத்த துடைப்பில் கன்னங்களின் சிவப்பு

வாஸந்தி





அருள்வாக்கு

● ஒவ்வொரு ஊரிலும் அநேக சங்கங்கள், மன்றங்கள், குழுக்கள் நிறுவப் படுகின்றன. இவை ஒவ்வொன்றும் மற்றவைகளுடன் முரண்பட்டு ஊரிலும் நாட்டிலும் வெறுப்பு, கசப்பு, புரட்சி முதலியவைகளுக்குக் காரணமாக முடிகிற நிலைக்குக் கொண்டு விடுவதையும் நிறையப் பார்க்கிறோம். ஆதலால் எல்லாக் கசப்பையும் இனிப்பாகமாற்றக்கூடியதும், எல்லாப் புரட்சிகளையும் அன்பாக மாற்றக் கூடியதுமான ஒரு கழகம் நமக்குத் தேவையாகிறது. பக்தி மார்க்கம் என்னும் வழிபாட்டைப் பரப்பும் கழகங்களே இவை.

எனவே நம் தேசத்தில் உள்ள அத்தனை லட்சம் கிராமங்களிலும் சாந்தம் பரவ ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு வழிபாட்டுக் கழகம் நிறுவ வேண்டும். நாம் எல்லோரும் முனைந்து முயற்சி செய்து ஈசன் அருளைத் துணையாகக் கொண்டு இப்பணியை முடித்தாக வேண்டும். இதனால் நாமும் சீர்ப்பட்டு, நம் நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் சீர்ப்பட்டு நாடே அன்புமயமாகும். நம் ஒரு நாட்டின் உதாரணத்தின் மூலம் உலகமும் சாந்தியாகி, ''லோகா: ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து''—''வையகம் துயர் தீர்க்கவே'' என்ற நமது வேத நெறியின் சிறப்புக் கொள்கை புத்துயிர் பெற்று நிலவும். நாம்தான் அப்படி நிலவ வைக்க வேண்டும். இப்பணிக்கே நம் ஆயுளை அர்ப்பணிக்க வேண்டும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சிகளாலோ, பண வீக்கம் முதலியவைகளாலோ பரஸ்பர அவநம்பிக்கைகளாலோ ஏற்படக் கூடிய எந்தப் புரட்சியையும் வெகு சாந்தமானமுறையில் சமாளிக்கக் கூடிய வழிபாட்டுக் கழகங்களை நிறுவும் பணியில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு எஞ்சியிருக்கும் நமது வாழ் நாட்களை இதிலே பயன்படுத்தித் தொண்டு புரிவோமாக. ''நம் கடன் பணி செய்து கிடப்பதே!''

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்

அதிகமாய்ப் பளபளத்தது. எத்தனை திருத்தமான மூக்கும் கண்ணும் இவளுக்கு! பள்ளிக்கூடப் புத்தகங்களில் வரும் தேவதையின் உருவம் மாதிரி....

அவன் தோள் மேல் யாரோ கை வைத்தார்கள். சட்டென்று சுய நினைவு வந்து நிமிர்ந்தான்.

அந்த மாணவன் வலக் கையில் பான்டேஜ் ஏறியிருந்தது.

''நான் கிளம்புகிறேன். நீ கிளம்பவில்லையா?''

கார்த்திக் சின்னத் தயக்கத்துடன் சொன்னான்: ''அவளை அவள் வீட்டில் கொண்டு விட்டுப் போகலாமென்று நினைத்தேன்.''

''அவசியமில்லை 'யார்' நேரத்தை வீணாக்காதே. ஒரு மணிப் போதில் ஒன்றுமே நடக்காத மாதிரி எழுந்து வீட்டுக்குப் போய் விடுவாள். எங்களுக்கு அவளைத் தெரியும்.''

கார்த்திக் அவளை ஒரு முறை பார்த்துத் தோளைக் குலுக்கி 'ஓ.கே.' என்றபடி கிளம்பினான்.

வெளியில் பளிச்சென்று வெயில் அடித்தாலும் குளிர்ந்து. திடீரென்று நினைவு வந்தவன் போல் ''ஐ ஆம் கார்த்திக். இன்ஜினீரிங் ஃபைனல் — நீ?'' என்றான்.

''என் பெயர் விஜய். விஜய் அகர்வால். காமர்ஸ் ஃபைனல்.''

இப்பொழுது நிறைய மாணவர்கள் தென்பட்டார்கள். தங்களுக்குள் காரசாரமாக விவாதித்துக் கொண்டு நடந்தார்கள். போலீஸ் தொப்பிகள் நிற்கும் இடத்தில் குரலைத் தாழ்த்திக் கொண்டார்கள்.

''தி பாஸ்டர்ட்ஸ்!'' என்றான் விஜய்.

''யார்?''

''எல்லாரும்! ஒட்டு மொத்தமாக எல்லாரும்! கரம்சாரிகள், டீச்சர்கள், மாணவர்கள், அரசியல்வாதிகள், போலீஸ்காரர்கள் எல்லாரும்!''

அவன் குரலிலிருந்த கோபம் அடி வயிறு வரை மிக ஆழமாகத் தாக்கிற்று. கார்த்திக்கின் உணர்வலைகள் உலுக்கப்பட்டாற் போல் சிலிர்த்து நின்றன.

''இந்த வருஷம் பூராவும் ஒன்று மாற்றி ஒன்று எதற்காவது ஸ்டிரைக். பாடங்கள் சேர்ந்தாற்போல் பத்து நாட்கள் நடக்கவில்லை. யூனிவர்சிடி முழுவதும் அரசியல்! அரசியல் கட்சிகளைச் சார்ந்த மாணவர்கள்; அவர்களைக் கிளப்பி விடும் அரசாங்கம்... தூ! மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றி எந்த எஜுகேஷன் மினிஸ்டருக்குக் கவலை இருக்கிறது?''

விஜயின் தொண்டை அடைத்துக்கொண்டதிலிருந்து கவலை அவனுக்குத்தான் அதிகம் என்று தெரிந்தது.

''இப்பொழுது பார். பாடங்களே வருஷம் முழுவதும் ஒழுங்காக நடக்கவில்லையென்று பரீட்சைகள் வைக்க விட மாட்டார்கள். பரீட்சை இல்லை யென்றால் ஒரு வருஷம் ஒவ்வொரு மாணவனுக்கும் போயிற்று. மை காட்! ஒரு முழு வருஷம் விரயம்! பன்னிரண்டு சம்பள மாதங்கள் போய்விடும் யார்!''

கார்த்திக் தன்னை யறியாமல் அவன் தோள் மேல் கையைப் போட்டான்.

''டேக் இட் ஈஸி விஜய்!''

''அது ஒன்றுதான் சுலபமான வார்த்தை. கொஞ்ச காலம் போனால் எனக்கும் அந்த ஜடத்தனம் வந்து விடும். இப்பொழுது என்னுள் ஏற்படும் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. அரசாங்கம் ஸ்டிரைக் செய்கிறவர்களைக் குறை சொல்கிறது. ஸ்டிரைக் செய்பவர்கள் அரசாங்கத்தைத் தாக்குகிறார்கள். இடையில் நாம் — நம் எதிர்காலம் — ஆனால் அதைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள் என்று நினைக்கிறாய்? நோபாடி!''

அவனது துக்கத்தை ஆத்திரத்தை நிறுத்த முடியாது என்று தோன்றிற்று.

''போன வருஷம் என் அப்பா இறந்து போனார். எனக்கு அடுத்து இரண்டு தம்பிகள் ஒரு தங்கை. நான் எப்பொழுது சம்பாதிக்க ஆரம்பிக்கப் போகிறேன் என்று என் வீடு காத்திருக்கிறது கார்த்திக்!''

கார்த்திக் அவனுடைய தோளைக் கனிவுடன் தட்டினான். சமாதானமாக எந்த வார்த்தை சொன்னாலும் அதற்கு அர்த்தமிருக்காது என்று தோன்றிற்று. இவனுடைய துக்கமும் ஆதங்கமும் மிக சத்தியமானது. இவனைப் போல் ஆயிரக் கணக்கான இளம் நெஞ்சங்கள் துக்கத்தையும் ஆத்திரத்தையும் இன்று சுமந்து கொண்டு நிற்கும் என்று தோன்றிற்று. வாழ்விலிருந்து நழுவிப் போன ஒரு வருஷத்துக்காக, அந்த நழுவலின் காரண கர்த்தாக்களை மன்னிக்க முடியாத கோபத்துடன் ஆயுள் முழுவதும் கடினமாக மாறப்போகும் நெஞ்சங்கள் — ஒரு கோபக்கார சமுதாயத்தை உருவாக்கப் போகும் அடிக்கல்கள்.....

விஜய் இன்னும் ஏதோ படபடத்துக் கொண்டிருந்தான்.

''நிலைமையைச்சீர்ப்படுத்தவேண்டும் என்று யாருக்கும் அக்கறை இல்லை. நோபாடி கேர்ஸ்! இவர்கள் வைஸ் சான்ஸலரைக் கெராவ் செய்து என்ன ஆகப் போகிறது? அடிபட்டுக் கொண்டு பிளாஸ்டர் போட்டுக் கொள்வது ஒன்றுதான் லாபம்!''

அவனுக்கு மறுபடி தாராவின் நினைவு வந்தது. எழுந்து உட்கார்ந்திருப்பாளா? தனியாக வீட்டுக்குத் திரும்பக் கூடிய நிலையில் இருப்பாளா?

''என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்று வந்தேன். அதற்குப் பலன் கையில் கிடைத்து விட்டது. தாராவைப் போல் பித்தலாட்டக்காரர்களுக்குத்தான் இந்த மாதிரி அடிபட்டுக் கொள்வதில் திருப்தி ஏற்படும்.''

இவனுக்கு எல்லார் மேலும் எவ்வளவு கசப்பு! கார்த்திக் மென்மையாகச் சிரித்தபடி கேட்டான்.

''அவளை ஏன் பித்தலாட்டக்காரி என்கிறாய்?''

''பின்னே என்ன? அவள் அப்பா ஒரு ப்ரைவேட் கம்பெனியில் ஜெனரல் மானேஜர். இவள் பேசுவது கம்யூனிஸம்! நுனி நாக்கு மார்க்ஸிஸம்! இங்கிருந்து நேராகப் போய் ஹீட்டர் போட்ட அறையில் டன்லப்பில்லோவில் தூங்கப் போகிறாள்!''



பழமொழிகள்.

- எதிரி ஓடிவிட்டால் எவனும் வீரன் தான்! —ஸ்லோவேகியா

- பழைய சட்டை அணிந்தாவது புதிய புத்தகம் வாங்கிப் படி. —பிலிப்பைன்ஸ்

- குழந்தை பேசுவதெல்லாம் அடுப்பங்கரையில் கற்றது. —இங்கிலாந்து

—விஜயகுமார்

கார்த்திக் தனக்குள் புன்னகைத்தபடி நடந்தான்.

பூ மாதிரி இருக்கும் அவளா? கம்யூனிஸ்டா?

''பித்தலாட்டக்காரியோ என்னவோ, அசாத்தியத் துணிச்சல்காரி!''

''பிரயோஜனமில்லாத, ஆக்கமற்ற துணிச்சல்!''

கார்த்திக் தன்னுள் மூழ்கியவனாய் நடந்தான். அந்தத் துணிச்சலில் எத்தனை கவர்ச்சி இருந்தது!

''ஒரு மதராஸி அத்தனை துணிச்சலாக இருப்பது ஆச்சரியம்தான்!''

கார்த்திக் திடுக்கிட்டு நிமிர்ந்தான். ''மதராஸியா? இந்தத் தாராவா?''

''ஆமாம்.''

''தமிழ் பேசுபவளா?''

''அப்படி யென்றுதான் நினைக்கிறேன். அவள் அப்பாவின் பெயர் கிருஷ்ணமூர்த்தி. அப்படி யென்றால் என்ன பாஷை?''

கார்த்திக் சிரித்தான்.

''எது வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அவள் என்ன பாஷை பேசினால் எனக்கென்ன? அவள் லைன் வேறு என் லைன் வேறு!''

''ஆ அதுதான் சரி. அவளுடைய சகவாசமெல்லாம் உனக்கு வேண்டவே வேண்டாம்.''


கார்த்திக்குக்கு மறுபடி சிரிப்பு வந்தது.

''அதென்ன அத்தனை கண்டிப்பாகச் சொல்கிறாய்?''

''கண்டிப்பில்லை. எச்சரிக்கை செய்கிறேன். ஏனென்றால் நீ ரொம்ப சாதுப் பையனாகத் தெரிகிறாய். வெறும் சாதுத் தன்மை இல்லை. — சாத்விகம் தெரிகிறது. முகத்தில்.''

கார்த்திக் பக்கென்று சிரித்தான்.

''இதுதான் நான் இன்று கேட்ட முதல் ஜோக்!'' (தொடரும்)



உன்னை ஒன்று

தேன்மொழி சிந்தனையுடன் நகங்களைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தாள். அவளுடைய முதுகுப் பக்கமாய் நீலக் கடலலைகள் நிம்மதியில்லாமல் அலைந்து கொண்டிருந்தன.

பிரபு எங்கே?

அலுவலகத்துக்குப் போன் அடித்து 'அஞ்சரை மணிக்கு உழைப்பாளிகள் சிலை அருகே வா' என்று சொன்னவன், மணி ஆறாகியும் இன்னும் காணோமே?

பிரபு! மூன்று வாரமாய் எங்கே உன்னைக் காணோம்?... உன் ஆபிசில் விசாரித்ததற்கு, நீ மெடிகல் லீவ் போட்டிருப்பதாய்ச் சொல்லி ஊருக்கும் போய் விட்டதாகச் சொன்னார்களே...., திடீரென்று இன்று உன்னிடமிருந்து போன் வந்ததும் நான் திக்கு முக்காடிப் போய் ''எங்கே பிரபு தொலைந்து போனாய்'' என்று சீறியதற்கு வழக்கம் போல் வாயடித்துப் பேச்சை வளர்க்காமல் ''நேரில் வந்து சொல்கிறேன்'' என்று ஒற்றை வரியோடு பேச்சை முடித்து போனை வைத்துவிட்டாயே... ஏன் பிரபு, ஏன்?

தேன்மொழி சிலையைப் பார்த்தாள். அங்கே அந்தக் கருங்கல் உழைப்பாளிகள் நரம்பு புடைக்க நம்பிக்கையோடு இன்னும் தெம்பிக் கொண்டே இருந்தார்கள். பாறையும் அப்படியேதான் இருக்கிறது....

மணி ஆறு இருபது. மெல்ல இருட்டிக் கொண்டு வந்தது. கைப்பை மடியில் உட்காருவதும், மார்பில் பதிவதுமாய் இருந்தது.

வீட்டில் அப்பா மௌனமாய் இவளை எதிர்பார்த்துக் கொட்டக் கொட்ட விழித்தபடி கட்டிலில் கிடப்பார். பாரிச வாயு அவரை மூச்ச விடும் பிணமாகவே ஆக்கியிருந்தது. தேன்மொழி வந்து பேசினால்தான் அவர் கண் வழியே சிரிப்பார். சினப்பார் கண்டிப்பார்... கனிவுடன் பார்வையால் வருடுவார்...

அம்மாவும் இப்போது வாய் விட்டுப் புலம்பத் தொடங்கியிருப்பாள். அப்பாவுக்காக, குடும்பத்துக்காக உழைத்து உழைத்து லொட லொடத்து விட்ட பழைய மெஷின் அவள். அவளுக்கும் காடராக்ட் பழுத்து விட்டது. தடவித் தடவி நடக்கிறாள். கீழே விழுந்து, கையைக் காலை உடைத்துக்கொள்வதற்குள் அவளுக்குக் கண் ஆபரேஷன் செய்துவிட வேண்டும். ஏற்கனவே பி.எஃப். லோனைச் சுரண்டியாகி விட்டது. பண்ட பாத்திரங்களை விற்றுத்தான் அம்மாவுக்குப் பார்வை கொடுக்க வேண்டும்.

தங்கை ஜானு தையல் கிளாஸை முடித்து விட்டு இந்நேரம் டைப்ரைட்டிங் கிளம்பியிருப்பாள். கல்லூரிக்குப் படிக்க விடவில்லையே என்று அக்கா மீது அவளுக்கு இன்னும் கோபம். வழியில் எவனாவது அவளிடம்

குறும்பு செய்கிறனே என்னவோ போன வாரம் கூட எவனே ஒரு விடலே, அவள் பெயருக்கு மொட்டையாய் ஒரு லவ்லெட்டர் பச்சை நடையில் இறுக்கி யிருந்தான். நான் அவளுக்காகவாவது சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டும்.

கடைக்குட்டி மீனுட்சி சூம்பிப்போன கால்களுடன் வாசலில் உட்கார்ந்து தெருக் குழந்தைகள் ஓடி விளையாடுவதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருப்பாள். பத்து நாட்களாய் காட்பரீஸ் சாக்லேட் கேட்டுக் கொண்டிருந்தாள். வாங்கிக் கொண்டு போக வேண்டும்.

''சாரி... தேன்... கொஞ்சம் லேட்டா யிடுச்சு!''

முழங்காலில் புதைந்திருந்த முகத்தைச் சட்டென நிமிர்த்தினுள் தேன்மொழி. பிரபு.

அடர்ந்த புருவங்களும், அகன்ற விழிகளுமாய் வந்து உட்கார்ந்த பிரபுவைத் தேன்மொழி பார்வையால் பருகினுள். ''பிரபு! உன்கூட இனி நான் பேசவே மாட்டேன். போ...''

பிரபு தேன்மொழியை உற்றுப் பார்த்து விட்டுத் தலே கவிழ்ந்தான். தேன்மொழி அவனது நெளி முடியில் கைவிட்டு விரல்களால் அளேந்தபடி. ''ஏய் பிரபு! மூணு வாரமா உன் ஒட்டக மூஞ்சியைப் பார்க்காமே நான் பாலேவனமா ஆயிட்டேன். தெரியுமா?... சீ நான் ஒரு லூஸ்! பேச மாட்டேன்னு சொல்லிட்டு நானுப் பேசறேன்... ஏய், ஏன் இப்படி உம்மணு மூஞ்சியாட்டம் இருக்கே?'' சிரித்துக் கொண்டே சிக்கென்று அவன் முடியைப் பிடித்து நிமிர்த்தியவள் திடுக்கிட்டாள்.

பிரபுவின் கண் கலங்கி யிருந்தது.

''பிரபு... எங்கே... என்னேப் பார்... ஏன் கண் கலங்கறே... என்கிட்டே சொல்... எதுவானுலும் சொல்...''

பிரபு சொன்னுன். ஊரிலிருந்து அவனுடைய அப்பாவிடமிருந்து திடீரென்று தந்தி வந்ததைச் சொன்னுன். செல்வாக்குள்ள வட்டார அரசியல்வாதி ஒருவரின் மகளுக்கு மாப்பிள்ளேயாக இவனேப் பெரியோர்களாக நிச்சயித்துக் கொண்டதைச் சொன்னுன். தனது எதிர்ப்புக்களே யெல்லாம், தமக்கைகளுக்குத் தந்த வரதட்சணேகளால் கடனில் மூழ்கியிருக்கும் அப்பாவின் கண்ணீர் நசுக்கி விட்டதைச் சொன்னுன்.

எல்லாம் சொல்லி விட்டுக் கல்யாண அழைப்பிதழை எடுத்து நீட்டினுன். ''என் கல்யாணத்துக்கு வராதே. தேன்... என்னுலே தாங்க முடியாது! நீ இங்கே இருந்து மனசார வாழ்த்தினுலே போதும்'' என்று புலம்பினுன்.

சில மௌன நிமிடங்களுக்குப் பின் தேன்மொழியை நிமிர்ந்து பார்க்கத் துணிவில்லாமல் குனிந்த தலேயோடு திரும்பி நடந்தான்.

கேட்பேன் – முத்து. தங்க. ஐயப்பன்



தேன்மொழி திகைத்துச் சிலையாக அமர்ந்திருந்தாள். கையில் திருமண அழைப்பிதழ் பாறையாகக் கனத்தது. கடல் அலைகள் வெறுமையாய், வெறுமையாய்க் கரையில் மோதிச் சிதறின.

● ● ●

அதன் பின் வந்த ஒவ்வொரு இரவிலும் தேன்மொழி இரகசியமாய் உடைந்தாள். தலையணை, அவள் கண்ணீரால் நனைந்து நனைந்து நைந்தது.

பிரபு...என் உயிருக்குயிரான காதலனே... நீயா இப்படிச் சொல்லி விட்டாய்? நம் காதல் உண்மை அல்லவா? நீ என்னைக் காதலித்தது சத்தியம் அல்லவா? பிறகு ஏன் கடன்காரர்களிடம் அனுமதி வாங்காமல் நீ என்னைக் காதலித்தாய்?

திரும்பிப் பார்த்தாள். தன் ஒருத்தியின் உழைப்பை, வருமானத்தை நம்பியிருக்கும் எளிய குடும்பம்... உடைந்த பானைகளாய் அப்பா.... அம்மா.... உருவாகி வரும் சிலைகளாய் ஜானு.... மீனு... கரையும் மெழுகுவர்த்தியாய்த் தனது வாழ்க்கை!

பிரபு! இருபத்தாறு வயதும், இளமையுமாய்த் திசை தெரியாமல் தடுமாறும் நான் ஒண்டிக் கட்டையாய் எப்படி இதைச் சமாளிக்கப் போகிறேன்?

''கவலைப்படாதே தேன்... நம் கல்யாணத்துக்கு அப்புறம் நான் உன் குடும்பத்தைக் கவனிச்சுக்கிறேன்....''

''வேணாம் பிரபு... என் சம்பளத்தை மட்டும் ஒரு பத்து வருஷத்துக்கு என் குடும்பத்துக்கு நான் முழுசாய்த் தர நீ அனுமதி தரணும்... அதுக்கு மட்டும் நீ சம்மதிச்சா போதும்.''

''ஓ.கே. சேங்ஷண்ட்!''

பிரபு என்னையும் என் கவலைகளையும் தனியே விட்டுவிட்டு உன்னால் சட்டென்று எப்படி விலக முடிந்தது? நினைக்க நினைக்கத் தேன்மொழிக்குத் தன்னிரக்கமும், சுயவெறுப்பும் மேலோங்கியது. ஒருமுழம் கயிறு, அரை டின் மண்ணெண்ணெயா என்று மனம் திசை திரும்பும்போதெல்லாம் திடுக்கிட்டு விழிப்பாள்.

எழுந்து மீனுட்சியின் அருகே சென்று அவளை அணைத்துக் கொண்டு படுப்பாள்.

● ● ●

நான்கு மாதங்களுக்குப் பின்—

அதே உழைப்பாளர் சிலை. ஓயாத கடல் அலைகள். தேன்மொழி நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள். எதிரே அவளது மானேஜிங் டைரக்டர் ராம்பிரசாத் உட்கார்ந்திருந்தார்.

''தேன்மொழி... என் குடும்ப விஷயம் உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன். ஏழைக் குடும்பத்திலே பிறந்து நேர்மையா உழைச்சு இன்னைக்குக் கொஞ்சம் வசதியோட இருக்கேன். என் மனைவி ரெண்டு வருஷத்துக்கு முன்னே ஸ்டவ் ஆக்ஸிடெண்டிலே இறந்துட்டா. அவளை என்னால மறக்க முடியலே. அதுக்காக இந்த முப்பத்து மூணு வயசிலேயே வாழ்க்கையை வெறுமையாக் கணும்னு நான் விரும்பலே....''

தேன்மொழி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''பெர்சனலா உன்கிட்டே பேசணும்னு ஆபிசிலே நான் சொன்னது இதைப் பத்தித்தான்... தேன்மொழி! உன் உருவம், குணம், பழக்க வழக்கம் எல்லாம் எனக்கு... எஸ்... நீ விரும்பினா, நம் கல்யாண ஏற்பாடுகளைத் தொடங்கறேன்... வாட் டு யு திங்க்?''

தேன்மொழி மௌனமாய் இருந்தாள்.

''உன் குடும்பப் பிரச்னையெல்லாம் எனக்குத் தெரியும். உன் குடும்பத்துக்குப் பாதுகாப்பா எப்படி எப்படி ஏற்பாடு பண்ணிக்கலாம்னு நீ விரும்பறியோ அப்படியே செய்யலாம்.... எனக்கு நீ வேணும்.... உன் மூலமா நிம்மதி வேணும்... தட்ஸ் ஆல்! ஓ.கே?... நீ இப்ப மனம் திறந்து பேசணும். உனக்கு என்ன வேணுமோ அதை என்கிட்டே தயங்காமக் கேக்கணும். தாராளமா கேக்கணும். கமான்....''

தேன்மொழி மௌனமானள். எம்.டி. ராம்பிரசாத் வற்புறுத்தினர். மூன்றாவது, நான்காவது தடவையாய் அவர் வற்புறுத்தியதும் தேன்மொழி விசும்பலோடு வெடித்தாள்.

''சார்... எனக்கு உங்களை மாதிரி அன்பும், ஆண்மையுமா ஒரு அண்ணன் வேணும் சார்... என்னைக் காதலிக்கிறதாச் சொல்லிட்டுக் கைவிடாம, என் கவலைகளையும், கஷ்டங்களையும் கேட்டு, என் கண்ணீரைத் துடைக்க ஆறுதல் சொல்றதுக்கு ஒரு அண்ணன் வேணும் சார்... அண்ணன் வேணும்! எனக்கு அண்ணனா நீங்க இருக்கீங்களா? சொல்லுங்க சார், எனக்கு அண்ணன் வேணும்! நிஜமான அண்ணன் வேணும்!''

முகத்தை மூடிக் கொண்டு குலுங்கக் குலுங்க அழும் தேன்மொழியைப் பார்த்துத் திகைத்தார் எம்.டி. ராம்பிரசாத்.

நம்மவர்கள் பெண் பார்க்கச் சென்றால் பெண்ணை நேரில், பஜ்ஜியைக் கொறித்துக் கொண்டே கண்டு களிக்கலாம்! ஆனால் ஆப்கானிஸ்தானத்தில் ஒரு வினோதமான முறை தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வருகின்றனர். பையனும் பெண்ணும் ஒரு நிலைக் கண்ணாடி முன்பு அமர்த்தப் படுவார்கள். அவர்கள், ஒருவரை மற்றவர் நேரடியாகப் பார்த்துக் கொள்ளக் கூடாது! கண்ணாடியின் மூலமாகத் தான் பார்த்துச் சம்மதம் கூற வேண்டும்!

ஆர். அரிகோபி





HTB-PEI-8895

அத்தியாயம் 5

வெய்யில் உறைக்கிறபோது விஸ்வநாதன் பல் தேய்க்க ஆரம்பித்தான். அடிவயிறு கனத்துக் கொண்டு புரண்டது. அவசரம் அவசரமாய் வாய் கொப்பளித்து விட்டுப் பின் பக்கம் போனான். தூக்கம் இன்னும் கண்ணுக்குள்ளேயே முட்டிக் கொண்டு நின்றது. ஜில்லென்று தலையில் ஜலம் படுகிறவரை இப்படித் தூக்கம் முட்டி முட்டிச் சாய்க்கும். அப்பா... வயிறு எக்கிச் சுருண்டது. நெகிழ்ந்தது.

''எப்பப் பார்த்தாலும் கண்ணுல எப்படி தூக்கம் நிக்கும். படுத்துண்டா பான்னு தூங்கிப் போயிடணுமா எனக்குத் தான் அந்தக் கொடுப்பினையே இல்லே. புரண்டு புரண்டு படுத்தாலும் தூக்கம் வர மாட்டேங்கிறது. நேத்து இரண்டு மணி ரயில் போற வரைக்கும் தூக்கமே இல்லே.'' தாரிணி எழுப்புகிற போதெல்லாம் சொல்லுவாள்.

''உழைக்கிறவனுக்குத்தான் தூக்கம்வரும். உனக்கென்ன... நாள் பூரா உட்கார்ந்த படியே இருக்கே. இது தவிர பகல்ல ஒரு குட்டித்தூக்கம். எப்படிராத்தூக்கம் வரும்?''

பதில் சொல்லத் தோன்றும். சொல்ல மாட்டான்.

''நானு... உழைக்கிறதில்லேயா... சொல்வேன். இதுவும் சொல்வேள். இதுக்கு மேலயும் சொல்வேள். அஞ்சு வயசும் மூணு வயசுமா ரெண்டு குழந்தைகளை விட்டோட வச்சுண்டு ஒரு நாள் நில்லுங்களேன். ஒரே ஒரு நாள் கவனிச்சுக்கோங்களேன் பார்க்கலாம். மூணு ஆள் வேணும் இதுகளை மேய்க்கறதுக்கு. ஒருத்திக்கு அலம்பி விட்டு நிமிருவேன். இன்னொன்று உடம்பு பூரா ஆக்கிண்டு நிக்கும். அலம்பி விட்டே பாதி பிராணன் போறது.''

''அப்போ ஏன் தூக்கம் வரலே?'' விஸ்வநாதன் கேட்கவே வேண்டாம். தாரிணியே

தாரிணி தினம் ஏதாவது கனு சொல்லுவாள். கதை சொல்வது மாதிரி கனு சொல்லுவாள். நீள நீளமாய் முடிவில்லாத நந்தவனம். கட்டிக்கொள்ளவே முடியாத கூரைப் புடவை. அடையவே முடியாத மலை உச்சி. சாப்பிடவே முடியாத தோசை என்று கனு சொல்லுவாள்.


விஸ்வநாதனுக்கு ஆச்சரியமாய் இருக்கும். இது அத்தனைக்கும் காரணம் இவள் பகல் பொழுது நீண்டதாய் இருப்பதுதான்னு என்று தோன்றும். 'அஞ்சு மணிக்கு வந்து கூட்டிண்டு போறேன்னு சொன்னேள். இரண்டு மணிக்கு எழுந்து பால் காய்ச்சிக் காப்பி குடிச்சு தோசை வாத்துட்டு மூணு மணிக்கு இதுகள் ரெண்டையும் குளிப்பி, தலை பின்னி பவுடர் போட்டு நாலு மணி லேர்ந்து காத்திண்டிருக்கேன். எட்டு மணிக்குச் சாவகாசமா வரேள். என்னத்தைச் சொல்ல. சென்னு போயிடுத்து.'

வேறு காரியமற்று இவன் வருகை மட்டுமே குறித்து இதற்கெனவே திட்டமிட்டு ஒவ்வொரு மணி நேரத்தையும் ஒவ்வொரு நிமிடத்தையும் முன் மேல் நின்ற வண்ணம் கடந்திருக்கிறாள். இவள் வேறு எப்படிக் கனவு காண முடியும்? முடிவே இல்லாத நந்தவனம், அடைய முடியாத மலை உச்சி, சாப்பிட முடியாத தோசை. விஸ்வநாதனுக்குச் சிரிப்பு வரும். பாவமாயும் இருக்கும். கனவுகள் நொடிப் பொழுதுதான். ஆனால் இவளுக்கு அந்த உள் மன நொடிகளும் அலுப்பு ஊட்டும் நெடிய பொழுதாய்ப் போகின்றன.

தனக்கு வரும் கனவுகளோ தன் மனம் போலவேபரபரப்பாய்த் தலை தெறிக்கிற ஓட்டமாய் குதிரைத் துள்ளலாய்... ஆங்...

பாலகுமாரன்

இரும்பு குதிரைகள்



தொடர்ந்து பேசுவாள். ''அதென்னமோ தெரியலே. தூங்கின சின்னச் சின்னதாக் கனு வரும். முழிச்சுப்பேன். தூக்கம் போய்டும். உங்களுக்குக் கனுவே வராதா? ஒரு கனுக் கூடச் சொல்றதில்லேயே எங்கிட்ட.''

நேற்று ஒரு கனவு வந்ததே. குதிரைக்கனவு. பழுப்பு நிறக் குதிரை. பிடரி சிலிர்த்தது. நடு ஹாலில் நிற்கிறது. யாரோ அதைச்

கட்டிக் காட்டி இதுதான் நீ என்கிருர்கள். ரொம்பப் பிடித்திருக்கிறது. தான் குதிரையாய் இருப்பது, தானே குதிரை வடிவில் தனக்கு முன் தோன்றுவது எல்லாம் வியப்பாய்ப் பரவசமாய் இருக்கிறது. சடாரென்று குதிரை வீட்டுக்கு வெளியேதாவித் தோட்டம் முழுதும் ஓடி திட்டி வாசல் வழியே புகுந்து ரயில்வே லைனைத்தாண்டி ஓடுகிறது.


இல்லை, விசு ஓடுகிருன். குதிரையின் ஓட்டம் சினிமாவில் வருவது மாதிரி புற முதுகு சிலிர்க்க டாப் ஆங்கிள் ஷாட்டில் தெரிகிறது. சட்டென்று ஏரியல் வ்யூ.எய்மன் லென்ஸ்.... பெரிய மைதானத்தில் குதிரை ஓடிக் களைப்புடன் நிற்கிறது. சட்டென்று கட் பண்ணிக் குதிரையின் நுரை பொங்கும் முகம் க்ளோஸப்.

''குதிரைகள் கடவுள் ஜாதி — அதைக்
கும்பிடுதல் உலக நீதி''

—யாருடைய கனத்த குரலோ தெளிவாய்க் கேட்டது.

''புணர்ந்த பின் குதிரைகள்
ஒரு நாளும் தூங்கியதில்லை
பிடரியைச் சிலிர்க்க ஓடும்
பின்னங்கால் வயிற்றில் மோத
மனிதரில் உயர்ந்தவர்கள்
மறுபடி குதிரையாவார்
மறுபடி குதிரையாகி
மனிதரைக் காண வருவார்.''

குதிரைமுகத்துக்கு அருகே யாரோ கவிதை சொன்னுர்கள். அடுத்த பகுதி இவனைச் சொல்லு சொல்லு என்ருர்கள். குதிரைமிரண்டது. எகிறிஎகிறிக்குதித்தது. சீக்கிரம் சொல்லு. குதிரை நகர்ந்து விடும்.



சட்டென்று சொல்லு. மகத்தான வாய்ப்பு என்பதாய் விஸ்வநாதனுக்குப் பட்டது. குதிரைகள் பசுக்களல்ல என்று ஒரு வரி மின்னிற்று.

''குதிரைகள் பசுக்கள் போல
வாய் விட்டுக் கதறுவதில்லை.
வலியில்லை என்பதல்ல
வலிமையே குதிரை ரூபம்
தொட்டதும் சிலிர்க்கும் குதிரை
சவுக்குக்காப் பணிந்து போகும் — இது
குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் முதலாம் பாடம்.''

யாரோ சபாஷ் என்றார்கள். நிறையப் பேர் கைதட்டினார்கள். விஸ்வநாதன் வணக்கத்துடன் குனிந்தான். நிமிர்ந்தபோது குதிரை இல்லை. கனவு கலைந்து விட்டது.

கனவில் கூட கவிதை எழுதியது ஆச்சரியமாய் இருந்தது. ஒன்று இவனுடைய கவிதை. இன்னொன்று யாரோ சொன்ன கவிதை: கனவில் வேறு யார் வந்து கவிதை எழுத முடியும்? அதுவும் இவனுடைய கருவில் வந்து. அதுவும் இவனுடைய கவிதைதான். இவனுடைய கவிதையையே வேறு யாரோ தன்னுடையது போல் வாசித்திருக்கிறார்கள். இவன் கனவில் வந்த கவிதை இவனுக்குத்தான் சொந்தம்.

''குதிரைகள் கடவுள் ஜாதி — அதைக்
கும்பிடுதல் உலக நீதி''

விஸ்வநாதன் விரைவாய்ப் பக்கெட் ஜலத்தைச் சரித்துக் கொண்டான். மறந்து விடுவதற்குள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். பாத்ரூமிலிருந்து செடிகள் மிகுந்த ஒற்றையடி வழியே வீடு நோக்கி வந்தான். மடமடவென்று குளித்துக்கொள்ள வேண்டும் என்று பரபரத்தான்.

''என்னை செத்த இவளைப் பிடிங்கோ. வெளிக்குப் போயிருக்கா. உடம்பு முழுக்கப் பண்ணிருக்கு'' — தாரிணி குழந்தையை நீட்டினாள்.

''கொஞ்சம் நீயே பாத்துக்கோயேன். எனக்கு அவசரமா வேலை இருக்கு.''

''ஷேவ் பண்ணிக்கணும். அவ்ளோதானே ஒரே நிமிஷம் பார்த்துக்கோங்கோ'' தாரிணி குழந்தையைத் தூக்கிக் கொடுத்துவிட்டு உள்ளே ஓடினாள்.

குழந்தை தலையைச் சரித்து இவனைப் பார்த்தது.

''அட்ருவ்... பட்டுக்குட்டி....'' விஸ்வநாதன் குழந்தையைக்கொஞ்சினான். விலக்கிய படியே வைத்திருந்தான்.

குழந்தை சிணுங்கிற்று. தூக்கக் கலக்கத்தில் தலை சாய்த்தது. ''இங்க பார். அப்பா பார்'' என்று உதுக்கினான். 'ஜுக் நாக் ஜுக் நாக் ஜுக் நாக்' என்று நாக்கு நுனியால் குதிரை ஓட்டம் காட்டினான். குழந்தை விழித்துப் பார்த்து விட்டு மறுபடி கண்களை மூடிக் கொண்டது. விஸ்வநாதன் மனசுள் தொடர்ந்து குளம்பொலி கேட்டது.

''குளம்படி ஓசைக் கவிதை
குதிரையின் கனைப்பு கீதம்
வீசிடும் வாலே கொடிகள்
பொங்கிடும் நுரையே கடல்கள்
பிடரியின் வரைவே வயல்கள்
உருண்டிடும் விழியே சக்தி
குதிரையின் உடம்பே பூமி
சிலிர்த்திடும் துடிப்பே உயிர்ப்பு — இது
குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் இரண்டாம் பாடம்.''

விஸ்வநாதன் குழந்தையை மண்ணில் உட்கார வைத்தான். குழந்தை பேசாமல் உட்கார்ந்து கொண்டது. ''கொஞ்சம் இருடா. சமர்த்தோன்னோ...'' பரபரவென்று நடந்து உள்ளே ஹாலுக்குள் நுழைந்து இடப் பக்க அறைக்குள் போய் மேஜை டிராயரைத் திறந்து நினைவில் வந்த கவிதையை எழுதத் துவங்கினான். குழந்தை வீலென்று கத்துவது கேட்டது. தாரிணி தடதடவென்று வெளியே ஓடினாள்.

''இரண்டு நிமிஷம் குழந்தையை வச்சுக்க முடியலே. என்ன ஆப்பன். எதுக்கு உங்களுக்குக் குழந்தை, பெண்டாட்டி, குடித்தனம். சின்ன வயசுல பொழுது போகாம கவிதை எழுதுவேன் சரி. இன்னுமா? பொறுப்பு வேணும்? காலங் கார்த்தாலே பேனாவால இறுக்கிண்டு. யார் படிக்கப் போறா இந்தக் குப்பையை. பொத்துன்னு குழந்தையைப் போட்டுட்டு வந்துட்டேளே. ஒரு பாம்பு, தேளு வந்து கடிச்சதுன்னா! போறும். என் ஆயுசுக்கும் நான் லவ் பண்ணது போறும். கல்யாணம் பண்ணிண்டதும் போறும். என் தப்புதான். நெஜமாவே நீங்க சொல்ற மாதிரி நான் உங்களுக்கு லாயக்கே இல்லை. தர்ப்பக் கட்டை சாஸ்திரியையோ பஞ்சாங்கமோ, பாஷாண்டியையோ பண்ணிண்டிருக்கலாம். பொங்கிப் போட்டதை நக்கித் திங்கறவனா இருந்தா பொண்டாட்டி புருஷன் ஒட்டுதல் இருக்கும். நீங்க ஒரு வேளை சோறு வீட்ல திங்கறதே அதிகம். எப்படி பிடிப்பு... பாசம் வர... என்னவோ உங்க இஷ்டமாப் போறதும் வர்றதும்... எல்லாரும்தான் ஆபீஸ் போயிண்டிருக்கா. நாலு காசு சம்பாதிக்கறா.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மனைவி: ஏங்க, நமக்குக் கல்யாணம் ஆன புதிதில் நம்ம வீட்டுக்கு வந்து டிபன் சாப்பிட்டு விட்டுப் போனாரே உங்க நண்பர் ஒருவர், அவரை எங்க இப்ப வெல்லாம் காணறதில்லே?

கணவன்: அதுதான் நீயே காரணத்தைச் சொல்லி விட்டாயே! —ஜ. சந்தானம்



ஆறு இப்படியா போத்துன்னு குழந்தையைச் சேத்துல போட்டுட்டுப் பறக்கிறு? போய் ஆபீஸ்ல உட்கார்ந்துண்டு எழுதுங்களேன். கதையோ கவிதையோ'' களீர் களீர் என்று விஸ்வநாதனுடைய குதிரை சவுக்கடிகளை மௌனமாய் வாங்கிக் கொண்டு நின்றது.

விஸ்வநாதன் ஆபீஸில் கவிதை எழுத முடியாது. கதை எழுத முடியாது. இதுபற்றிப் பேசக்கூட வாய்ப்பிருக்காது. முத்தி அறியாத மூர்க்கரோடு முயல்வேனை என்று பழம் பாட்டுத்தான் மனக்குள் பாட முடியும். மூர்க்கக் கும்பல் அது. காசுக்குப் பறக்கிற கும்பல். குசுகுசுப்பும் சிரிப்பும் என்னாலும்... சுய முகமே இல்லாது வெவ்வேறு முக மூடிகளை அணிந்து உலா வரும் கும்பல். குட்மார்னிங் என்று பல்யமும் பாசமுமாய்ச் சொல்லுகிறதிலிருந்து ஸீ யூ டுமாரோ என்று கை குலுக்கி விடை கொடுக்கிற வரை அத்தனையும் முக மூடிகள்.

நாளைக்கு யார் வந்தால் என்ன? யார் செத்தால் என்ன — அவரவர் இருப்பு முக்கியம் என்கிற ஒரு விஷயம்தான் சகல செயல்களிலும் வெளிப்படும்.

விஸ்வநாதனுக்குக் குட்மார்னிங் சொல்வதே பிடிப்பதில்லை. நல்ல காலை என்பது என்ன.... அனுபவித்தவன்தான் வாழ்த்த முடியும்.

பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்கிறவன்தான் குட்மார்னிங் என்று வாயாரச் சொல்ல முடியும். இருளகன்றது. புட்கள் பேசத் துவங்கின. மலர்கள் மலர ஆரம்பித்தன. பனித் துளி வழியத் துவங்கிற்று என்று பார்த்துப் பார்த்து வியந்தபொழுதுதான் அர்த்தமுள்ளதாகும்.

கீசு கீசென்று ஆனைச்சாத்தான்
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்
பெண்ணே

ஆனைச் சாத்தானை இங்கே யாரும் பார்த்ததில்லை. அந்தப் பெண் ஆத்திரம் தாங்காமல் பேய்ப் பெண்ணே என்கிறாள். பேய் மாதிரி தூங்குகிறது. பின்னிரவில் தூங்கும் பேய். பின்னிரவில் விழிப்பு வர வேண்டுமாயின் ஆனைச்சாத்தான் கூவும்போது எழுந்து கொள்ள வேண்டுமாயின் எப்போது தூங்கப் போக வேண்டும். ஒளியடங்கு முன் சோறு. ஒளியடங்கியதும் தூக்கம். ஏழு மணிக்கு படுத்துக் கொண்டால் மூணு மணிக்கு எழுந்திருக்கலாம். ஆனைச் சாத்தானைக் கேட்கலாம். வீட்டுக்கு வரவே எட்டாகி விடுகிறது. பிறகு கொஞ்சம் பேச்சு, சோறு, படிப்பு, எழுத்து. பத்தரை பதினொன்றுக்குப் படுத்தால் பொச பொசவென்று விடிந்த பின் விழித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வாழ்க்கைத் தடமே மாறிவிட்டிருக்கிறது.

இதோ குளித்துவிட்டு ஆபீஸ் போய் குட்மார்னிங் சொல்ல வேண்டும். 'அவசரமா ஒரு வேலை இருக்கு. வெளியே போக வேண்டியிருக்கும். சீக்கிரம் வா' கட்டளை காலையிலேயே டெலிபோன் மூலம் வந்துவிட்டது. எங்கே போக வேண்டும். எதற்குப் போக


அவள்: கால்நடை வைத்தியரைக் கல்யாணம் செய்திண்டது தப்பாப்போச்சு!
இவள்: ஏன்?
அவள்: சைக்கிள் கூட ஓட்டத் தெரியலை.
—ஆர். ஜெயசங்கர்

வேண்டும் என்று தெரியவில்லை. போய் என்ன செய்யப் போகிறேன... அதுவும் தெரியவில்லை. சதா ஒரு பயம்... எதிர்பார்ப்பு. என்ன மேற்கொண்டு என்கிற தடுமாற்றம் இருந்து கொண்டே இருக்கிறது.

''குளிச்சுட்டு வாங்களேன். போவேண்டாமா ஆபீசுக்கு?''

''போகணும்.''

ஜில்லென்று ஜலம் தலையைத் தொடுகையில் சகல சிந்தனைகளும் அழிந்தன. துவட்டிக் கொள்கையில் குழந்தையைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. ஒரு நிமிடம் ஸ்வாமி படத்தின் முன் கண் மூடி நிற்கையில் இந்த என் ஓட்டமும் ஆட்டமும் எனக்குப் பயன் உள்ளதோ இல்லையோ இந்தக் குடும்பத்திற்குப் பயனுள்ளதாய் மாற்று என்று வேண்டுதல் வந்தது. பேண்டும் பனியனும் உடுத்திக் கொண்டு டைனிங் டேபிள் முன் உட்காருகையில் தாரிணி நெருக்கமாய் நின்றபடி தட்டில் இட்லிகளைப் போட்டாள்.

''என்ன கோவமா என் மேலே?''

விஸ்வநாதன் திடுக்கிட்டுத் திரும்பினான். ''இல்லையே'' என்றான்.

''பொய். என்பேர்ல கோவம்தான். கோவத்துலதானே உம்மென்று தட்டெதிர்க்க உட்கார்ந்திருக்கிறது.''

''ஒரு கோபமுமில்லை தாரிணி.''

''ஒரு குரல் கூப்டா குழந்தையை வந்து வாங்கிக்க மாட்டேளா?''

''தப்புத்தான். என்னவோ யோசனை.''

''கதை கவிதை எழுதுங்கோ. வேண்டாம்னு சொன்னேன். கொஞ்சம் ஒட்டுதலா அதுகள் கிட்ட இருக்கணுமோன்னோ. காத்தாலே போய் ராத்திரி வரேள். ஏங்கிப் போறதுகள். ஆசையாப் பேசட்டுமேன்னுதான் கொடுத்தேன்.''

''குழந்தைங்க கிட்ட ஆசையா இல்லேன்னு சொல்றே?''

''சே சே. இன்னும் ஒட்டுதலா இருந்தா நல்லது. நீங்க படற சிரமம் தெரியறது. லோ லோன்னு அலையறேள். நான் என்னதான் பார்த்துப் பார்த்துச் 'செஞ்சாலும்

அப்பா மாதிரி வருமா அதுகளுக்கு? பொம்மையும் சாக்லேட்டும் நானே வாங்கிடுவேன். நீங்க கொண்டு வந்தா அது வேற மாதிரி தான்.''

விஸ்வநாதனுக்கு அவளோடு சற்றுப் பேச வேண்டும் போலிருந்தது. குதிரை கவிதை சொல்லலாமா? வேண்டாம். நேரங் கெட்ட நேரத்தில். வேறெதாவது பேசுவோம்.

''ஆர்கண்டின்னு என்ன?''

''எதுக்குக் கேக்கறேள்?''

''சரிகை போட்டு ஆர்கண்டி உண்டா?''

''உண்டே.''

''உன்கிட்ட இருக்கோ? ஆபீஸ்லே ஒருத்தன் கொண்டு வந்தான். சிவீர்னு சரிகை. இழை இழையா நடுவே போறது. உனக்கு வேணுமா?''

''என்ன விலையாம்?''

''விலையை விடு.''

''கொண்டாங்கோ. பார்க்கலாம்.''

''என்ன கலர் வேணும்?''

''நாலஞ்சு கொண்டாந்தா பிடிச்சது எடுத்துக்கலாமே.''

''அது முடியாது. அங்கேயே செலக்ட் பண்ணி அங்கேயே கேஷ். பிடிக்கலேன்னு மாத்திக்கலாம்.''

''ப்ரவுன் இருக்கா?''

''இருக்குன்னு நினைக்கிறேன். உனக்கு ப்ரவுன் நன்னா இருக்கும்.''

''நெஜமாவா?''

இல்லை. அப்பட்டமான பொய். ஏதோ பேசணுமென்னு தோணித்து. சொன்னேன். விஸ்வநாதன் எதுவும் சொல்லாமல் அவளை உற்றுப் பார்த்தான். அலட்சியமாய் இடப் பக்கத் தலைப்பு தழைய அருகே உட்கார்ந்து கொண்டிருக்கிறவளைப் பார்க்கிற போது பிடித்துத்தான் இருக்கிறது. பேசுகிறபோது வெளிறி விடுகிறது. தாரிணி ஒரு கணம் அவனை அணைத்துக் கொண்டாள். கிளம்பும்போது குழந்தைகளை வாசலுக்குக் கொண்டு வந்தாள். இரண்டும் அப்பாவுக்கு முத்தம் கொடுத்தன. முத்தம் பெற்றன.

''வரட்டுமா?''

''சீக்கிரம் வந்துடுவேளா?''

''தெரியலை. போன் பண்றேன்.''

மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்பினான். நிமிர்ந்து தாரிணியைப் பார்த்தான். கண்ணில் மயக்கம் சூழ தாரிணி நிலைப்படியில் சாய்ந்திருந்தாள். புருஷன் என்பவன் சகல நேரத்திலும் பெண்களுக்குப் போதையானவன்தான். இங்கு பெண் சொத்து என்பது சரியில்லை. புருஷன்தான் சொத்து. பிரிக்க முடியாத சொத்து. பெரும் செல்வம். எந்நேரமும் அவன் அருகே இருப்பதுதான் அழகு. சுகம், சௌகரியம்.

தாரிணி பாவம். இன்று மாலை சீக்கிரம் வந்துவிட வேண்டும்.

விஸ்வநாதன் ஆபீசுக்குள் நுழைந்ததும் நிறையப் பேருக்கு குட்மார்னிங் சொன்னான். ஆபீஸர் அறைக்குள் நுழைந்ததும் குட்மார்னிங் சொன்னான். அவன் கம்பெனிக்கு வரவேண்டிய பம்பாய் சரக்கு இன்னும் வரவில்லை. அது வந்தால்தான் உற்பத்தி முடங்காது இருக்கும். புத்தூர் போகிற வழியில் ஒரு வண்டி கவிழ்ந்து கிடக்கிறதாய் லாரி கம்பெனிக்குச் சேதி வந்திருக்கிறது. ஒருவேளை இந்த லாரியாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். நிச்சயம் புத்தூர் செக் போஸ்டுக்குக் காலை வந்திருக்கும். ஆள் அனுப்பி விசாரிப்பதாய் லாரிக்கம்பெனி சொல்லிற்று.

''யூ ௫ ஒன் இட். டிரைவரோட கார் எடுத்துண்டு போ. இதுதான் லாரி நம்பர். லாரி கம்பெனி ஆள் ஒருத்தனையும் கூட ஏத்திக்கோ. ட்ரை டு லொகேட் த வெஹிக்கிள். உடனே பாக்டரிக்கு அதை அனுப்ப முயற்சி செய். வண்டியைப் புடிச்சதும் எங்கேர்ந்தாவது போன் பண்ணு. எவ்வளவு காசு வேணுமோ எடுத்துக்கோ. காரியம் முக்கியம். ட்ரை டு லொகேட் த லாரி. சரக்கு வந்தே ஆகணும். என்ன வேணுமானாலும் செய். உடனே செய்.''

விஸ்வநாதன் அடுத்த அரை மணியில் நெல்லூர் சாலையில் விரைந்து கொண்டிருந்தான்.

அடேடே தாரிணிக்கு போன் பண்ணியிருக்கலாமே. மறந்து விட்டது. கார் நெல்லூர் நெடுஞ்சாலையில் வயல்களுக்கு நடுவே சீறிப் பறந்தது. நெற்றி மயிர் பறக்க பின் ஸீட்டில் விஸ்வநாதன் உட்கார்ந்திருந்தான். மனசுக்குள் கவிதை பொங்கிற்று.

குதிரைகள் பயணம் செய்யா
கூட்டமாய்ப் பறவை போல
இலக்குகள் குதிரைக்கில்லை
முன் பின்னாய் அலைதல் தவிர
குதிரையை மடக்கிக் கேளு
போவது எங்கே என்று
புறம் திரும்பி அழகு காட்டும்
கேள்வியே அபத்தம் என்று
இலக்கில்லா மனிதர் பெரியோர்
உள்ளவர் அடைய மாட்டார் — இது
குதிரைகள் எனக்குச் சொன்ன
வேதத்தின் மூன்றும் பாடம்

(தொடரும்

''இவர்தான் புரட்சி டைரக்டர்!''

''அப்படியா?''

''ஆமா! கனவு சீன்லே ஹீரோக்கை மடிசார் புடவை கட்ட வைத்துப் படம் எடுத்தவர்!'' —யெஸ். ஸ்ரீ.





ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்!
போர்ன்விடா பருகுங்கள்.

உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க காட்பரிஸ் போர்ன்விடா வழங்குங்கள். கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளது, போர்ன்விடா— உங்கள் குடும்பத்தினருக்கு அன்றுடம் இருவேளை வழங்குங்கள்.



OBM/6844/TM

காட்பரீஸ்
போர்ன்விடா உங்களோடு வளரும் நன்மை

ஜோக்: பெஸ்டிவ


பாருங்க ஸார்! இவருக்கு இந்திரா காந்தியைப் பிடிக்கலேன்னு அதுக்காக என் நெத்தியிலே பட்டை நாமம் சாத்தணுமா?


அடேடே! அதிர்ஷ்
வீட்டுக் கார்ப்பரே
தண்ணி வந்திருக்


ஹய்யோ! எங்க திருச்செந்தூரிலே தேர்தலாமே! லவுட் ஸ்பீக்கரை நினைச்சாலே பயமாயிருக்கே!


ஹய்யா! இன்னிக்
அவங்கவங்க வீட்டு

ல்

ஃபிலிம் பெஸ்டிவல் படங்கள்

உதவி: சலன்









சுமங்கலி



அரவிந்தன்

“அசடு — அம்மா மடியில் இருக்கும் குழந்தை அவள் நெற்றியில் இருக்கும் குங்குமத்தை உற்றுப் பார்த்து அதைத் தன் பிஞ்சு விரலால் சுரண்டுவதையும், அழிப்பதையும் பார்க்கிறோம். அதனால் அந்தத் தாய் அமங்கலியாக வேண்டும் என்று அந்தக் குழந்தை ஆசைப்படுகிறது என்று சொல்லலாமா? — ஏதோ, பாத்ரூமில் கொக்கி சரியில்லாத உன் தாலிச் சங்கிலி அவிழ்ந்து விழுந்து விட்டது என்று பெரிதாக அழுது கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே — படித்தவளா நீ?''

கடைசியாகத் தன் பொறுமை தீர்ந்து விட்ட நிலையில் சற்றுக் கோபமாகவே சொன்னான் மூர்த்தி.

அன்றைக்கு அவள் குளிக்கப் போகும் போதே வழக்கத்தை விடக் கொஞ்சம் லேட்டாகத்தான் போனாள். அவள் பாத்ரூமுக்குள் இருக்கும்போதே 'நேரமாச்சு' என்று வெளியே இருந்து அவளை அவசரப் படுத்திக் கொண்டிருந்தது மூர்த்தியின் குரல்.

எல்லாமே அவசரம்!

சோப்புத் தேய்த்துக் குளித்து விட்டுக் கடைசியாக மஞ்சளைக் குழைத்து முகத்துக்குப் பூசிக் கொள்ளப் போனவள் பார்வையில் அப்போதுதான் தெரிந்தது அது—

அவள் கழுத்துத் தாலிச் சங்கிலி அப்படியே அவிழ்ந்து தரையில் கிடந்தது.

என்ன சோதனை இது?

வெள்ளிக் கிழமையும் அதுவுமாக — ஒரு சுமங்கலிப் பெண்ணின் கழுத்துத் தாலி தானாகவே அவிழ்ந்து விடுவது என்றால்...

நினைக்கும்போதே இந்துவுக்கு அழுகை அழுகையாக வந்தது.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. சுத்த முட்டாள் தனம். உன் காது ஜிமிக்கியும், கழுத்துச் சங்கிலியும் இற்றுப் போய் விழுந்ததில்லையா? வீணாக அழுது ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கிறாய். அவ்வளவுதான். எனக்கு நேரமாச்சு — எழுந்திரு இந்து....'' என்று மூர்த்தியும் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்து விட்டான்.

இந்து, ஸ்வாமி படங்களுக்கு முன்னால் ஈரத் துணியுடன் அழுது கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

மூர்த்திக்கு நேரம் ஆகிக் கொண்டு போகப் போக அவன் பொறுமை எல்லை மீறிவிட்டது.

''நீயும் உன் நாசமாப் போற செண்டிமெண்டும். நீ இப்படியே எவ்வளவு நேரம் வேணுமானாலும் உட்கார்ந்திரு. நான் ஆபீஸ் போகிறேன். இன்னிக்கு சாப்பாட்டு வாயிலே மண்'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவசரம் அவசரமாக வெளியே போய்விட்டான்.

இந்து நீண்ட நேரம் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

''ஒருவேளை இது தன்னுடைய கணவன் சொல்லியது போல் தற்செயலானதுதானோ? நாம்தான் அதையே நினைத்து வீணாகக் கவலைப் படுகிறோமோ? சினிமா நடிகை தாலியைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு நடிப்பாளாமே. நாம்தான் மிகவும் அசாதாரணமாக இதை நினைத்து வேண்டாத அழுகை அழுது கொண்டிருக்கிறோமோ?...'' என்று அவளுக்குள்ளாகவே ஒரு சமாதானம் வந்தபோது மணி ஒன்பதே கால் ஆகிவிட்டது. பத்தரைக்கு ஆபீஸ். அதற்கு ஒன்பதரை பஸ்ஸைப் பிடித்தால்தான் இரண்டு பஸ் மாறி அவள் ஆபீஸுக்குப் பத்தரைக்குப் போய்ச் சேர முடியும்.

இந்துவின் மனத்துள் நேரம் ஆக ஆகத் தாற்காலிகமாகப் பல சமாதானங்கள் தோன்றின.

'சட்'டென்று எழுந்து ஸ்வாமி விளக்கை ஏற்றினாள். தாலிச் சங்கிலியை அம்பாள் காலடியில் வைத்து விட்டுப் பரபரப்போடு வெள்ளைத் துணியை எடுத்து அதை மஞ்சளில் நனைத்துக் கொண்டு வந்து அதில் முழு ரூபாயாக ஒரு ரூபாய் வைத்து முடிந்து அதையும் ஸ்வாமி பாதங்களில் வைத்து நமஸ்கரித்தாள்.

''என் சௌமங்கல்யத்துக்கு ஒரு குறையும் வராமக் காப்பாத்தம்மா. உனக்குத் தங்கத்திலே தாலிப் பொட்டுச் செய்து உன் உண்டியலிலே போடுறேன்'' என்று வேண்டிக் கொள்ளும்போது அவளையும் அறியாமல் மீண்டும் அழுகை வந்தது.

சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு தாலியை எடுத்துக் கழுத்தில் அணிந்து கொண்டு அவள் தலை நிமிர்ந்தபோது மணி ஒன்பதரை அடித்தது.

நல்ல வேளையாக வழக்கமாக அவள் போகும் ஒன்பதரை பஸ் லேட்டாக வந்தது.

வண்டியில் ஏறி லேடீஸ் சீட்டிலும் உட்கார்ந்து கொண்டு விட்ட பிறகுதான் கொஞ்சம் இயல்பாக உணர்ந்தாள் இந்து.

அதுவரையிலும் இருந்த படபடப்பும்—டென்ஷனும் குறைந்து அந்த ஒன்பதரை மணி டிரிப்பில் வழக்கமாகச் சந்திக்கும் எல்லா முகங்களும் வண்டியில் இருக்கின்றனவா என்று தேடி, ஏறக்குறைய எல்லாரும் இருப்பதை எண்ணி நிம்மதி யடைந்தாள். ஒன்றிரண்டு பேரைக் காணவில்லை



என்பது கூட அவனுக்குத் தெரிந்தது.— அவர்கள் ஏன் வரவில்லை என்று கொஞ்ச நேரம் யோசித்துக் கொண்டு வந்தாள்.

மனத்தில் அவ்வளவு நேரமும் இருந்த இறுக்கம் குறையவும் இயல்பான மனநிலை திரும்பவும் இவை யெல்லாம் மிகவும் அவசியம் போல இருந்தன. அப்படியே இருந்திருந்தால் அவள் தன் ஆபீஸ் அடைவதற்குள் தன்னை முற்றிலுமாக மாற்றிக் கொண்டிருப்பாள்! — ஆனால்....

மவுண்ட் ரோடு சிக்னலுக்குக் காத்திருந்த பஸ் சிக்னல் கிடைத்த பிறகும் கிளம்பாமல் அப்படியே நின்று கொண்டிருப்பதைப் பார்த்து பஸ்ஸில் இருந்தவர்களின் முணுமுணுப்புகள் இரைச்சலாகிக் கொண்டிருந்தன.

எதிரில் வந்த பஸ்ஸில் இருந்த டிரைவர் வழியில் ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்ட் என்றும் ஆள் விபத்து ஸ்தலத்திலேயே மாண்டுவிட்டதாகவும், ட்ராபிக் ஜாம் ஆகியிருப்பதால் சுற்று வழியில் செல்லும்படியும் இந்த டிரைவரிடம் சொல்லிக் கொண்டிருப்பது இந்துவின் காதுகளிலும் தெளிவாக வந்து விழுந்தது.

அவ்வளவுதான்—

ஒரு நொடியில் அவள் மனத்துக்குள் மீண்டும் அந்தப் பூகம்பம் துவங்கி விட்டது.

ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்ட் என்றுனே! ஆள் அந்த இடத்திலேயே இறந்துவிட்ட

தாகச் சொன்னனே... யார்... யார்... யாராக இருக்கும்? ஒருவேளை... நோ... நோ. அது வேறு யாரோ? நிச்சயம் இவர் இல்லே. இவர் இல்லே. இவராக இருக்கவே முடியாது. இருக்கவும் கூடாது.... இந்துவின் உள்ளம் துடித்த வேகத்தில் எங்கே அது உடைந்து சிதறி விடுமோ என்று அவளுக்கே பயமாக இருந்தது.

மெதுவாக ஊர்ந்த பஸ் விபத்து ஸ்தலத்தைக் கடக்கையில் எல்லோரும் வெளியே எட்டிப் பார்த்தார்கள்.

''அடிபட்டவருக்கு நாற்பத்தைந்து ஐம்பது வயதுக்கு மேல் இருக்குமாம். லாரன்ஸ் அங்கோ என்று அவருடைய பையில் விசிட்டிங் கார்டு இருந்ததாம். கழுத்தில் மைனர் செயின் போட்டிருக்கிறாராம். செத்துப்போய் விட்டது போலவே தெரியவில்லையாம். படுத்துத் தூங்குகிற மாதிரியே இருக்கிறதாம்...''

விபத்து நடந்த இடத்துக்கு அருகில் பஸ்ஸில் ஏறியவர்கள் சொன்ன விவரங்களைக் கேட்ட பிறகுதான் இந்துவுக்கு மூச்சே வந்தது.

''அவர் இல்லே'' என்று நிச்சயமாகச் சொல்லிக் கொண்டாள். அவளுடைய கை தானாகவே புடவைக்குள் ஓடிக் கழுத்துத் தாலியைப் பிடித்துக் கொண்டது. திரும்பத் திரும்ப அம்பாளிடம் பிரார்த்தனை செய்தபடியே உட்கார்ந்திருந்தாள் அவள்.

ஒரு வழியாக அவள் இறங்க வேண்டிய இடம் வந்து இறங்கி ஆபீஸுக்குள்ளும் போய்விட்டாள்.

லஞ்ச் இடைவேளை.

வீட்டுச் சாப்பாட்டுக்குப் பதிலாக கேண்டீனிலிருந்து பட்டைச் சாதத்தை வாங்கி வைத்துக் கொண்டு அதைப் பிரித்து ஒரு கவளம் எடுத்துச்சாப்பிடுவதற்காக வாயருகே கொண்டு போகும்போது—

அவர்: அறிவு இருக்கா சனியனே! இப்படித்தான் தொலைப்பதா? புத்தி எங்கே போச்சு? உன்னைப் போய்க் கல்யாணம் பண்ணிண்டேனே!

இவர்: என்ன சார் மனைவியை இப்படித் தைரியமாகத் திட்டுகிறீர்கள்? எதைத் தொலைத்து விட்டாள்?

அவர்: ஹியரிங் எய்டை! —ஐ. சந்தானம்



''அக்கா — சுரேஷ் செத்துப் போயிட்டான் தெரியுமா?'' என்று பரபரப்போடு சொல்லிக் கொண்டு ஓடிவந்தாள் நிர்மலா.

இந்துவுக்கு சப்தநாடியும் ஒடுங்கிப் போய் விட்டது.

''யார் சுரேஷ்? எந்த சுரேஷ்'' என்று பீதியுடன் நிர்மலாவை அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னக்கா அப்படிப் பார்க்கிறீங்க? ஒரேயடியா மறந்துட்டீங்களா? இந்த வாரம் தொடர்கதையிலே அந்தச் கலாவைக் கெடுத்துவிட்டுக் கல்யாணம் பண்ணிக்காமல் ஏமாற்றிய சுரேஷ் செத்துப் போயிட்டான்கா. அவன் சாக மாட்டான்னு ஸ்டெல்லாவிடம் நான் பந்தயம் கட்டினேன். போச்சு எல்லாம் போச்சு அக்கா...'' என்று நிர்மலா சொல்வதைக் கேட்டபோதுதான் அவளுக்குள் படபடப்புக் கொஞ்சம் குறைந்தது.

இன்றைக்கென்று பார்த்துச் சொல்லிவைத்துக்கொண்ட மாதிரி இவ்வளவும்நடக்கிறதா? என்று தனக்குள்ளாகவே கேட்டுக் கொண்டாள்.

ஆபீஸுக்கு வரும் வழியில் பார்த்த விபத்தும், யாரைப் பார்த்தாலும் பேசும் தற்கொலை கொலை போன்ற செய்திகளும் — படிக்கிற கதையில் கூட வரும் மரணங்களும் எல்லாமாய்ச் சேர்ந்து அவளை ஒரு நிமிடம் கூட நிம்மதியாய் இருக்க விடவில்லை.

லஞ்ச் முடிந்து மீண்டும் அவள் ஆபீசுக்குள் நுழைந்தபோது காலையில் இருந்த நிம்மதியும் அமைதியும் அவ்வளவாக அவளிடம் இருக்கவில்லை.

மீண்டும் வழக்கம்போல் வேலையில் மனத்தைச் செலுத்த முயன்றும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் இந்து.

அவளுடைய அப்போதைய மனநிலையில் எப்படி பஸ்ஸைப் பிடித்து எப்படிப் பயணம் செய்து எப்படி வீடு வந்து சேர்ந்தோம் என்பதே அவளுக்கு மிக மிக ஆச்சரியமாக இருந்தது.

வீடு திரும்பியதும் முதல் காரியமாக ஸ்வாமி விளக்கை ஏற்றி வைத்து லலிதா சோபனம் சொன்னாள். மீனாட்சி கல்யாணம் ஸ்யாமளா தாண்டகம் என்று நீண்ட நேரம் அங்கேயே உட்கார்ந்து வேண்டிக் கொண்டிருந்தாள். ''அம்மா தாயே அவரை மட்டும் என்கிட்டேயிருந்து பிரிச்சுடாதேம்மா... அவருக்கு ஒண்ணும் ஆகாம அவர் சௌக்யமாக வீடு வந்து சேரணும்... என்னைத் தண்டிச்சுடாதே.. மனசு அறிஞ்சு நான் யாருக்கும் எந்தத் துரோகமும் செய்யல்லேயே...என்னை ஏண்டி இப்படி அணு அணுவாய்ச் சித்ரவதை பண்ணுகிறாய்? எதற்காக இந்தச் சோதனையெல்லாம்? —ஊமையாய் நிக்காதே சொல்லும்மா... சொல்லு... சொல்லும்மா.... சொல்லு'' என்று புலம்பிக் கொண்டிருந்தாள்.

பக்கத்து போர்ஷனில் டெலிபோன் மணி அடிக்கிற சப்தம் கேட்டது.

சற்றைக்கெல்லாம் ''மாமி, உங்களுக்கு ஃபோன்'' என்று பக்கத்து போர்ஷன் விமலா இந்துவைக் கூப்பிட்டாள்.

அந்த ஒரு கணத்தில் தன் காலடியில் நிலம் நழுவி ஓடுகிற மாதிரியும் பேரலையாய் எழுந்து வந்து தன்னை அப்படியே ஒரு கடல் அலை அள்ளிக் கொண்டு ஓடுகிறாற் போலவும் பலவிதமான எண்ணங்கள் ஓடின. ''என்ன செய்தி? அவருக்கு ஏதும் ஆகியிருக்கக் கூடாதே ஸ்வாமி:... பகவானே...!''

நடுங்கும் கரங்களால் ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டாள். குரல் கர கரத்து ஏறக் குறைய அழுகையே வந்துவிடும் போல இருந்தது.

''ஹலோ இந்து.... ஓ.... மை டியர் இந்து... உனக்கு இன்னிக்கு மிக மிக சந்தோஷமான நியூஸ் ஒன்று வைத்திருக்கிறேன்! என்னவென்று சொல் பார்ப்போம்'' என்றான்.

இந்து கொஞ்சம் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

''எஸ் இந்து. எனக்கு இன்னிக்கு அஸிஸ்டெண்ட் மானேஜராகப் பிரமோஷன் கிடைச்சிருக்கிறது. எம்.டி. இப்போதான்கூப்பிட்டுச் சொன்னார். அவர் நாளைக்கு ஃபாரின் கிளம்புகிறார். இருந்து ஆர்டரை வாங்கிக் கொண்டு போகும்படி சொல்லி யிருக்கிறார். நீ கவலைப்பட்டுக் கொண்டிருப்பாயே என்று தான் போன் செய்தேன். நீ எப்படி இருக்கிறாய்? ஆர்யூ ஆல்ரைட்? இல்லை — காலையிலே நடந்ததை நினைச்சுக்கிட்டு அப்படியே ஈரத் துணியோட உட்கார்ந்துகிட்டு இருக்கியா? — காலையில நான் சொன்னது சரியாப் போச்சு பார்த்தாயா?'', என்று உற்சாகமாகவே வந்து கொண்டிருந்தது மூர்த்தியின் குரல்.

அவன் பேசப் பேச அவளுக்கும் கொஞ்சம் தெம்பு வந்ததைப் போலிருந்தது.

அவனுக்குப் பிரமோஷன் ஆகியிருக்கிற செய்தியைக் கேட்டதும் அவளுடைய ரத்த நாளங்களுக்குள் உற்சாக ஊர்வலம் துவங்கி விட்டிருந்தது!

ஒரு நாளைக்கு மெட்ராஸில் நூறு விபத்து நடக்கிறது. எத்தனையோ பேர் சாகிறார்கள். வாரா வாரம் தொடர்கதையில் யாராவது செத்துக்கொண்டிருக்கிறார்கள். விதவைப் பெண்ணை வைத்துச் சினிமா எடுத்தால், நிறைய சௌகரியம் என்று நிறையப் பேர் அப்படிப்பட்ட படங்களாக எடுத்துத் தங்கள் மன வக்கிரங்களைச் சொரிந்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை யெல்லாம் அதனதன் அளவுகளிலே மட்டுமே எடுத்துக் கொண்டு கலவமாக இருக்காமல் — இவைகளை வைத்துக் கொண்டு மேலும் மேலும் குழம்பியதை நினைத்து அவளுக்குத் தன்மீது கோபம் கோபமாக வந்தது.

வீடு திரும்பியபோது அவள் மனம் இலேசாகியிருந்தது.

இரவு மூர்த்தியின் ஸ்கூட்டர் சப்தத்தைக் கேட்டதும் மனத்தில் கொஞ்சநஞ்சம் இருந்த குழப்பங்களும் நீங்கி மிகவும் லேசானது போல் உணர்ந்தாள் இந்து.



''என்னங்க கவர் தண்ணீர் நிரம்பிய வாளியோடு நம்ம கடைக்கு வந்திருக்கிங்க?''

''உங்க கடையிலே வாங்கின புடவை சாயம் போனால் கொண்டு வாங்கன் னீங்களே!'' —ச. சம்பத்குமார்

மூர்த்தியும் மிகவும் சந்தோஷமாகவே இருந்தான்.

அவளை அப்படியே அள்ளி யெடுத்து உற்சாகத்துடன் கரகரவென்று சுற்றிய அவனுடைய மகிழ்ச்சியில் இந்து தானும் பூரணமாக ஈடுபட்டு மகிழ்ந்தாள்.

இரவு உணவு முடிந்து கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தபோது அன்றைக்குக் காலையில் இருந்து தனக்கு ஏற்பட்ட விநோதமாம் அனுபவங்களையும் தன்னுடைய மன அடைந்த வேதனைகளையும் கண்ணீர் மல்க அவள் விவரித்துக் கொண்டிருந்தாள்.

''மக்கு—''

செல்லமாக அவள் தலையில் தட்டினான் மூர்த்தி.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஒரு பெண்ணின் உண்மையான தாலி பாக்கியம் அவள் மனத்தில் இருக்கிறது தெரியுமா உனக்கு! அவள் கழுத்தில் இருக்கும் தாலியும், அவளுடைய மஞ்சள், குங்குமமும், பூவும் பொட்டும் இதர எல்லாமே அவள் மனத்தில் இருக்கும் அந்தச் சௌமாங்கல்யத்தின் சாட்சிகள்தான். மனசிலே உறுதி இருக்கிறவரைக்கும் அவள் இந்த வெளிச் சின்னங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. தெரிந்ததா?'' என்ற மூர்த்தியை ஊடுருவிப் பார்த்த இந்துவின் மனத்திலும் அவன் சொல்வது வாஸ்தவம்தான் என்று தோன்றியது.

அவள்சட்டென்று அவன் கைகளைப்பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''அசடு!'' என்று அவளை மீண்டும் செல்லமாகத் தட்டித் தன்னோடு அணைத்துக் கொண்டான் மூர்த்தி.

வழக்கமாக அவன் அவளை அசடு என்று சொல்லும்போது கோபப்பட்டுச் சிணுங்குவாள் இந்து.


ஆனால்—

இப்போது?—

அவளுக்குக் கோபமே வரவில்லை!—

பல வகையிலும் பயன்படும் இதனை
உபயோகிக்காமல் இவ்வளவு நாள் எவ்வாறு சமைத்தோம்!


பிரெஸ்டீஜ் அளிக்கும் பிரஷர் பேன்



வறுக்க



பொரிக்க



வதக்க



வேக வைக்க



இதில் நீங்கள் வறுக்கலாம், பொரிக்கலாம், தாளிக்கலாம், வதக்கலாம் பின்பு மூடி வைத்து வேக வைக்கலாம்—பிரஸ்டீஜின் பிரஷர் பேன் மிகவும் வசதியானது. உங்களுக்காகவே தயாரிக்கப் பட்டுள்ளது. உங்கள் குடும்பத் தினரின் சுவைக்கேற்ற பதார்த்தங்களைச் சில நிமிடங் களில் தயாரிக்க இது உதவுகிறது.

மூடியில்லாத, கனமான இந்த வாணலி வெங்காயம், காய்கறிகள், மசாலா, மாமிசம், கோழிக்கறி இவற்றைக் குறைந்த அளவு எண்ணெயில் வதக்க உதவுகிறது.

இதைப் பிரஸ்டீஜின் மூடியினால் மூடி விட்டால் உணவு சீக்கிரம் வெந்து விடுகிறது. சிக்கன் புர்த்தா—20 நிமிடங்களில் தயார். மட்டன் தோப்பியாசா—25 நிமிடங்களில். தம் ஆலு—இன்னும் சீக்கிரம். மற்றக் காரியங்களைக் கவனிக்க நேரத்தை மிச்சப்படுத்துகிறது. எரிபொருளும் நீண்ட நாட்களுக்கு வருகிறது.

பிரெஸ்டீஜ் இந்தப் பிரஷர் பேனைத் தருகிறது—இவர்கள்தான் இந்தியாவில் முதன் முதலாக மிக அதிகமாக விரும்பி உபயோகிக்கப் படும் பிரஷர் குக்கரைத் தந்தவர் கள்—பிரஷர் குக்கருக்கு முழுப் பாதுகாப்பைத் தரும் ஒப்பற்ற காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம் என்ற அமைப்பைப் புகுத்தியவர்களும் இவர்களே.

பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் உங்கள் சமையலறையில் மிக அதிகமாக உபயோகப்படும் பாத்திரம். இது உறுதியான சூடேறாத கைப்பிடிகளுடனும், கனத்த அலுமினியத் தகட்டினாலான அமைப்புடனும் தயாரிக்கப் படுகிறது. இனி ஒரு பாத்திரத்தில் வதக்கி, இன்னொரு பாத்திரத்தில் வேகவைத்துக் கடைசியில் பிரஷர் குக்கரில் வேக வைக்கத் தேவையில்லை. இந்தப் பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் ஒரு பாத்திரத்திலேயே பல பாத்திரங் களின் வசதிகளைத் தந்து விடுகிறது.

<u>பாதிக்கும் குறைவான விலையில் இந்தப் பிரஷர் பேனை வாங்குவது எவ்வாறு?</u>

உங்களிடம் ஏற்கெனவே ஒரு பிரெஸ்டீஜ் பிரஷர் குக்கர் இருந்தால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்!

ஒரு சாதாரண கனமான வாணலியின் விலையில் உங்களுக்குப் பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் கிடைக்கிறது.

உங்கள் பிரஷர் குக்கரின் மூடியை இதில் பொருத்தி விட்டால் உங்களுக்கு ஒரு புது பிரெஸ்டீஜ் பிரஷர் பேன் குறைந்த விலையில் கிடைக்கிறது. உங்கள் கடின உழைப்பின் ஊதியத் திற்குக் குறைந்த விலையில் தரமான தயாரிப்புகளைத் தருவதே பிரெஸ்டீஜின் குறிக்கோள்.

இதுவரை உங்களிடம் பிரெஸ்டீஜ் பிரஷர் குக்கர் இல்லாவிட்டால்

இதோ உங்களுக்கு இரட்டை லாபத்திற்கு ஒரு வாய்ப்பு! இப்பொழுது நாங்கள் இரண்டு அபூர்வமான சமையலறை உபகரணங்களை அளிக்கிறோம்—இந்தியாவிலேயே மிகுந்த பாதுகாப்பைத் தரும் உன்னதமான 'காஸ்கெட் ரிலீஸ் ஸிஸ்டம்' கொண்ட பிரஷர் குக்கரையும், ஆவலைத் தூண்டும் பிரஷர் பேனையும் தருகிறோம். ஒன்றின் விலைக்குச் சிறிது கூடுதலான விலையிலேயே இரண்டும் கிடைக்கிறது. ஒரு மூடி இரண்டுக்கும் உதவுவதால் உங்களுக்கு ரூ 150/-க்கும் அதிகமான லாபம்.

Prestige
PRESSURE PAN

ttk தயாரிப்பு

கள்வனின் காதலி

அத்தியாயம் 33

முத்தையன் எங்கே?


முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடந்து சுமார் இரண்டு மாதம் ஆகியிருக்கும். திருப்பரங்கோவிலில் ஸப் இன்ஸ்பெக்டர் சர்வோத்தம சாஸ்திரி ஒரு நாள் மாலை மிகுந்த மனச் சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பி வந்தார். அவர் வரும்போது, உள்ளே,

''போது போகுதில்லையே - எனக்
கொரு
தூது சொல்வாரில்லையே!''

என்று இனிமையாகப் பாடும் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. சாஸ்திரியார் உற்சாகமாக இருந்திருக்கும் பட்சத்தில், நேரே கூடத்திற்குப் போய்த் தாமும் ஒரு அடி இரண்டடி தம் மனைவியுடன் சேர்ந்து பாடுவார். கொஞ்சம் அபிநயம் பிடித்துக் கூடக் காட்டுவார். ஆனால் இன்றைய தினம் மிகவும் மனச் சோர்வுக்கு அவர் ஆளாகியிருந்தபடியால், கூடத்துக் காமரா உள்ளில் பிரவேசித்து, தலைப்பாகையை எடுத்து ஆணியில் மாட்டிவிட்டு ஈஸிசேரில் பொத்தென்று விழுந்தார்.

அவர் மனச் சோர்வு கொள்வதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. அன்றைய தினம் அவரை ஜில்லா போலீஸ் சூபரின்டென்டெண்ட் துரை மாட்டு மாட்டென்று மாட்டிவிட்டார். திருடன் முத்தையனை உயிருடனோ, உயிரில்லாமலோ கூடிய சீக்கிரத்தில் பிடிக்காத வரையில் சாஸ்திரியின் உத்தியோகத்துக்கே ஆபத்து வந்து விடலாம் என்று தோன்றிற்று. துரை அவ்வளவு கடுமையாகப் பேசினார்.

முத்தையன் திருப்பரங்கோயில் லாக்-அப்பிலிருந்து தப்பி ஓடிய புதிதில் அவனைப் பிடிப்பதில் சாஸ்திரி அவ்வளவு சுறுசுறுப்புக் காட்டவில்லை என்பது



உண்மைதான். அபிராமியின் மீது அவருக்கு ஏற்பட்ட வாத்ஸல்யம் முத்தையனைப் பிடிப்பதில் உள்ள ஆர்வத்தை ஓரளவு மழுங்கச் செய்திருந்தது. மேலும் முத்தையனுடைய துணிகரமான செயல்கள் மூன்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுடைய எல்லைக்குள் நடந்தபடியால் இவருக்கு அவனைப் பிடிப்பதில் தனிப்பட்ட பொறுப்பு அப்போது ஏற்படவில்லை.

சமீபத்தில் அதாவது மூன்று மாதங்களுக்கு முன்னால்தான் முத்தையனைப் பிடிப்பதற்கென்று ஸர்வோத்தம சாஸ்திரியை 'ஸ்பெஷல் டியூடி'யில் போட்டார்கள். இதில் அவருக்கு அவ்வளவு இஷ்டமில்லையென்றாலும் உத்தரவை மீற முடியாமல் ஒப்புக் கொண்டார்.

அவர் இந்த 'ஸ்பெஷல் டியூடி'யில் போடப்பட்டதிலிருந்து மிகவும் ஆச்சரியமாகக் களவுகளும், கொலைகளும் நின்று போயின. சாஸ்திரி கொள்ளிடக் கரைப் படுகைக் காடுகள், நாணல் காடுகள் எல்லாவற்றையும் ஒரு அடி இடம் கூடப் பாக்கியில்லாமல் தேடி விட்டார்; கொள்ளிடத்து மணலையே சல்லடை போட்டுச் சலித்து விட்டார். ஆனாலும் பலனில்லை. ஒருவேளை அவன் கொள்ளிடத்து முதலைக்கு இரையாகி மாண்டு போனானோ என்றுகூடச் சந்தேகப்படலானார்.

ஆனால் மேலதிகாரிகளுக்கு இந்த நம்பிக்கை ஏற்படவில்லை. ஏற்கனவே அவர்களுக்கு சாஸ்திரியின் மீது ஒருவாறு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. முத்தையனுடைய துணிகரத் திருட்டு

அமரர் கல்கி



களுக்கு சாஸ்திரியும் உடந்தை என்பதாக அவர் மேல் 'மொட்டை' விண்ணப்பங்கள் வந்திருந்தன. இதன் உண்மையைப் பரிசோதிப்பதற்காகவே ஜில்லா சூபரின்டென்டென்ட் துரை சாஸ்திரியை இந்த 'ஸ்பெஷல் டியூடி'யில் போட்டார். அவர் வந்ததிலிருந்து முத்தையனுடைய ஆர்ப்பாட்டம் ஓய்ந்திருக்கவே, துரைக்கும் சாஸ்திரியின் மேல் சந்தேகம் உண்டாயிற்று. இவர் எச்சரிக்கை செய்துதான் முத்தையனை ஜாக்கிரதையாக இருக்கப் பண்ணி விட்டார் என்று ஊகிக்க இடமிருந்ததல்லவா?

உண்மையில் சர்வோத்தம சாஸ்திரி இந்த மூன்று மாதமும் சும்மா இருக்கவில்லை. குறவன் சொக்கனையும், அவனுடைய ஆட்கள் மூன்று பேரையும் கைது செய்திருந்தார். முத்தையனுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்த அங்காடிக் கடைக்காரியையும் அவர் கைது செய்து விட்டார். இவர்கள் எல்லாம் இப்போது லப் ஜெயிலில் இருந்தனர். இவர்களிடம் துப்பு விசாரித்து முத்தையன் கொள்ளையடித்து வைத்திருந்த பணம், நகை இவற்றில் ஒரு பகுதியைக் கூடக் கைப்பற்றி விட்டார். ஆனால் முத்தையனைப் பற்றி மட்டும் அவர்களிடமிருந்து எவ்விதத் தகவல்களும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இன்று பகல் முழுவதும் அவர்களைப் பயத்தினாலும் நயத்தினாலும் மற்றும் போலீஸார் வழக்கமாகக் கையாளும் முறைகளைக் கைக் கொண்டும் விசாரிப்பதில்தான் அவர் ஈடுபட்டிருந்தார். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. அவர்களுக்கு ஏதாவது முத்தையனைப் பற்றித் தெரிந்தால்தானே சொல்வார்கள்?

இதனால் மனச் சோர்வு அடைந்துதான் சர்வோத்தம சாஸ்திரி அவ்வளவு அலுப்புடன் அன்று வீடு திரும்பி வந்து ஈஸிச்சேரில் படுத்துக் கொண்டது. படுத்துக்கொண்ட சற்று நேரத்துக்கெல்லாம் அன்று வந்த தினசரிப் பத்திரிகையை எடுத்துப் புரட்டினார். அதில் வெளியாகியிருந்த ஒரு செய்தியின் தலைப்பைப் பார்த்ததும் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து அதைக் கவனமாய்ப் படிக்கத் தொடங்கினார். அந்தச் செய்தி வருமாறு:

''மதுரை ஒரிஜினல் மீனாட்சி சுந்தரேசுவரர் நாடகக் கம்பெனியின் **'சங்கீத சதாரம்'** என்னும் நாடகம் இந்நகரில் சென்ற ஒரு மாதமாய்த் தினந்தோறும் மேற்படி தியேட்டரில் நடந்து வந்தபோதிலும், இன்னும் அபரிமிதமான கூட்டத்தைக் கவர்ந்து வருகிறது. பிரசித்தி பெற்ற மைசூர் குப்பி கம்பெனியாரைக் கூட இந்தக் கம்பெனியார் மிஞ்சி விட்டார்கள் என்று சொல்லலாம். இந்த நாடகத்தில் திருடனாக நடிப்பவர் சென்னை வாசிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார் என்று சொல்வது மிகையாகாது. உண்மையில், சதாரம் அத்திருடன் மீது காதல் கொள்ளவில்லை என்பது நம்பத் தகாத ஆச்சரியமாகவே இருக்கிறது. நாடக மேடையில் இவர் நடிக்கும்போது அசல் திருடனாகத் தோன்றுகிறாரே தவிர, திருடன் வேஷம் போட்டு நடிக்கிறார் என்பதே சபையோருக்கு ஞாபகம் இருப்பதில்லை.....''

இந்தச் செய்தியைப் படித்து வரும்போது, சப் இன்ஸ்பெக்டரின் முகத்தில் பெரிதும் பரபரப்புக் காணப்பட்டது. படித்து முடித்த பின் சுமார் ஐந்து நிமிஷ நேரம் அவர் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். பிறகு, அவசரமாய் ''மீனா ! மீனா ! இங்கே வா!'' என்று அலறினார்.

அவருடைய மனைவி பாடிக் கொண்டிருந்த பாட்டை அப்படியே அந்தரத்தில் நிறுத்திவிட்டு ஓடி வந்தாள்.

''என்ன? என்ன? திருடன் பிடிபட்டானா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

இரண்டுக்கு மேல் வேண்டாம். இதை மீறி மூன்றாவது பிள்ளையைப் பெற்றுக் கொண்டால் உங்கள் மாத வருமானத்தில் 10 சதவீதம் இழக்க நேரிடும்.

அதையும் கடந்து நான்காவது பிள்ளை பெற்றுக் கொண்டால் 15 சதவீதம் இழப்பீர்கள்.

ஐந்தாவது குழந்தையா? ஐய்யய்யோ போச்சு 20 சதவீதம் கட். இவ்வளவு கண்டிஷன் எங்கே? சீனாவில்தான். ஒரு பிள்ளையுடன் நின்று விட்டால் வருடந்தோறும் பரிசுகளும் வழங்கப் படுகின்றன.

— விஜயா சீனிவாசன்



டெட் கட்டியில் மட்டுமே உள்ளது ஸால்வெண்ட் பவர்

இது துணிகளுக்கு முற்றிலும் பளிச்சிடும் வெண்மை அளிக்கிறது



வேறெந்த டிடர்ஜெண்ட் கட்டியும் பாரும் இதற்கு இணையில்லை பாரும்

யூ.எல்.ஐ.பியில் முதலீடு செய்ய மூன்று முக்கிய காரணங்கள்.



யூ.எல்.ஐ.பி (யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் பிளான்) உங்கள் குடும்பத்துக்கு பாதுகாப்பு கொடுப்பதுடன் வேறு சில நன்மைகளையும் கொடுக்கிறது.

<u>வரிச்சலுகை</u> : ஆண்டு தோறும் யூ.எல்.ஐ.பி யில் முதலீடு செய்யும் உங்கள் பணத்திற்கு பிரத்யேக வரிச்சலுகை கிடைக்கிறது.

<u>ஆயுள் பாதுகாப்பு</u> : நீங்கள் சேர்ந்திடும் குறியீட்டுத் தொகைக்கு மருத்துவ பரிசோதனை இல்லாமலே ஆயுள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

<u>விபத்து பாதுகாப்பு</u> : ரூ 15,000 வரை விபத்து பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது.

இது மட்டுமா ? முதலீட்டுக்கு அதிக வருமானமும் உண்டு.

காலம்	வருடாந்திர தவணை தொகை	குறியீட்டுத் தொகை	திட்ட முடிவில் கிடைக்கும் தொகை
10 வருடங்கள்	ரூ 1,200	ரூ 12,000	ரூ 18,500
15 வருடங்கள்	ரூ 800	ரூ 12,000	ரூ 23,000

ரூ 12,000 மதிப்புள்ள யூ.எல்.ஐ. பி திட்டத்தில் சேர்ந்து 3 ஆண்டுகள் கழித்து மற்றுமொரு திட்டத்திலும் சேரலாம். வரிகளைத் தவிர்த்திட திட்டமிடுங்கள் இப்பொழுதே. இதர விபரங்களுக்கு எங்கள் ஏஜெண்டுகள், தலைமைப் பிரதிநிதிகள் மற்றும் பாங்க் ஆஃப் பரோடாவின் கிளைகளை அணுகுங்கள்.

யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா

தலைமை அலுவலகம் : பம்பாய்
(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்)
பிராந்திய செயலகம் :
ரெஜினா மான்ஷன், 46 செகண்ட் லைன் பீச்,
சென்னை-600 001. போன் : 27433

எங்கள் முக்கிய பிரதிநிதிகள் : ● ஏ. தனபால், 10-ஜே, ஹரிஸ்ரோடு, கோவை-641 018 போன் : 34776 ● எம், ராமமூர்த்தி, 30 எல்.ஐ.சி காலனி, மதுரை : 625 002 போன் : 30160 ● கே. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி நகர், தஞ்சாவூர் : 613 007 போன் : 1224 ● என்.கே. இன்கர்சால், 155 சுவர்ணாம்பிகை தெரு, அன்னதானபட்டி. சேலம் : 636 002 போன் : 64302 ● எம்.எம். காஜா, பக்காளி பில்டிங் அனெக்ஸ், 41-பி, திருவனந்தபுரம் ஹைரோடு, பாளையங்கோட்டை : 627 002 போன் : 2395 (வீடு)

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

Sista's-UTI. 74.82.TM. C

சாஸ்திரி மறுபடியும் பத்திரிகையில் ஆழ்ந்தவராய், ''திருடனுமில்லை; பிடிபடவுமில்லை. நீ சுருக்க இரண்டு சட்டையிலே ஒரு பெட்டியை வெச்சுக்கொண்டா!'' என்றார்.

''அப்படியே ஆகட்டும். நான் சட்டையிலே பெட்டியை வைச்சுக்கொண்டு வந்தால், நீங்கள் செருப்பிலே காலைப் போட்டுண்டு, கண்ணாடியிலே மூக்கைப் போட்டுண்டு எவ்விடத்துக்குப் பயணப்படப் போறயள்? சொன்னால் தேவலை''

''ஓகோ! அது தெரியாதா? பட்டணத்திலே யாரோ திருடனுக்குக் கலியாணம் என்று சொன்னாயே? அதற்குப் போகிறதுக்குத்தான்.''

''எங்கள் அக்காளுக்கு வரப் போகிற மாப்பிள்ளையை இப்படி நீங்கள் திருடன் என்று சொன்ன செய்தி தெரிந்தால் அவள் உங்களை இலேசில் விடமாட்டாள். போனால் போகட்டும். உங்களை எப்படியும் கல்யாணத்துக்கு அழைச்சுண்டு போகிறதென்று தீர்மானம் பண்ணி மூட்டையெல்லாம் கட்டி வைத்து விட்டேன். சாப்பிட்டு விட்டுக் கிளம்ப வேண்டியதுதான். ஆனால் ஒரு சமாசாரம். வண்டியிலேதான் நீங்கள் ஏறிக் கொண்டு வர வேண்டுமே தவிர, 'வண்டிதான் என் மேலே ஏறிண்டு வரணும்' என்று பிடிவாதம் பிடிக்கக் கூடாது....''

''மீனாட்சி! நீ மகா கெட்டிக்காரி; உன் சாமர்த்தியத்துக்குத் திருடப் போக வேண்டியதுதான்.''

''ஆமாம்; திருடனைப் பிடிக்கத்தான் யோக்கியதை இல்லை; திருடவாவது போகலாம்! சீக்கிரம் கிளம்புங்கள்.''

இப்படியாக இந்தக் குதூகலம் நிறைந்த தம்பதிகள் சென்னைக்குப் பிரயாணமானார்கள்.

அத்தியாயம் 34

சங்கீத சதாரம்

சென்னைப் பட்டணத்தில், ஸர்வோத்தம சாஸ்திரியின் மைத்துனி பெண்ணுக்குக் கல்யாணம் நடந்து முடிந்தது. ஒரு நாள் கல்யாணம்தான். அன்றிரவு சாஸ்திரி அவசரம் அவசரமாய்ச் சாப்பிட்டுவிட்டு வெளிக் கிளம்பினார். வழியிலே ஒரு டிராம் வண்டி மின்சார விளக்குகளால் ஜகஜ்ஜோதியாக அலங்கரிக்கப்பட்டு, ஒளி மயமான நாடக விளம்பரத்துடன் போய்க்கொண்டிருப்பதை அவர் பார்த்தார்.



''ஆமாம், ''சிலுக்கு''ன்னு புதுமை வாரப் பத்திரிகை ஆரம்பிக்கப் போறியாமே, என்ன புதுமை அதில்?''

''மேலட்டை இல்லாத வாரப் பத்திரிகை அது!''

—ஜ. சந்தானம்

சங்கீத சதாரம்

எங்களுடைய புதிய நட்சத்திர நடிகரைத் திருடன் பார்ட்டில் கண்டு களியுங்கள்!

என்று அந்த மின்சார ஜோதி விளம்பரம் பிரகாசப் படுத்திக் கொண்டு போயிற்று.

நாடகக் கொட்டகைக்கு அவர் போய்ச் சேர்ந்தபோது அங்கே ஏராளமான கூட்டம் நின்று கொண்டிருக்கக் கண்டார். ஜனங்கள் டிக்கெட் வாங்குவதற்கு ''நான் முந்தி'' ''நீ முந்தி'' என்று பிரமாதமான சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். போலீஸ்காரர்கள் சிலர் கையில் குண்டாந் தடிகளுடன் கூட்டத்தைச் சமாளிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் ''ஸீட் காலியில்லை'' என்று நோட்டீஸ் போடப்பட்டது. அநேகம் பேர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

இந்த வேடிக்கையைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஸப் இன்ஸ்பெக்டர் கொட்டகைக்குள் சென்று தாம் ஏற்கனவே ரிசர்வ் செய்திருந்த இடத்தில் உட்கார்ந்தார். ஆரம்பத்திலெல்லாம் நாடகம் ரொம்பவும் சாதாரணமாயிருந்தது. இதைப் பார்ப்பதற்குத்தானா இவ்வளவு ஜனங்கள் மண்டையை உடைத்துக் கொள்கின்றார்கள்என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

நாடகத்தில் திருடன் வரும் கட்டம் வந்ததும் அவருக்கு மற்ற ஞாபகமெல்

லாம் போய் விட்டது. தான் துரத்தி வந்த முயலைக் கொஞ்ச தூரத்தில் கண்டதும் ஒரு வேட்டை நாய்க்கு எத்தகைய பரபரப்பு உண்டாகுமோ அத்தகைய பரபரப்பு அவருக்கு உண்டாயிற்று. ஆனால் அந்த முயலைப் போய்ப் பிடிக்க முடியாமல் நடுவில் மிகவும் உயர்மான ஒரு வேலி தடுத்துக்கொண்டிருந்தால் அந்த வேட்டை நாய் எப்படித் துடிதுடிக்கும்? அப்படித் துடித்தார் சர்வோத்தம சாஸ்திரி.

''இந்தத்திருடன் வேஷக்காரன்தான் முத்தையன்'' என்று அவருடைய உள்ளுணர்வு சொல்லிற்று. ஆனால், அதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்கு அவருக்கு வழி எதுவும் புலப்படவில்லை. முத்தையனைக் கண்டு பிடிப்பதில் அவருக்கு ஏற்கனவே இருந்த இடையூறு இதுதான்: அவர் முத்தையனைப் பார்த்தது கிடையாது. அங்க அடையாளங்களைக் கொண்டு ஓரளவு ஊகிக்கத்தான் ஊகிக்கலாம். நிச்சயமாய் எப்படிச் சொல்ல முடியும்?

* * *

முத்தையனைக் கைது செய்து லாக்அப்பில் அடைத்த இரண்டு போலீஸ்காரர்களும் அன்றிரவு அஜாக்கிரதையாயிருந்து அவனைத் தப்பித்துக் கொண்டு போக விட்டதற்காக 'டிஸ்மிஸ்' செய்யப் பட்டிருந்தார்கள். இது சாஸ்திரிக்குச் சம்மதமில்லை. அவர்கள்தான் முத்தையனைப் பார்த்திருக்கிறார்களாதலால், அவனைப் பிடிப்பதில் அவர்களுடைய உதவி மிகவும் உபயோகமாக இருக்கும் என்று அவர் கருதினார். ஆதலின், அவர்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்ட பிறகும்கூட, அவர்களை அவர் உபயோகப்படுத்தி வந்தார். அவர்களுடைய முயற்சியினால் திருடன் பிடிபட்டால் மறுபடியும் உத்தியோகம் வாங்கித் தருவதாகவும் வாக்களித்திருந்தார்.

அந்த இரண்டு கான்ஸ்டபிள்களில் ஒருவன் இரண்டு வாரத்துக்கு முன் சென்னைக்கு வந்திருந்தான். சென்னையில் இருந்த அவனுடைய மைத்துனன் வேலை தேடித் தருவதாகச் சொன்னதன் பேரில் அவன் வந்தான். வந்தவன் ஒரு நாள் ''சங்கீத சதாரம்'' பார்க்கப் போனான். அங்கே, திருடன் வேஷக்காரனைக் கண்டதும் அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ''முத்தையன் மாதிரியல்லவா இருக்கிறான்?'' என்று நினைத்தான். நினைக்க, நினைக்க, சந்தேகம் உறுதிப்பட்டது. உடனே, திருப்பரங்கோவிலுக்குத் திரும்பிச் சென்று சாஸ்திரியிடம் தன் சந்தேகத்தைத் தெரியப்படுத்தினான்.

சாஸ்திரி முதலில் 'பூ பூ' என்றார். துளிக்கூட நம்பிக்கை யில்லாமல் சிரித்துப் பரிகாசம் செய்தார். ''திருடனைப் பிடிக்க உன்னைத்தான் அனுப்ப வேணும்'' என்றார்.

ஆனால் அவர் மனத்திலும் எப்படியோ சந்தேகத்தின் விதை போட்டாய் விட்டது. இரண்டு மாதமாய் முத்தையனுடைய ஆர்ப்பாட்டம் அந்தப் பக்கத்தில் ஒன்றுமே இல்லாததால் அவருடைய சந்தேகம்வளர்ந்து வந்தது. ஆனால் இத்தகைய ஆதாரமற்ற, சிரிப்புக்கிடமான சந்தேகத்தின் மேல் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

மைத்துனி பெண்ணின் கல்யாணத்தை வியாஜமாக வைத்துக் கொண்டு, தாமே ஒரு முறை சென்னைக்குப் போய்ப் பார்த்து விட்டு வரலாமா என்று ஒரு யோசனை தோன்றிற்று. இப்படி அவர் மனத்திலே உள்ளுணர்ச்சிக்கும், புத்திக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்த சமயத்திலே தான் மேற்படி பத்திரிகைச் செய்தியை அவர் பார்த்தார். ''சரி சரி! இதைப் போய்ப் பார்த்து விட்டு வந்தாலொழிய மனத்தில் அமைதி எற்படாது; வேறு எந்த வேலையிலும் புத்தி செல்லாது''

ஆதர்ச மாணவி

மேலட்டையில் மிளிர்பவர் குமாரி ரஞ்ஜனி. ஆதர்ஷ் வித்யாலயாவின் மாணவி. இதுவரை கடந்து வந்துள்ள வகுப்புகள் அத்தனையிலும் இவர் பெற்றுள்ளது, முதலிடம். பெற விழைவது, ஓவியத்திலும் வீணையிலும் தனக்கென ஒரு சிறப்பிடம்! அதற்காக ஓய்வு நேரங்களில் இவர் விரல்கள் வீணையை மீட்டிக் கொண்டிருக்கும். அல்லது தூரிகையை ஏந்தி இருக்கும். —யெம்ஜி

வண்ணப்படம்: சரஸ்வதி சத்தியமூர்த்தி



என்று தீர்மானித்துத்தான் அவர் சென்னைக்குக் கிளம்பி வந்தது.

நாடக மேடையில் திருடன் வந்ததிலிருந்து, அவருடைய தவிப்பு நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. சில சமயம் நாம் எதையோ ஞாபகப் படுத்திக் கொள்ள விரும்புகிறோம்; இதோ ஞாபகம் வந்துவிட்டது போல் தோன்றுகிறது; ஆனாலும் வருவதில்லை. ரொம்பவும் தெரிந்த விஷயம்; தெளிவான சங்கதி; சந்தேகமே இல்லாத செய்தி; ஆனால் அதென்ன? நெஞ்சாங்குழியில் இருக்கிறது. நினைவுக்கு வர மாட்டேனென்கிறதே! — இப்படி எத்தனையோ தடவைகளில் நாம் தவித்திருக்கிறோமல்லவா? சர்வோத்தம சாஸ்திரி இப்போது அந்த நிலைமையில்தான் இருந்தார். ''இவன் முத்தையன்தான்; ஆனால் அதை நிச்சயம் செய்வதெப்படி? ஏதோ ஒரு வழி இருக்கிறது. ஆனால் அது என்ன?'' சாஸ்திரி தலையைச் சொறிந்து கொண்டார். உதட்டை மடித்துப் பல்லைக் கடித்துக் கொண்டார். நெற்றியை அமுக்கிப் பிடித்துக் கொண்டார். நல்ல வேளையாக அப்போது எல்லாரும் நாடகத்தில் மிகவும் ரசமான கட்டத்தில் பூரணமாய் ஈடுபட்டிருந்தபடியால், சாஸ்திரியை யாரும் கவனிக்கவில்லை. யாராவது அவருடைய சேஷ்டைகளைக் கவனித்திருந்தால் இவருக்கு என்ன பைத்தியமா என்றுதான் யோசிக்க வேண்டியிருந்திருக்கும்.

நாடகத்தில் மிகவும் ரசமான கட்டம் சதாரமும், திருடனும் சந்திக்கும் இடம்தான். சதாரம் வேடம் போட்டவனுக்கு ஸ்திரீ வேஷம் வெகு நன்றாய்ப் பலித்திருந்தது. உண்மையில் அந்த வேஷம் போடுகிறவனுடைய பெயர் விளம்பரத்தில் கண்டிராம லிருந்தால் புருஷன்தான் ஸ்திரீ வேஷம் போட்டிருக்கிறான் என்று கருதவே முடியாது. அவனுடைய தோற்றத்தைப் போலவே பேச்சு, நடை, உடை, பாவனை எல்லாம் ஸ்திரீக்கு உரியனவாகவே இருந்தன. அவனுடைய கைகளின் ஒவ்வொரு அசைவிலும், உடம்பின் ஒவ்வொரு நெளிவிலும், புருவத்தின் ஒவ்வொரு நெரிப்பிலும், கண்ணின் ஒவ்வொரு சுழற்சியிலும் மெல்லியலாரின் இயற்கை பரிபூரணமாய்ப் பொருந்தியிருந்தது.

முகமூடியணிந்த திருடனைக் கண்டதும் சதாரம் பயந்து போனாள். அவளுடைய முகத்தில், கண்களில், நின்ற நிலையில், உடம்பின் நடுக்கத்தில்—திகைப்பும் பயமும் காணப்பட்டன. அப்போது அவளைப் பார்த்த யாருக்கும் புலியைக் கண்டு வெருண்டு நிற்கும் பெண் மானின் தோற்றம் உடனே ஞாபகம் வராமற் போகாது.

''ஐயோ! நீ யார்?'' என்று சதாரம் குடல் நடுக்கத்துடன் கேட்டாள்.
''நானா? நான் மனுஷன்'' என்று சொல்லிச் சிரித்தான் திருடன்.

அந்தச் சிரிப்பினால் சிறிது தைரியம் கொண்ட சதாரம், ''நீ திருடனில்லையா?'' என்றாள்.

''நான் திருடனில்லை பெண்ணே, நான் கள்ளன்!''

''கள்ளனா? ஐயோ! உன்னைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது!'' என்றாள் சதாரம்.

அப்போது திருடன் தெம்மாங்கு மெட்டில் ஒரு பாட்டுப் பாடத் தொடங்கினான்.

''கண்ணே! உனக்குப் பயமேனோ?'' என்று ஆரம்பித்து அமர்க்களமாய்ப் பாடினான். தன்னுடைய குல பரம்பரையின் பெருமையை யெல்லாம் அவன் எடுத்துச் சொன்னான். தன்னுடைய குலத்தின் ஆதி புருஷன் கிருஷ்ணன் என்னும் கள்ளன் என்று கர்வத்துடன் கூறினான். ''அப்பேர்ப்பட்ட கள்ளர் பரம்பரையில் வந்த வீரக் கள்ளன் நான் உனக்குக் கள்ளப் புருஷனாய் வாய்த்திருக்கிறேன்'' என்று பாட்டை முடித்தான். அப்படிப் பாட்டை முடிக்கும்போது தன்னுடைய முகமூடியைச் சற்று அவன் விலக்கிச் சொந்த முகத்தைக் காட்டினான்.

அப்போது சதாரம் ''ஆ!'' என்று கூவி மூர்ச்சையடைந்து கீழே விழுந்தாள். ஆனால் சபையோர் எல்லாரும் அச்சமயம் பிரமாதமான குதூகலமடைந்து, கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். அநேகர் ''ஒன்ஸ்மோர்'' என்று கத்தினார்கள். அவன் திருடனாகையால், முகமூடிக்குப் பின்னால் பயங்கர முகம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தவர்களுக்குக் களைசொட்டிய முத்தையனுடைய அழகான முகத்தைக் கண்டதும் அவ்வளவு உற்சாகம் உண்டாயிற்று. அச்சமயம் சர்வோத்தம சாஸ்திரியின் முகம் கூடப் பிரகாசமடைந்தது. ஆனால் அதற்குக் காரணம் மட்டும் வேறு. திருடனுடைய முகமூடி விலகிய அதே சமயத்தில் சாஸ்திரி தம்முடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள ஒரு வழி கண்டுபிடித்து விட்டார்! ''அபிராமி! அபிராமி!'' என்று அவருடைய வாய் அவரையறியாமலே முணு முணுத்துக் கொண்டிருந்தது.

(தொடரும்)



பருகுக நரசுஸ் காபி
பெறுக நற்பரிசுகளை!

- 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
- 6 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டம்ளர்.
- 2 கிலோ நரசுஸ் காபிக்கு பல வண்ணத் துணிப் பை.
- 500 கிராம் நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி ஸ்பூன்.

மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

12.2.83 முதல் 19.3.83 வரை உள்ள விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!

நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE NCC 2261

ஏன் சார் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்?

● இரண்டு அத்தியாயங்களின் கதைச்சுருக்கம் பார்த்தேன். சுத்தமான வேலை.

ஆனால் குழந்தையைப் போட்டோ எடுத்து மணிபர்சில் செருகிக் கொள்கிற மாதிரி இந்தக் கதைச் சுருக்கச் சமாசாரம் எனக்குப் படுகிறது. என் குழந்தையின் போட்டோதான். ஆனால் அதுவே குழந்தையாகுமா? விழி உருட்டலும், கூவலும், துள்ளிக் குதித்தலையும் போட்டோ சொல்லுமா?

கதைச் சுருக்கம் ஒரு கெட்ட பழக்கம், வெறும் நிழல், என்பது என் அபிப்பிராயம். இது எழுதுபவனின் மன உளைச்சல். இதை அறவே நிறுத்திவிட்டால் என்ன?

உங்களோடு உங்கள் வாசகர்களையும் இது பற்றி யோசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் முன் அத்தியாயங்களைத் தேடிப் படிப்பார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை-14 பாலகுமாரன்

பாலகுமாரன் அவர்களுக்கு, தங்கள் கடிதத்தையும் சுருக்க நேர்ந்ததற்கு வருந்துகிறோம். -ஆர்

● சாதனை நிகழ்த்திய சாந்தியின் முகத்தை அட்டையில் சந்தோஷமாகப் போட்டிருக்கலாமே?

தென்காசி கு. அருணாசலம்

● காஸெட் ஒலி சித்திரம்: ஒரு சாஸ்திரிகள் கூறுகிறார்: ''நம்ம பிழைப்பிலே மண். தர்ப்பணம் பண்ற மந்திரம் காஸெட்டிலே வந்துடுத்தா?''

ஆனால் சித்திரம் எப்படி இருக்கிறது? அமாவாசை தர்ப்பணம் பண்ணுவது போல இல்லையே!

சென்னை-28 எம்.எஸ். ராஜகோபாலன்

ஜோக்கே அதுதான் ஸார்! சாஸ்திரிகளை ஒதுக்கிவிட்டு கேஸட் ரிகார்டரைப் பயன்படுத்தப் போக இப்படியெல்லாம் தப்பும் தவறுமாகச் செய்வார்கள் என்பதைத்தான் சுட்டிக் காட்டியிருக்கிறார் உமாபதி. -ஆர்

● இந்திரா காங்கிரசில் உள் ஜனநாயகம் நிலவாததனால்தான் சமீபத்தில் தேர்தல்களில் தோல்விகளைத் தழுவ நேர்ந்தது என்பதை அழுத்தமாக எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். அது சரி, 'பாடம் கற்றுரில்லை, படிப்பினை பெற்றுரில்லை' என்றல்லவா தலைப்பு இருந்திருக்க வேண்டும்?

நெல்லிக்குப்பம் ஆர். மார்க்கண்டன்

● அட, குண்டுராவ்தான் போய்விட்டாரே ஹெக்டேயாவது தண்ணீர் கொடுக்க மாட்டாரா என்று எண்ணித்தான் போட்டி போட்டுக் கொண்டு பெங்களூருக்குச் சென்றுர்கள். அதைப் போய்க் கேலி செய்து கார்ட்டூன் வரைந்தது வருத்தத்துக்குரியது.

வேலூர் (சேலம்) லெட்சுமி செங்குட்டுவன்

● தொழிற் கல்வி தொடங்குவோம் போன்றவற்றை வெளியிட்டு ஏன் சார் எங்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள்? மனம் வேகுகின்றது இதைப் படித்தவுடன்.

சென்னை-17 கே. சங்கர்

● ''இந்த ரோடுக்கு வாழ்க்கை ரோடுன்னு பேரு. ஏனென்றால் இதில் நிறைய மேடு பள்ளம் இருக்கும்!'' – இது ஜோக்கல்ல: உண்மைதான். கும்பகோணத்திலிருந்து நன்னிலம் செல்லும் பஸ் மார்க்கத்தில் ''வாழ்க்கை'' என்ற சிற்றூர் உள்ளது. அந்த ஊர் வழியாகச் செல்லும் ரோடு ''வாழ்க்கை ரோடு'' என்று கூறப்படுகிறது.

மேலமிஞ்சிப்பட்டு கடலூரார் குஞ்சிதபாதம்

● முதல் பக்கத்தில் வெளிவந்த மஞ்சு தேவனின் மட்டரகமான ஜோக் ''கல்கி''க்குத் தேவைதானா?


மதுரை பி. எல். பரமசிவம்

● மனைவி பிரசவத்துக்குப் பிறந்தகம் செல்லும் காலம் கூட 'வாடகை மனைவி'யைத் தேடி அலையும் ஆண்கள் மத்தியில் ராகவன் போன்ற கற்பு நெறி தவறாத ஆணு என்று வியந்தேன். ஜெக சிற்பியனின் 'இதயத்தின் வேஷம்' குறுநாவல் பனிதனின் பலவீனத்தைச் சுட்டும்போதே சந்தேகப் பேயால் ஆட்கொள்ளப் பட்டு சஞ்சலப்படும் மனங்களுக்கு சவுக்கடியும் தருகிறது.

தஞ்சாவூர்-9 அ. சம்பத்

● செய்யாத குற்றத்துக்காகச் சட்டத்திலிருந்து விடுபட்டாலும் அம்மனிதனுக்குச் சமுதாயம் வழங்கும் தீர்ப்பு என்னவென்பதை ரமாமணி சுந்தரின் ''தண்டனை'' சிறுகதை துல்லியமாக விளக்கிவிட்டது.

வில்லியனூர் ப. விஜயகுமார்



அங்கேயும் கதவுகள் உண்டு

விகேறதானந்த்



அவனையே பார்த்தார்.

அந்த முகம் வேறொரு முகத்தை நினைவு படுத்திற்று.

அந்த நீண்ட மூக்கு, தடித்த உதடுகள், சற்றே பெரிய கண்கள், அகன்ற நெற்றி...

'ராமாமிருதத்தின் பிள்ளையாக இருக்கலாமோ?'

''நீனி தூக்கலா ஒரு காப்பிகொண்டா!''

திரும்பி நடந்தவனின் பரந்த முதுகையும் எட்டக் காலை வைத்து நடந்ததையும் கவனித்தார் ஆத்மநாதன்.

டபராவுக்குள் தம்ளரைப் புதைத்து நுரை ததும்பும் காப்பியோடு வந்து அவர் மேஜை முன் வைத்தான். டபராவின் அடியில் பில்லைச் செருகினான்.

''திருச்சியா உனக்கு?...'' என்று கேட்டார் ஆத்மநாதன்.

''ஆமாம், சார்...''

''உன் அப்பா பேரு ராமாமிருதமா?''

''ஆமாம் சார்.''

ஒரு சந்தேக வித்து பூமிக்குள்ளேயே கருகிப் போயிற்று. அவர் ஊகம் சரிதான். அவனேதான்.

'கடைசியாக ஆத்மநாதனிடமிருந்து கடிதம் வந்தது எப்போது? இரண்டு வருடங்களாவது ஆகியிருக்குமே? இருக்கலாம்.

அந்தக் கடிதத்தில் அவர் எழுதியிருந்த அந்த வரிகளை ஆத்மநாதன் இன்னமும் மறக்கவில்லை.

'பெண்களைப் பற்றிக் கவலையில்லை. நாளைக்கு அவர்களை ஓரிடத்தில் தள்ளிவிட்டால் பிரச்னை தீர்ந்து போகும். எல்லாம் பையனைப் பற்றித்தான். படிப்பு ஏறவில்லை. ஒரு வகுப்பை விட்டு இன்னொரு வகுப்புக்குத் தாண்டவே ரெண்டு வருஷப் பிரயத்தனம். அவன் எப்போது படிப்பை முடித்து, எப்போது உத்தியோகம் தேடிக்கொண்டு...?

பிள்ளைப் பாசம் நீர்க் கசிவுகளாக எழுத்துக்களில் கோடிட்டிருந்தது.

ஆத்மநாதனும், ராமாமிருதமும் ஒரே ஊர்க்காரர்கள். நெருக்கமான நட்பின் பத்து வருட முதிர்ச்சி.

அந்த நட்பின் உரிமையோடு ஓர் ஆறுதலைத் தேடியோ, இல்லை, மனத்திலிருப்பதைக் கொட்டி அழுது வடிகால் தேடிக்கொள்ளவோ அப்படி ஒரு கடிதத்தை அவர் எழுதியிருக்க வேண்டும்.

படிப்பு ஏறவில்லை என்பதால் பாதியில் பள்ளித் தொடர்பைக் கத்தரித்து விட்டு ஊரை விட்டே வந்து விட்டானா? இல்லை, ராமாமிர்தம்தான் மன அரிப்பின் வீர்யம் தாங்காமல் அவனை விரட்டி விட்டாரா?

ஒரு பெரிய நிறுவனத்தின் காஷியருடைய பிள்ளை ஓட்டலில் சப்ளையராக வேலைக்கு அமர்ந்து, வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, ''சாருக்கு என்ன வேணும்?' என்று சன்னமான குரலில் கேட்பதை எண்ணிப் பார்த்தார்.

இதயத்தின் எடைக்கோணம் லேசாக அதிர்ந்தது.

''உனக்கு எப்ப வேலை முடியும்?''

பில்லைக் கையில் எடுத்துக் கொண்டவர் நாற்காலியை விட்டு எழுந்தார்.

''ஒரு மணிக்கு சார்...''

''இந்த அட்ரஸ்ல என்னை வந்து பார். இன்னைக்கு ஞாயிற்றுக் கிழமைதானே வீட்ல தான் இருப்பேன்....''

துண்டுக் காகிதத்தில் முக வரியை எழுதித் தந்தார்.

''சரி சார்....'' என்றவனின் முகத்தில் குழப்பம் கடை விரித்தது.

''டேய்!... முதல்ல தண்ணியைக் கொண்டாந்து வச்சிட்டுப் பெறகு பேசிட்டிரு...''

ஒரு ஜோடி சிவப்புக் கண்களின் சாராய பந்தம் அவனை வம்புக்கிழுத்தது.

ஆத்மநாதன் திரும்பினர்.

அனுதாபம் தன் பாதச் சுவடுகளை ரகசியமாகப் பதித்தது.

இரண்டு மணி சுமாருக்கு அவன் வந்து கதவைத் தட்டியபோது வானொலியில் ஆங்கிலச் செய்தி ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தது.

இப்போது அவன் லேசாக வரியோடிய நீலச் சட்டையும், எட்டு முழ வேட்டியும், படிய வாரிய தலையும், நெற்றியில் திருநீற்றுக் கீற்றுமாகக் காட்சியளித்தான்.

''இப்படி உட்கார்...''

ஆத்மநாதன் ஒரு நாற்காலியைக் காண்பித்தார். தயங்கினன்.

''பரவாயில்லே. நான் உன் முதலாளி இல்லே. உன் அப்பாவுக்கு வேண்டியவன். ரொம்ப நாள் சிநேகம்.''

அந்தச் சுருக்கமான அறிமுகத்தில் அவன் குளிர்ந்து போய் இன்னும் மிச்சமிருந்த தயக்கத்தோடு மெல்ல உட்கார்ந்தான்.

''உன் பேரு?''

''பாஸ்கரன்.''

''உன்னை ஏழெட்டு வருஷத்துக்கு முந்திப் பார்த்தது. ஆனு... அப்பாவோட ஜாடை உன்னை எனக்கு அடையாளம் காட்டிக் கொடுத்தது...''

அவன் சிரிக்க முயன்றுன். கூச்சம் இதழ்களை இறுக மூடிற்று.



''எதுவரைக்கும் படிச்சே?''

அவன் கண்கள் இப்போது நீரில் மிதக்கக் காத்திருந்தாற்போல் தோன்றியது.

''உன்னைப் பத்தி உன் அப்பாவுக்கு ரொம்ப வருத்தம். அவரைச் சொல்லிக் குத்தமில்லே. உன்னையும் குத்தம் சொல்ல நான் தயாரா யில்லே. யார்யாருக்கு என்ன விதிச்சிருக்கோ''

அவன் கண்கள் இப்போது நீரில் மிதந்தது.

'பாஸ்கர்! நீ இப்படிக் கலங்கக் கூடாது. உன்னை இந்த ஊருக்கு வரும்படி செய்தது எதுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா? பதற்றப் படாமல் சொல்லு....''

பரிவோடு கேட்டார்.

''அப்பா வீட்டை விட்டு வெரட்டிட்டார். இங்கே வந்தேன். இந்த ஓட்டலுக்குப் போய் வேலே கேட்டேன். நிறையக் கேள்வி கேட்டார். அப்புறம் வேலே போட்டுக் கொடுத்தார். வேலேயில சேர்ந்து மூணு நாள் ஆகிறது....''

''அப்பாவுக்கு லெட்டர் எழுதினியா?''


''இல்லே. என்கடுதாசை அவர் எதிர்பார்த் திட்டிருப்பார்னு எனக்குத் தோணலே!''

''ஏன் தோணக் கூடாது? கோபம் பாசத்தை முட்டித் தள்ளிடாது. எல்லாம் கண நேர சீறல்தான். இப்ப நீ எங்கே இருக்கியோ, என்ன செஞ்சிண்டிருக்கி யோன்னு அவர் கவலேப்பட்டிண்டிருக்கலாம், இல்லையா?''

''இருக்கலாம் சார். அன்னைக்கு அவர் என்னை வெளியே போகச் சொல்லிக் கதவைச் சாத்தினப்போ என் மனசுக்கும் ரெட்டைத் தாழ்ப்பாள் போட்டுட்டேன். அம்மா உயி ரோட இருந்திருந்தா என்னை ஒரு கோயில் பிராகாரத்துல தங்க வச்சு வெயில் படாம பாத்திண்டிருப்பா இல்லியா?''

''இதுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்னன்னு உனக்குப் புரியலேயா?''

''மேலத் தெரு சாமிநாதனேட பெண் விசாலாட்சிதான்...''



''என்னங்க இது! ரோடு போடற துக்கு நேத்துக் கொட்டின ஜல்லியை எல்லாம் இன்னிக்கு அள்ளிக்கிட்டுப் போறீங்களே!''

''எலக்ஷன் தேதி மாறியிருக்குன்னு இன்னிக்குக் காலேயிலேதான் தெரியு மாம்....'' -ஆர். ஜெயசங்கர்

''யார்? மெஸ் வச்சு நடத்திண்டிருந்தாரே அந்த சாமிநாதனு?''

''ஆமாம். அவர் செத்துப் போயிட்டார். அம்மாக்காரி தன் பொண்ணை இவர் முன்னடி நிக்க வச்சு இவரைத் தலே குப்புறக் கவிழ்த்து ரொம்ப நாளாச்சு....''

''உன் அக்கா ரெண்டு பேரும் இதுக்கு ஒண்ணும் சொல்லல்லியா?''

''அதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காம ரெண்டு பேருக்கும் ஆறு மாசத்துக்கு முன் ஞடியே கல்யாணம் செஞ்சு வச்சிட்டார்.''

''அப்படியா?....''

''கொஞ்சநாள் அங்கேயே இருந்துக்கோ. தெரிஞ்ச இடத்திலே சொல்லி உனக்கு ஒரு வேலேக்கு ஏற்பாடு செய்யறேன். நீ இப்படி ஊரை விட்டு ஒதுங்கி ஒரு அனுதைப் பிள்ளை மாதிரி...''

''இல்லே, சார். நான் அனுதை இல்லே.'' என்ன சொல்ல வருகிறுன்?

''இங்கே வரதுக்கு முன்னடி அப்படி தான் நான் நெனேச்சண்டிருந்தேன். ஆனு இப்ப நான் அனுதை இல்லேன்னு நீர் மானம் ஆயிடுத்து. ஏன்னு என் அப்பாவுக் கும் மேலாக நீங்க இருக்கீங்க. உங்க பக்க பலமும், துணையும் போறும் எனக்கு.''

சட்டென்று எழுந்து தம் காலில் விழப் போனவனைத் தாங்கிப்பிடித்துக்கொண்டார்.

காலப் பிரளயத்தின் ஆவேசச் சுழிப்பில் ஐந்து வருடங்கள் அடித்துச் செல்லப் பட்டன.

இப்போது பாஸ்கரன் இருபத்தைந்து வயது இளைஞன். ஒரு நிறுவனத்தில் ஊழி யம் புரிபவன்.

ஓர் அத்யந்த சிநேகிதரின் மகன் என்பதை விட ஓர் அப்பாவி ஆண்பிள்ளை என்ற பரி வோடு அவனை முதலில் சாதாரண வேலே ஒன்றில் அமர்த்தி, மாலே நேர வகுப்பில் படிக்க வைத்து, பக்கத் துணையாக நின்று அவனது விசாலமான வளர்ச்சியில் பூரிப்பும் பெருமையும் பொங்க நின்றூர் ஆத்மநாதன்.

அங்கும் இங்கும் இடத்துக்காகவும் சாப் பாட்டுக்காகவும் அலேய விடாமல் வீட்டோடு தங்க வைத்துக் கொண்டார்.

மனத்தில் மட்டும் உறுத்தல்.

ராமாமிருதம் என்னவானூர்? ஒரு கடிதம் கூடப் போட முடியாத அளவுக்கு மனசு கட்டிதட்டிப் போய் விட்டது ஏன்? பாஸ் கரனுக்குத் தெரியாமல் தான் போட்ட கடி தங்கள் எந்த வித பதிலேயும் பெருமல் ஒரு வழிப் பாதையின் முடிவுறுப் பயணமாய் அமைந்து விட்டதேன்?

இன்றைய தம் மகனேப் பார்த்துச் சந்தோஷமும், பெருமிதமும் கொள்ளவேண் டிய ஜீவன் இன்று வேறெரிடத்து மணற் படுகையில் கால் பதிந்து சென்றுகொண்



ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux
coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணெ
15 கிலோ 4 கிலோ டின்களிலும் 1 லிட்டர் 500
பாலிதின் பாட்டில்களிலும் கிடைக்கிறது.
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபீஸ் : 2244. 4484. மில்ஸ் : 2266. 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR. Phone : 3107. 3745.

டிருந்ததை எண்ணி எண்ணி வேதனைப்பட்டார்.

ஆறு மணி சுமாருக்கு பாஸ்கரன் வந்தான்.

''வாழ்க்கையில் பணம் சம்பாதிக்கிறது மட்டும்தான் உன் லட்சியமா இருக்காதுன்னு நினைக்கிறேன்....''

''என்ன மாமா சொல்றீங்க?''

''ஆமாம், பாஸ்கர். உனக்கு ஒரு குடும்பம் அமையணும் இல்லையா? இப்பக் கைநிறைய சம்பாதிக்கிறே. வயசும் இருபத்தஞ்சு ஆயிடுத்து. கல்யாண வயசைத் தொட்டு ரொம்ப நாளாச்சு. உனக்கு அப்படி ஒரு ஆசை இல்லேன்னாலும் எனக்கு இருக்கு. உனக்கு ஒரு வேலையைத் தேடிக் கொடுத்த தோடு என் கடமை முடிஞ்சுட்டதா நான் நினைக்கலே. உனக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்கவும் பிரியப்படறேன். என்ன சொல்றே?....''

''நீங்க என்ன சொன்னாலும் அதுக்குக் கட்டுப்பட்டு நடக்க நான் தயாரா யிருக்கேன், மாமா.''

''நீ இப்படிச் சொல்றப்ப எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு. நாளைக்கே நான் திருச்சிக்குப் புறப்படறேன். உன் அப்பாவைப் போய்ப் பார்க்கப் போறேன். வேற ஒண்ணும் கேட்கப் போறதில்லே. உங்க மகனுக்குக் கல்யாண ஏற்பாடு நடந்திண்டிருக்கு. அதுக்கு மட்டுமாவது நீங்க வந்து நல்லபடியா நடத்தி முடிச்சிடணும்னு கேட்டுக்கப் போறேன்...''

அவன் சிரித்தான்.

திருச்சி ஜங்ஷனை விட்டு வெளியே வந்தார் ஆத்மநாதன்.

ரயில் நிலையத்திலேயே பல் விளக்கியாயிற்று. ஏதாவது ஓர் ஓட்டலுக்குள் நுழைந்து சிற்றுண்டியை முடித்துக் கொள்வோம் எனத் தீர்மானித்தார்.

அந்தக் குறுகிய நேரத்திலும் ராமாமிர்தம் தமக்கு அளிக்கப் போகும் வரவேற்பு எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தார்.

ஓட்டலுக்குள் சென்று அமர்ந்தபோது—

''சாருக்கு என்ன வேணும்?''

என்றோ ஒலித்த கேள்வியின் மறு ஒலி பரப்பாய் அதே சன்னமான குரலில்!...

பார்வையை உயர்த்தி, புருவத்தை விரித்துப் பார்த்தார்.

''ராமாமிர்தம், நீயா?''

''ஓ! ஆத்மா.... என்ன திமர்னு திருச்சி விஜயம்?.....''

மனசின் சோகத்தை மெல்லிய உணர்வால் போர்த்திக் கொண்டு ராமாமிர்தம் கேட்டபோது, அந்தப் போர்வை அடுத்த விநாடியே பலவீனப்பட்டுப் போயிற்று.

''காலையிலே தலை வலின்னியே இப்ப எப்படி இருக்கு?''

''தலை வலி போய் இடுப்பு வலி வந்துடுத்து.''

''அப்போ வலி இறங்கி இருக்குன்னு சொல்லு!'' —ப்ரியா பாலு



மாலை.

ரயில் நிலையத்தின் பிளாட்பாரத்தில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

''அப்புறம் என்ன? .... அந்த ராட்சசியும் அவ அம்மாக்காரியும் சேர்ந்திண்டு....''

அவமானத்தால் ராமாமிர்தத்தின் தலை பிளாட்பாரத்தின் சிமெண்ட் தரையை வெறித்தபடி இருந்தது.

''ஏதோ ஒரு வெறி, அந்த வெறி என்னை எங்கெல்லாமோ கொண்டு போச்சு. ரொம்ப தூரத்துக்குப் போயிட்டேன். பாங்க் பணத்தைக் கையாடல் பண்ணுகிற அளவுக்கு. அன்னைக்கு அவ மட்டுமே என் மனசை ஆக்கிரமிச்சிண்டிருந்தா. அந்த வேகத்துல பெத்த பிள்ளையை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினேன். என் பணம், கௌரவம் எல்லாத்தையும் ஒட்டு மொத்தமா உறிஞ்சிட்டு அந்தச் சண்டாளி இன்னைக்கு என்னை வெளியில தள்ளிக் கதவைச் சாத்திட்டா. என் பிள்ளை முதல்ல ஒரு ஓட்டல்லதான் 'உத்தியோகம் பார்த்தான்னு சொன்னே. அந்த நிலைமைக்கு நானும் ஆளாயிட்டேன்; சரித்திரம் ரொம்ப வேகமாத் திரும்பிடுத்து. ஆத்மா. இந்த நிலைமையில அவன் முன்னால வந்து என்னை நிக்கச் சொல்றியா?''

ஒரு சுய தரிசனத்தின் உச்சக் கட்டமாய் இரு பொட்டுக் கண்ணீர் தரையில் விழுந்து தெறித்தது.

தூரத்தில் வண்டியின் பிரகாசமான ஒளி தெரிந்தது.

''எழுந்திருப்பா, வண்டி வரது...''

தலை குனிந்தபடி அமர்ந்திருந்த ராமாமிர்தத்தின் தோளைப் பற்றினார் ஆத்மநாதன்.

''இந்த நெலைமையில அவன் முன்னால வந்து என்னை நிக்கச் சொல்றியா?...''

அந்தக் கேள்வியின் அர்த்தம் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்தது ஆத்மநாதனுக்கு.


குக்கிங் காஸ்—
அன்றாடம் வசதி
அளிக்குது, அதற்கு
அன்றாடம்
எச்சரிக்கை
தேவை
உங்களுக்கு
குக்கிங் காஸ் சமையல் அறையில் ஒரு வரப்பிரசாதம். அது வரப்பிரசாதமாக இருக்கவேண்டுமானால் கீழே கண்டுள்ள எளிய எச்சரிக்கைகளை நினைவில் கொள்ள வேண்டும்.
காஸ் கசிவைத் தடுத்திடுவதற்கு:
• சிலிண்டரை செங்குத்தாக வைக்கவும். படுக்கை வசத்தில் வைத்தால் லிக்யுஃபைடு காஸ் தப்பிச் செல்லும் மற்றும் கசியும்.
• ரப்பர் ட்யூபில் வெடிப்பு/ஓட்டை இருப்பதை கண்டால் உடனடியாக அதை மாற்றவும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதை மாற்றவும். நல்ல தரமான ட்யூபை மட்டுமே உபயோகிக்கவும்.
• உபயோகத்தில் இல்லாதபோது சிலிண்டர் வால்வையும் பர்னர் குமிழ்களையும் மூடவும்.
• எப்போதுமே முதலில் தீக்குச்சியை பற்றவைத்துக் கொண்டு பின்பு பர்னரை திறக்கவும்.
சிலிண்டர் கொண்டு வருபவர் பாதுகாக்க வேண்டியவை:
• பாதுகாப்பு கட்டை/பிரஷ்ஷர் ரெகுலேட்டரை திறப்பதற்குமுன் சிலிண்டரை மூடவும்.
• சிலிண்டர் காப் அல்லது வால்வை திறப்பதற்கு சுத்தியல் போன்ற கனமானவற்றை உபயோகிக்க கூடாது.
• பிரஷ்ஷர் ரெகுலேட்டரில் ஒவ்வொரு தடவையும் ரப்பர் வாஷரை மாற்றவும்.
• ஜாயிண்ட்டுகள் மற்றும் ட்யூபை சோப்புக் கரைசல் கொண்டு சோதனை செய்யவும். காஸ் கசிவிருந்தால் சோப்புக் குமிழிகள் தோன்றும்.
• சிலிண்டரை மாற்றிய பின்பு பர்னரை பற்ற வைக்க வேண்டும்—அது ஒழுங்காக வேலை செய்கிறதா என்பதை பார்ப்பதற்கு.
இவற்றை செய்த பின்பும், காஸ் வாடை அடித்தால் உடனடியாக செயல்படவும்.
• சிலிண்டர் வால்வு மற்றும் பர்னர் குமிழ்களை மூடவும்.
• அகர்பத்திகள் உள்பட திறந்த சுடர்கள் அனைத்தையும் அணைத்துவிடுங்கள்.
• காஸை வெளியேற்ற ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்து வைக்கவும்.
• எந்த மின்சார ஸ்விட்சையும் போடுதலோ அணைத்தலோ கூடாது.
• காஸ் வாடை நிலவினால் உடனடியாக உங்கள் இண்டேன் விநியோகஸ்தரை அழைக்கவும்.
நினைவிருக்கட்டும், இன்று குக்கிங் காஸ் சமையலுக்கு மிகவும் பாதுகாப்பான எரிபொருளாகும்—முறையாகக் கையாளும்போது. ஆகவே கவனத்துடன் செயல்படவும். அதை தவறாகக் கையாளாதீர்கள்.
இடர்பாடு ஏதும் ஏற்பட்டால் உங்கள் இண்டேன் விநியோகஸ்தரையோ அல்லது இந்தியன் ஆயில் கஸ்டமர் ஸர்வீஸ் அமைப்பையோ அணுகவும்.
Indane
இண்டேன் குக்கிங் காஸ்
பாதுகாப்பினால் பயன் பெறுங்கள்!
பொதுமக்களின் நன்மைக்காக வெளியிட்டோர்:
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்.
Shilpi IOCL 1/83 TAM



இங்கிலாந்து டாக்டர் இந்தியாவில்

இங்கிலாந்தில் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகட்கும்மேலாக வசிக்கும் டாக்டர் என். ரகுபதி தெரிவித்த சில தகவல்கள்:

• அமெரிக்காவில் ''தற்காப்பு மருத்துவம்'' நிலவி வருகிறது. தேவை இருக்கிறதோ இல்லையோ டாக்டர்கள் சகல விதமான சோதனைகளையும் செய்து தீர்ப்பார்கள். இல்லா விட்டால் நோயாளி கேஸ் போட்டு விடுவாரோ என்ற பயம். இதற்கென்றே வக்கீல்கள் இருக்கிறார்கள். அமெரிக்காவில் சிகிச்சைக்கான செலவு அதிகம் ஆவதற்கு இதுவும் ஒரு காரணம். இங்கிலாந்தில் அப்படிக் கிடையாது. நஷ்ட ஈடு பெறக் கூடிய தொழிற்சாலை விபத்துகளில்மட்டுமே டாக்டர்கள் அதிக கவனத்துடன் நிறையச் சோதனை செய்வார்கள்.

• எல்லா சிகிச்சைகளும் நேஷனல் ஹெல்த் சர்வீஸில் இலவசமாகக் கிடைப்பது கிடையாது; உதாரணமாக அழகை அதிகரிக்கச் செய்து கொள்ளும் சிகிச்சை 'காஸ்மெடிக் சர்ஜரி' அதில் அடங்காது. தனியாக பிரைவேட் டாக்டரிடம்தான் செய்துகொள்ள வேண்டும்.



✖ டாக்டர் ரகுபதி

• நேஷனல் ஹெல்த் சர்வீஸில் நோயாளிகளுக்கு எல்லாமே இலவசம்; எத்தனை நாள் படுக்கையில் இருக்க நேர்ந்தால் கூட. மருந்துக்கு மட்டும் சொற்பத் தொகை வசூல் செய்கிறார்கள். ஆனால் ஒன்று: பதிவு செய்து — அந்த வரிசைக்கிரமப்படிதான் சிகிச்சை அளிக்கப் படும். இந்த முறையில் ஆர்த்தோபீடிக், கைனகாலஜி பிரிவுகளில் நோயாளிகள் இரண்டு வருடம் கூடக் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் முனைந்து வருகிறது.

• அவசர கேஸ்கள்; விபத்துக்கள் எனில் உடனடிச் சிகிச்சை அளிப்பார்கள். குழந்தைகளை உடனே கவனிப்பார்கள். • பர்மிங்ஹாமில் விபத்துக்களைக் கவனிக்கவென்றே தனி ஆஸ்பத்திரி உண்டு.

• டாக்டர்கள் ஓய்வு பெற வயது உச்ச வரம்பே கிடையாது. 65 ஆக நிர்ணயிக்க எண்ணியிருக்கிறார்கள். ஒவ்வொரு டாக்டரின்கீழ் இன்று சுமார் 2500 பேர் பதிவு செய்யப்பட்டிருப்பார்கள். இந்த எண்ணிக்கையை 2000 ஆக குறைக்க எண்ணுகிறார்கள்.

—சாருகேசி, தமயந்தி

''சிகை அலங்காரக் கலைஞர் சங்கத்திலே எல்லாரும் பேசி என்ன செய்வாங்க?''

''ஏதாவது ஒரு 'முடி' வெடுப்பாங்க''

—ஆர். ராஜேந்திரன்



எம்ஜி ஆருக்கு நோபெல் பரிசு தரலாமா?

○ சி. சௌந்தரபாண்டியன், கிருஷ்ணகிரி

? எம். ஜி. ஆரின் சத்துணவுத் திட்டத்தை அன்னை தெரசாவின் பணிகளுடன் ஒப்பிட்டு எம். ஜி. ஆருக்கும் நோபெல் பரிசு தரவேண்டும் என்று ஜெயலலிதா கூறியிருப்பது பற்றி....?

! நோபெல் பரிசு என்ன கிருஷ்ணா சினி வாசிடமா இருக்கிறது. அள்ளிவிட!

○ கே. ஸ்ரீதர், சென்னை-4 ★

? கல்வி அறிவில்லாத பெரும்பாலோர் தேர்ந்தெடுத்த அரசு எவ்வாறு இருக்கும்?

! எழுத்தறிவில்லாதவர்களுக்கு வோட்டுரிமை தந்ததுதான் நம் கஷ்டங்களுக்குக் காரணம் என்று நம்பும் கோஷ்டியைச் சேர்ந்தவனல்ல நான். படிக்கத் தெரியாத பாமரருக்கும் பொது அறிவு நிரம்ப உண்டு என்பது பல தேர்தல்களில் நிரூபண மாகியுள்ளது. படித்தவர்களுக்கு மட்டும் வோட்டு எனில் நம்மை ஆள்வது இன்டலெக்சுவல் அர்ரகன்ஸ் (அறிவாளிகளின் கர்வம்) ஆக இருக்கும். ஏழை டாழைகளுக்கு நலன் விளையாது. அண்ணலைச் சந்திக்க வந்த மவுண்ட் பாட்டன் ''காந்திஜி உங்களிடம் முக்கிய விஷயம் பேச வேண்டும்'' என்றார். ''சொல்லுங்கள்'' என்றார் தேசத் தந்தை. மவுண்ட் பாட்டன் சூழ இருந்த கிராம மக்களைப் பார்த்தார். ''காந்திஜி, நான் பேச விரும்புவது ராஜாங்க விஷயம்'' என்றார். அவர் பார்வை சென்ற திக்கைக் கவனித்த அண்ணல் ''ராஜாங்கம் அவர்களுடையது தான்!'' என்றார்!

○ ஆ. சந்திரசேகர், லால்குடி

? கர்நாடக சட்டசபையில் தமிழில் உறுதிமொழி எடுத்துக் கொண்ட எம். பக்தவத்சலத்தைப் பாராட்டலாமா?

! பேஷாக. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டதற்குக் கண்டனமும் எழுப்பலாம். இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வு காண ஒரே வழி ராஜாஜியின் இரு மொழித் திட்டத்தைத் தேசம் ஏற்பதுதான்.

○ ஜி. குமரேசன், பாண்டமங்கலம்

? வல்லபகதூர், காமராஜ், வினோபா ஆகியோர் உயிருடன் இருக்கும்போதே பாரத ரத்னா வழங்கியிருந்தால் சிறப்பாக இருக்குமல்லவா?

! அதைத்தான் செய்யவில்லை; 'அவர்கள் உயிருடன் இருக்கும்போது கொடுத்திருந்தால் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள்' என்று சால்ஜாப்பாவது சொல்லாதிருக்கலாம்.

○ சி. பூபால் சிங், சென்னை-35

? 'புலி பதுங்கியிருக்கிறது லேட்டாகப் பாயுமா?' என்றும் 'ஆரம்ப முதலே பாய்ச்சல்தான்' என்றும் இரு விதமான விமர்சன முடிவுகள். இதிலிருந்து அறிவது என்ன?

! இரு விமர்சகரும் இரு வேறு விஷயங்களை மனத்தில் வைத்து முத்தாய்ப்பு வரிகளை எழுதியிருக்கிறார்கள் என்பது. ஒருவர் ரஜினியின் நடிப்பையும் இன்னொருவர் பாக்ஸ் ஆபீஸையும்.

○ எஸ். எஸ். டி. ராஜன், சிறுதைபூர்

? படத் தயாரிப்பாளர்களும் பத்திரிகைக்காரர்களும் எப்போது சில்க் ஸ்மிதாவை விடுவார்கள்?

! உம்மைப் போன்ற ரசிகர்கள் அவரைப் பற்றிக்கேள்விகேட்பதை நிறுத்தும்போது.

○ எஸ். ரவீந்தர், குப்புச்சிபாளையம்

? வாய்விட்டுச் சிரிக்க முடியாத அரசியல் ஜோக்?

! ''காவேரி தண்ணீர் கொடுப்பார் என்பதற்காகக் குண்டு ராவைத்தேர்தலில் ஆதரித்தேன்'' — எம். ஜி. ஆர்.

○ மீனாட்சி ராமன், பாண்டிச்சேரி

? தமிழகத் திரைப்படக் கல்லூரி முதல்வராக ஜெயலலிதாவைப் போட்டால் என்ன?

! உரக்கச் சொல்லாதீர். கோபித்துக்கொள்ளப் போகிறார். அவருக்கு இதைவிடப் பெரிய பதவி யெல்லாம் காத்திருக்கிறது.

நீங்கள் கேட்டவை —துராசு



ரஜினி



ஜெயலலிதா

○ அண்ணு அன்பழகன், அந்தணப்பேட்டை

? இந்திரா இ. காங்கிரஸ் தலைவராக ராஜீவ் காந்தியை நியமிக்காமல் கமலாபதி திரிபாதியை நியமித்தது ஏன்?

! சுபஸ்ய சீக்கிரம் ராஜீவுக்கு நாற்காலியை ஒழித்துக் கொடுத்து ஒதுங்குவதற்காக.





பீலுமோடி



மவுண்ட்பேட்டன்

○ க. குர்ஷித் பேகம், சிதம்பரம்
? ஐம்பது ஆண்டுகள் அ.தி.மு.க.தான் ஆளும் என்று குழந்தைவேலு பேசியுள்ளாரே?
! அவர் வேணுமானால் 'குழந்தை'யாகஇருக்கலாம். ஆனால் எம். ஜி. ஆருக்கு வயது ரொம்ப ஆகிவிட்டது.

○ வைத்தீஸ்வரன், சேலம்
? ஆசிய போட்டியில் முதலாவதாக வந்து தங்கப் பதக்கம் பெற்ற சார்லஸுக்கு ஏன் பத்மஸ்ரீ பட்டம் கிடைக்கவில்லை?
! அவரென்ன பிரேம் நஸீரா, ராஜ்குமாரா? அரசியல் அரங்கில் குதிக்கப் போவதாக அச்சுறுத்தினாரா? எதுவுமில்லையே. அவ்வாறிருந்தால் பத்மபூஷணே கிடைத்திருக்கும்! என்னைக் கேட்டால் மொபெட் செய்கிறேன் என்று ஆரம்பித்து இதுவரை 128 லட்சம் நஷ்டம்அடைந்துள்ள தமிழக அரசின் டான்சி நிறுவன அதிகாரிகள், ஸ்டேட்பாங்க் ஆஃப்இந்தியாவில் (ஆமதாபாத்) மூனே கால் கோடி சாமர்த்தியமாக மோசடி செய்த எழுத்தர் போன்றோருக்கு பத்மபூஷண், பத்மஸ்ரீ பட்டங்கள் தந்து கௌரவிப்பதுதான் நமது தேசத்துக்குப் பொருத்தமாய் இருக்கும்!

○ எம். இராஜேந்திரன், லால்குடி
? பீலு மோடி மரணம் பற்றி....?
! தோற்றத்தில் மட்டுமல்ல பீமன். பீமனைப் அமைத்த இவர் மனத்தாலும் பீமனைப் போல் வீரர். செல்வந்தராக இருந்தும் அதற்கு ஆபத்து வருமோ என்று அஞ்சாமல் அரசியலில் புகுந்து எதிர்ப்புப் பணி ஆற்றினார். சமயோசிதமாகப் பேசி சிரிக்கவைப்பார். வஞ்சனை இல்லாமல் 'நான் வெஜ்'சாப்பிடும் மோடி ஒரு முறை மொரார்ஜி தந்த விருந்துக்குப் போன கதையை எஸ். எஸ். மாரிசாமி கூறக் கேட்டேன். மொரார்ஜியின் சிக்கனப் போக்கு விருந்திலும் பிரதிபலித்தது. சாப்பிட்டு முடித்ததும் புறப்பட்டார் மோடி. ''எங்கே அவசரமாகக் கிளம்புகிறீர்கள்?'' என்றனர் நண்பர்கள். ''வீடு திரும்பி சாப்பாட்டை முடிக்கத்தான்'' என்றார் மோடி ''அனைவருக்கும்'' கேட்க!

○ மா. மோகன், கோவை
? இம்ரான் கான் போல ஏன் நம் கபில்தேவ் வீரமாக, வலிமையாக விளையாட இயலவில்லை?
! அம்பயரின் பாக் சார்புள்ளதாக இருந்தது என்று ஒரு காரணம் கூறப்படுகிறது. முன்பெல்லாம் அம்பயர் சொன்னால் சொன்னதுதான். மறு பேச்சின்றிக் கீழ்ப்படிவார்கள். அது கிரிக்கெட் பண்பாடு. ஆனால் இப்போது அம்பயர் தவறு செய்தால் டீவி தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதைப் பார்ப்பவர்களுக்கு ஏமாற்றமும் கோபமும் ஏற்படுகிறது. மூன்றாவதாக ஒரு அம்பயரை டீவி பார்க்கச் செய்து சந்தேகமேற்படும்போது அவரைக் கலந்தாலோசித்துத் தீர்ப்பு வழங்குவதுதான் நல்லது. கிரிக்கெட் சட்டம் இதற்கேற்பத் திருத்தப்பட வேண்டும்.

○ வானதி, கெங்கவல்லி
? குண்டுராவ் தேர்தலில் வென்றிருந்தால் தமிழகத்துக்குத் தண்ணீர் கொடுத்திருப்பாரா?
! சந்தேகம்தான். ஆனால் பங்காரப்பா முதல்வராகி யிருந்தால் தமிழகத்துக்குத் தண்ணீர் கிடைத்திருக்கும் என்று தேர்தல் சமயத்தில் அவரைப் பேட்டி கண்டு திரும்பிய நமது நிருபர் நண்பர் சொல்கிறார். யாராயினும் சரி, தனக்கு மிஞ்சித்தான தருமம் என்றே எண்ணுவர் என்று எனக்குத்தோன்றுகிறது. பருவமழை பொய்த்ததால் கர்நாடகத்துக்கே போதிய அளவு நீர் இல்லை என்பது அவர்களின் வாதம். இதையெல்லாம் பார்க்கச் சற்று விட்டுக்கொடுத்தேனும் உறுதியான ஓர்ஒப்பந்தம் செய்து கொள்வது நல்லது. அட்லீஸ்ட் வீவில் நோவேர் விஸ்டேண்ட். அதற்கேற்ப நீர்ப்பாசனத் திட்டங்களை வகுக்கலாம்.

○ என். மோகன சுந்தரம், பொள்ளாச்சி
? எம்.ஜி.ஆர் என் அண்ணன் மாதிரி என்றாரே என்.டி.ஆர். ஆந்திராவிலும் அ.தி.மு.க. காலூன்ற வாய்ப்புண்டா?
! ஆந்திராவில் அ. தி. மு. க. காலூன்ற ஆரம்பித்தால் 'எம். ஜி. ஆர். என் அண்ணன் மாதிரி' என்று என். டி. ஆர். சொல்வாரா?

○ கார்த்திக்மோகன், கோவை
? பேருந்துகளும் கார்களும் லாரிகளும் எழுப்பும் பயங்கர ஹாரன் ஒலிகளைக் கட்டுப்படுத்த போலீசார் முன் வர மாட்டார்களா?
! ஹாரன் ஒலிகளை மட்டுமின்றி ஸ்கூட்டர் போன்றவை சைலன்ஸர் இல்லாமல் ஓட்டப் படுவதையும் ஒலிபெருக்கிகளின் ராராச அலறல்களையும் கட்டுப்படுத்த வேண்டும். இவை யெல்லாம் மக்களின் உடல், மனம், உழைப்பு, உறக்கம் ஆகிய அனைத்துக்கும் எதிரிகள்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
கே. ஸ்ரீதர்,
16, பிருந்தாவனம் தெரு
மயிலை, சென்னை-4

நீதிபதி

சிவாஜி கணேசனுக்கு
ப்ரமோஷன் வாங்கிக் கொடுத்துள்ளார் பாலாஜி.
நீதிபதி பதவி!

வைரக் கடத்தல்காரனின் தம்பிக்கு ஆயுள் தண்டனை வாங்கிக் கொடுத்த காரணத்திற்காக அவன், நீதிபதியின் மகனையே கூண்டில் நிறுத்தி இவரைக் கொண்டே தண்டனை வாங்கிக் கொடுத்துச் சதி செய்கிறான்.

இன்னொரு மகனையும், மருமகனையும் தன் வலையில் வீழ்த்திக் கொண்டு எதிராகச் செயல்பட வைக்கிறான்.

நீதிபதி சூழ்ச்சிகளை முறியடித்து எவ்வாறு தம் கௌரவத்தை நிலைநிறுத்திக்கொள்கிறார் என்பதே கதை.

சிவாஜி ஆங்காங்கே நடிப்பு முத்திரையைக் குத்தியுள்ளார்.

கடச் கட ஒரு கப் காப்பியைக் கொடுத்துவிட்டு மகனைச் சிறைக்கு அனுப்பி வைத்ததை மனைவி விஜயா குத்திக் காட்டியதும் பொங்கி எழுகிறாரே, அந்த இடம் காப்பியைவிட சூடு!

அப்பாவுக்கு எதிராகப் பிரபுவைப் பேசவைத்து நடக்கவைத்து, உருவத்தை மாற்றிக் கலகலக்க வைக்கிறார்கள்.

எல்லாம் சரிதான். ஆனால் 'நாலு பேர் சுமந்து பார்க்க வேண்டும்' என்றெல்லாம் மகனைப் பேச வைத்திருக்கிறார்களே... அது?... கசப்புணர்வு.

ஊமை மேனகாவைப் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை 'ஒரு பாட்டுப் பாடம்மா' என்று கேட்டதும் அவர் அழுதுகொண்டே உள்ளே ஓடிவிடுவது நெகிழ்ச்சி.

இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்றிருந்த விஜகுமார் பெண் கேட்டு திருமணம் செய்துகொண்ட பிறகு திடீரென மாமனாருக்கு எதிரியாக மாறும் இடம் ரொம்ப ரொம்ப செயற்கை.

அத்தனை பெரிய கடத்தலுக்கு 'குடுமி' வைத்த வி. கே. ராமசாமியைக் கூட்டாளியாக்கி அடிக்கடி ஆலோசனை சொல்ல வைத்திருப்பது வேடிக்கை.

வைரங்களை அனுப்பி வைக்கப் படத்தில் பொம்மைகள் பயன்படுத்தப்பட்டிருப்பது போல் சில நட்சத்திரங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

சத்யகலா, ராதிகா, மனோரமா, நளினி, ரஜினி, மகேந்திரன், ராம்ஜி, பூர்ணம் விசுவநாதன், வி. கோபாலகிருஷ்ணன், பாலாஜி, ஜம்பு, சுதர்சன்....

பட்டியல் மின்னுகிற அளவுக்குப் படம் மின்னவில்லையே!

- திரைஞானி



கல்கி நினைவுச் சொற்பொழிவு

புரட்சிக்கவிஞன் பாரதி!



"ஆங்கிலக் கவி ஷெல்லியைப் பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை என்றால், 'ஷெல்லி தாசன்' என்று புனைபெயர் வைத்துக் கொண்ட பாரதியை ரஷ்யப் புரட்சியின் குழந்தை'' எனலாம்'' என்று ஒரு புதிய கோணத்தைக் காண்பித்தார் சிதம்பர ரகுநாதன். சென்னை பல்கலைக் கழகத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் தலைப்பு: பாரதியும் புரட்சி இயக்கமும்.

ஜார் அரசனின் கொடுங்கோன்மையை எதிர்த்து நடந்த புரட்சி இயக்கத்தில், 'ருஷ்யச் சக்கரவர்த்தியின் சிங்காதனம் இப்போது ஆடத் தொடங்கி விட்டது!' என்று எழுதியவர், வெடிகுண்டு வீச்சுக்களையும் கொலைச் செய்திகளையும் பற்றிக்கூடச் சுட்டிக் காட்டி விட்டு, 'நமது தோழர்கள் செய்து வரும் உத்தமமான செயல்கள்' என்று அந்தச் சூழ்நிலையில் பாராட்டியதை வைத்து, 'பாரதியை ருஷ்யப் புரட்சியின் குழந்தை என்று நிச்சயமாகச் சொல்லலாம்' என்றார்.

'ஆயுதப் போராட்டத்துக்கு நான் ஒன்றும் எதிரியல்ல' என்று முழக்கம் செய்த திலகர் இவர் குரு. ஏன், சகோதரி நிவேதிதாவைக் கல்கத்தாவில் சந்தித்து அவரையே குருமணியாக ஏற்றவர் பாரதி. (சகோதரி நிவேதிதாவிடம் ரிவால்வரைக் கேட்கப் போன ரகசியப் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களிடம் துப்பாக்கியைக் கொடுக்க மறுத்தாராம் நிவேதிதா. 'சந்நியாசி நிவேதிதாவிடம் கூட ரிவால்வர் இருந்தது தெரியவில்லையா?'' என்று கேட்டார் ரகுநாதன். இந்த ரகசிய இயக்கத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் நிதி திரட்டச் சில சமயங்களில் கொள்ளையடித்தது கூட உண்டாம். ஆனால் கொள்ளையடித்த பணத்துக்குக் கடனாக ரசீது கொடுத்த நேர்மையான இளைஞர்களாய் இருந்தார்களாம்!)

கீதையில் அர்ச்சுனனுக்குக் கண்ணன் போர் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியதைச் சுட்டி, சுதந்திரம் அடைய நாம் போரிட்டே ஆக வேண்டும் என்று வலியுறுத்தினார் பாரதி. ஆயுதம் தாங்கிய போராட்டத்தைத் துவக்க இளைஞர்களுக்கு உத்வேகம் ஊட்டி வந்தார்!

அவரது கவிதைகளிலே இந்தக் கருத்துக்கள் உள்ளனவா? ஏன் இல்லாமல்? துர்க்கையாக, காளியாக, பவானியாக—ருத்ர சொரூபமாகத்தான் பாரதத் தாயை அவர் பார்த்தார் 'எங்கள் தாய்' பாடலில். இந்த நாட்டுக்குத் தம் இரத்தத்தைக் கொடுத்து உயிர்த் தியாகம் செய்யக் கூடிய இளைஞர்கள் தேவை என்று தானே குரு கோவிந்த சிங்கைப் பற்றிப் பாடினார்? சிவாஜி தன் படையினருக்குக் கூறியதாக அமைந்திருக்கும் பாடல், 'மாஜினி சபதம்', வ.உ. சி.க்கு எழுதிய வாழ்த்துக் கவி எல்லாம் புரட்சிக் கனலில் புடம் போடப்பட்டவன் பாரதி என்பதைக் காட்டவில்லையா?

வங்காளத்தில் காளி பூஜையும், மேற்கே திலகர் துவக்கி வைத்த சிவாஜி திருநாளும் தமிழ் நாட்டிலும் பரவியது. இவை சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உத்வேகம் உண்டாக்கவே கொண்டாடப் பட்டன. ஆனால் 'வந்தேமாதரம்' என்ற கோஷம் எங்கே இந்த இயக்கத்தை ஓர் இந்து-தேசிய இயக்கமாகக் காட்டிவிடக் கூடுமோ என்று சிலர் பயந்தனர். சுதந்திரத்துக்குப் பிறகு நேருஜி வந்தேமாதரத்தைக் கைவிட்டு, நேதாஜியின் 'ஜெய் ஹிந்த்' கோஷத்தை முழங்கத் தொடங்கினர்.



✱ சிதம்பர ரகுநாதன்

முன்னால் சமூக சீர்திருத்தம் வேண்டுமா, அல்லது அரசியல் சீர்திருத்தம் வேண்டுமா என்ற சர்ச்சை கிளம்பியபோது, சமூக சீர்திருத்தம்தான் என்று மிதவாதிகளும், இல்லையில்லை, அரசியல் சீர்திருத்தம்தான் என்று தீவிரவாதிகளும் முழங்கினார்கள். ஆனால் தீவிரவாதியான திலகரின் சீடராக இருந்தும், சமூக சீர்திருத்தத்தை பாரதி வலியுறுத்தினான்.

ஷெல்லியில் ஆரம்பித்த ரகுநாதன், கடைசியில் ஷெல்லிக்கே வந்தார். ஷெல்லிதாசனான பாரதி, 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' ஆகிய பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாடுகளையே தமது 'இந்தியா' பத்திரிகையின் தலைப்பில் அச்சிட்டிருந்தார்.

'பாரதியை ஒரேயடியாக கம்யூனிஸ்ட் ஆக்கிவிட மாட்டார் என்று நம்புகிறேன்!' என முதல் நாள் நாரண துரைக்கண்ணன் கூறினார். ரகுநாதன் பாரதியை கம்யூனிஸ்ட் ஆக்கிவிடவில்லை என்றாலும் கம்யூனிஸ்ட்டின் நோக்கில் பாரதியை நாம் காணச் செய்தார்.

- சாருகேசி

படம்: உத்ரா

குழந்தைக் கவிஞருக்குக் குதூகல விழா

"ஜப்பானுக்குநான் போயிருந்தபோது குழந்தைகளுக்கான ஒரு நூலகத்துக்கு விஜயம் செய்தேன். அங்கே ஒரு பெரிய போர்டில் அங்குள்ள புத்தகங்களின் எண்ணிக்கை, அன்றாடம் வந்து போகின்ற குழந்தைகளின் எண்ணிக்கை போன்றவற்றை மட்டுமின்றி, குழந்தைகள் **கிழித்த** புத்தகங்களின் எண்ணிக்கையையும் பெருமிதத்தோடு எழுதிவைக்கின்றனர்!'' என்றார் அவ்வை நடராஜன். இந்த அளவுக்குக் குழந்தைகளை மனோ தத்துவ ரீதியாகப் புரிந்து வைத்திருக்கிற ஜப்பானியரை எண்ணியபோது அவையோருக்கு மெய்சிலிர்த்தது.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் மணி விழாவுக்குத் தலைமை ஏற்று சிறப்பாக நடத்தித் தந்த அமைச்சர் திரு வீரப்பன், ரிக்ஷா இழுப்போர் சார்பில் கடன் கேட்கத்தான் தாம் முதன் முதலாக வள்ளியப்பாவை இந்தியன் பாங்க் அதிகாரி என்ற முறையில் சந்தித்ததாகவும் பின்னர் அவர் இலக்கியப் பணியின் உயர்வைத் தாம் உணர்ந்ததாகவும் குறிப்பிட்டார். எந்த அளவுக்கு அமைச்சருக்கு வள்ளியப்பாவிடம் ஈடுபாடு ஏற்பட்டதெனில் அதனை வள்ளியப்பாவே ஏற்புரையில் கூறிய நிகழ்ச்சி விளக்கியது. வேறு ஒரு விழாவுக்கு வந்திருந்த வள்ளியப்பா அப்போதுதான் தமது சொந்த ஊரில் சாஸ்திரோக்தமாக சஷ்டியப்த பூர்த்தி கொண்டாடித் திரும்பி யிருந்தார். அவரை அங்கு கண்ட அமைச்சர், ஒருவரை அழைத்து ஏதோ கூறி அனுப்ப, சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பொன்னாடை வந்து சேர்ந்தது. அதை வள்ளியப்பாவுக்கு அணிவித்து மகிழ்ந்தார் வீரப்பன். சற்றும் எதிர்பாராத இந்தப் பாராட்டு வள்ளியப்பாவை மட்டுமின்றி அவையோர் அனைவரையுமே மகிழ்ச்சியில் திளைக்கச் செய்து விட்டது!

தாய் பத்திரிகை ஆசிரியர் வலம்புரி ஜான் தமிழ்க் கவிகள் மட்டுமின்றி உலக மகா கவிகள் எல்லாம் குழந்தைக் குலத்தைப் பற்றி என்னென்ன பாடினார்கள் என்று கோடி காட்டி, கடைசியில், 'எல்லாரும் குழந்தைகளைப் பற்றிப் பாடினார்கள், குழந்தைகளுக்காகவும் பாடினார்கள்; ஆனால் வள்ளியப்பா ஒருவர்தான் குழந்தைகளுக்காக மட்டுமே பாடினார், அதுவும் குழந்தையின் மனநிலையிலேயே வாழ்ந்து பாடி வருகிறார்'' என்றார்.

திருமதி சௌந்தரா கைலாசம் குழந்தை இலக்கியத்துக்கெனப் பல்கலைக் கழகத்தில் ஒரு தனித் துறை தொடங்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். அன்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு வி.சி. குழந்தைசாமி நூல் பதிப்புத் துறையிலும் வள்ளியப்பா ஆற்றிய பணிகளை நினைவூட்டினார். ''வெள்ளைக் காகிதத்தை வைத்து பாங்கிலே கடன் வாங்க முடியும். ஆனால் அதுவே அச்சாகி விட்டால் பாங்கின் நோக்கில் அது அடியோடு மதிப்பிழந்ததாகி விடுகிறது. கடன் கிடைக்காது!'' என்று புத்தகப் பிரசுரத் துறையின் சிரமங்களை உணர்ந்து பேசினார்.

கோகுலம் பத்திரிகையின் கௌரவ ஆசிரியராகப் பொறுப்பேற்க முன்வந்ததற்காக அவையோர் சார்பிலும், பல்லாயிரக் கணக்கான தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் சார்பிலும் நன்றி தெரிவித்தார் கல்கி ஆசிரியர், கி. ராஜேந்திரன்.

ஏற்புரையில் குழந்தைகள் புத்தக டிரஸ்ட் ஒன்று அமைக்கத் தமிழக அரசு முன்வர வேண்டும் என்ற முக்கியமான கருத்தை வெளியிட்டார் வள்ளியப்பா.

பழனியப்பா பிரதர்ஸ் பழனியப்ப செட்டியார் அவர்களும் வானதி திருநாவுக்கரசு அவர்களும் முன்னின்று நடத்திய இந்த விழாவுக்குத் தோன்றிய துணையாக நல்லாதரவு தந்தார் ஏ. வி. எம். சரவணன்.

பூவண்ணன் எழுதி வானதி பிரசுரித்த வள்ளியப்பாவின் வாழ்க்கை வரலாறு நூல் விழாவில் வெளியிடப்பெற்றது. அதில் விவரிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி: ஒரு விழாவில் வள்ளியப்பாவின் புத்தகம் ஒன்றை வெளியிட்ட ராஜாஜி ''இந்தப் புத்தகத்துக்கு ஒன்னேகால் ரூபாய் விலையா? குழந்தைகள் எப்படி வாங்குவார்கள்?'' என்றார். ''படங்களுடன் வெளியிடுவதெனில் செலவு அதிகமாகிறது'' என்றார் அருகிலிருந்த வள்ளியப்பா. ஆயினும் தமது ஆட்சேபணையை ராஜாஜி தமது பேச்சிலே வெளியிட்டுவிட்டார்! பின்னால் அவரே மீ. ப. சோமுவை அழைத்து, ''வள்ளியப்பா ரொம்ப நல்ல காரியங்கள் செய்து வருகிறார். நான் பேசியதில் அவர் மனம் புண்பட்டிருக்கலாம். வருந்த வேண்டாம் என்று சொல்லு'' என்று கூறி அனுப்பினார்! வள்ளியப்பாவின் மனம் நோகக் கூடாது என்பதில் அத்தனை கரிசனம் இருந்தது ராஜாஜிக்கு!

- குட்டி கிருஷ்ணன்

புகைப்படம்: கிருஷ்ணா போட்டோ ஸ்டுடியோ





கோயில்களில் யானை அவசியமா?

திருவல்லிக்கேணி கோயில் யானை அடம் பிடித்ததாகச் செய்தி வருவது இது முதல் முறையல்ல. கோயில் யானை திடீரென்று கட்டு மீறி நடந்து கொள்வது ஏன்? சென்னை பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு ராஜா கூறுகிறார்.



''என்னைப் பொறுத்தவரை, கோவில்களில் யானை தேவையில்லை என்றே கூறுவேன். பண்டைக் காலத்தில் மாமன்னர்களின் பெருமையை நிலைநாட்ட, கோவிலில் யானைவளர்க்கும் முறை தொடங்கப்பட்டது. அக்காலத்தில் யானை வலம் வரும் வீதி அகன்றதாக — சந்தடியற்று இருந்தது. இன்றைய நிலைமை இதற்கு நேர் மாறானது. அமைதி கெட்டுப் போனது யானைகளுக்குப் பிடிப்பதில்லை.

யானை இயற்கையோடு இயைந்து வாழ விரும்பும் மிருகம். எனினும் மனிதனுக்கு ஓரளவு கட்டுப்பட்டது. அதற்காக அதன் பொறுமையை நாம் மிகவும் சோதிக்கும் போது அது நமக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்குகிறது.

பன்னிரண்டு வயது முதற் கொண்டே யானைக்குப்பாலுணர்வு தோன்றத் தொடங்கி விடுகிறது. யானைகளுக்கு எப்போதும் பாலுணர்வு இருப்பதில்லை. 'ஹீட்ப்ரீயட்' எனப்படும் குறிப்பிட்ட சில மாதங்களில் மட்டுமே அதற்குப் பாலுணர்வு வேட்கை எழும். இந்த உணர்வு பூர்த்தி செய்யப்படாதபோது அவை தம் இஷ்டம் போல் நடந்து கொள்ளத்தொடங்குகின்றன.

யானையைப் பயன்படுத்தி எவ்வளவு சம்பாதிக்கலாம் என்பதிலேயே யானைப் பாகன் கண்ணும் கருத்துமாக இருக்கிறான். மனிதர்களைக் கண்டால் துதிக்கையால் தொடுவது, மண்டியிடுவது போன்ற காரியங்களில் யானையைப் பழக்கும் பாகன் அதை அவ்வாறு பழக்குவதற்குச் சித்திரவதையையே அடிப்படையாகக் கையாளுகிறான். அதை அடித்துத் துன்புறுத்தி, இரும்புக் கழியால் குத்தி, பலவிதமாக அதை மிரட்டி, தன் சொற்களுக்கும், சைகைகளுக்கும் அடிமையாக்குகிறான் பாகன். பாகனின் கொடுமைகளாலும் யானைகள் தறிகெட்டுப்போகும்.



கோவில்களின் மிருதங்க ஓசை, மணி ஓசை போன்ற ஓசைகளாலும் யானைகள் தன்னிலை இழப்பதுண்டு.

கிளைகளைத் துதிக்கையால் ஒடித்து, தேங்காயைக் காலால் உடைத்து, கரும்பைப் பிடுங்கித் தின்னவே விரும்பும். இவ்வாறு இயற்கையாக உண்ணும்போதுதான் யானை உணவு உண்டதில் ஒரு திருப்தியை அடைகிறது. ஆனால் கோவில்களில் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்க, பாகன் கொண்டு வந்து தரும் ஒன்றிரண்டு தென்னை ஓலைகளை வேறு வழியின்றி, பசியின் காரணமாக வெறுப்போடு உண்கிற நிலைமை ஏற்படும்போது யானை அதிருப்தி அடைவதுண்டு.

சங்கிலியால் தூணோடு பிணைக்கப்படுவதும் யானையின் பொறுமையைச் சோதிக்கிறது. இக்கட்டுப்பாடு யானையின் மனநிலையைப் பாதிக்கிறது. யானையின் தோல் உண்மையிலேயே மிகக் கடினமான தோல். அந்தத் தோலை உரித்து சீழ் வரும் அளவுக்குச் சங்கிலிகள் யானையின் கால்களை இறுக்கும் போது அது கோபம் கொள்வது இயற்கை!

யானைக்குக் குளிப்பது என்பது ஒரு சுகமான பொழுது போக்கு. துதிக்கையால் தண்ணீரை உறிஞ்சி, தலை நிறையத் தூவிக் குளிக்கும்போது இயற்கையான நிம்மதியையும் சந்தோஷத்தையும் பெறுகிறது. கோவில் யானைகளுக்கு இத்தகைய வாய்ப்பு பெரும்பாலும் கிடைப்பதில்லை. எனவே அவை ஆத்திரம் கொள்கின்றன.


கோவில் யானைகளைப் பராமரிப்பது கடினமாக இருந்தால் அந்த யானைகளைக் காட்டிலாகாவிடம் ஒப்படைக்க ஏற்பாடுஉள்ளது. அஹிம்சையும், அற உணர்வும் தழைக்கவேண்டிய கோவில்களில் யானைகள் துன்புறுத்தப்படலாமா என்ற கேள்விக்குப் பக்தர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.''

பேட்டி: ராஜ்குமார்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani Editor: K. Rajendran

ஜலதோஷம் உங்கள் நாளையே கெடுக்க அனுமதிக்காதீர்கள்



ஜலதோஷத்தைப் போக்கலாம்

நல்ல ஒரு நாளையே கெடுக்கும் மூக்கு ஒழுகுதல் அல்லது மூக்கடைப்பு, தலைகனம், தொண்டைக்கட்டு மற்றும் மார்சளி போன்றவற்றுடன் உள்ள ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் பெற ஒரு வழி இருக்கிறது.

ஜலதோஷ மருந்து கொண்டு தாக்கிடுங்கள்

மற்ற உபாதைகளைப் போன்றே இதற்கும் சிகிச்சையளித்தால் போதாது. பாதிக்கப்பட்ட பாகங்களிலெல்லாம் ஒரே சமயத்தில் செயல் புரியவல்ல விசேட ஜலதோஷ மருந்தையே உபயோகியுங்கள்.

கோல்டரின் ஜலதோஷத்திற்கு மட்டுமே

உங்கள் சுறுசுறுப்பைக் கெடுக்கும் அறிகுறிகள் அனைத்தையும் போக்குகிறது —கோல்டரின். இதிலுள்ள விசேட மருந்துப் பொருட்கள் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா பாகங்களிலும் ஒருங்கிணைந்து செயல்புரிகின்றன.



ஜலதோஷத்தினால் பாதிக்கப்படும்போது ஜலதோஷ மருந்தையே சாப்பிடுங்கள்.

கோல்டரின்

விசேட ஜலதோஷ மருந்து

CASBC-105-213 TAM

REGISTERED No. M. [illegible]
Registered as a Newspaper in Sri Lanka

நியூட்ரமுல் சக்தி.

சேம்பியன்கள் தேர்ந்தெடுக்கும் சக்தி.

நியூட்ரமுல். அமுல் பால்வளம். அருமையான மால்ட்.
ஆரோக்கிய வைட்டமின்கள். ஆர்வமிகு புரதம்.
ஆதார உலோகதாதுக்கள். சப்புக் கொட்டிட சாக்கலேட்...
இவ்வளவுக்கும் விலை மலிவு—போர்ன்விடா, பூஸ்ட்,
மால்டோவா எதனையும் விட. மறவாதீர்கள் ஐஎஸ்ஐ தர
முத்திரை தாங்கியது நியூட்ரமுல் ஒன்றுதான்.
விளங்குவீர் நியூட்ரமுல் 'வஸ்தாத்'தாக.



உயரம், வலிமை, உடல்திடம்--
பெருக்குவது எப்படி ?

தாராசிங்கின் சஞ்சிகை: பலம்பெருக்கப் புத்தகம்!

NUTRAMUL P.O. BOX 10148, BOMBAY-400 001. kk

அன்புள்ள நியூட்ரமுல்,
தாராசிங்கின் "ஹைட் இன்க்ரீஸ், ஸ்ட்ரெங்த் அண்ட் பிட்னஸ்" புத்தகத்தை தயவுசெய்து எனக்கு அனுப்பிவைக்கவும். ரூ. 1.50 மதிப்புள்ள தபால் வில்லைகளோடு, நியூட்ரமுல் 500 கிராம் டின் வாங்கியதற்கான ரொக்க ரசீதையும் இத்துடன் இணைத்துள்ளேன். ஆக்குகள் இருப்பிலுள்ள வரையே சலுகை என அறிகிறேன்.

பெயர் ____________________
(கொட்டை எழுத்துக்களில்)

முகவரி ____________________

விற்பனையாளர் விநியோகஸ்தர்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட. லிட்.,
ஆனந்த்-388 001.

daCunha/GCM/76/TM/d2